மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ்

அறிவித்த அறிவிப்புகளின் தொகுப்பு

(19.06.2017 முதல் 20.07.2019 வரை)

மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி **K. பழனிசாமி** அவர்கள்

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ்

# அறிவித்த அறிவிப்புகளின் தொகுப்பு

# (19.06.2017 முதல் 20.07.2019 வரை)

சிறப்பு வெளியீடு எண். 38

# தமிழரசு

இலவச வெளியீடு

பிப்ரவரி 2020

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

## பொருளடக்கம்


| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 1 |
| 2. | சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை | 5 |
| 3. | உயர்கல்வித்துறை | 7 |
| 4. | பள்ளிக் கல்வித் துறை | 10 |
| 5. | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 13 |
| 6. | மாற்றுத்திறனாளிகள் நலத்துறை | 17 |
| 7. | தமிழ்நாடு மின்வாரியம் | 19 |
| 8. | தொழில் துறை | 22 |
| 9. | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் | 25 |
| 10. | சமூக நலத்துறை | 28 |
| 11. | நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை | 29 |
| 12. | ஊரக வளர்ச்சித் துறை | 31 |
| 13. | கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை | 34 |

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|


14. மக்கள் நல்வாழ்வுத் துறை ........................................ 35

15. வீட்டு வசதித்துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் நகர்ப்புற ஊரமைப்புத் துறை ..... 38

16. சட்டத் துறை ........................................ 41

17. வேளாண்மைத் துறை ........................................ 42

18. வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை (ம) பேரிடர் தணிக்கும் துறை ........................................ 46

19. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை........................................ 49

20. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை .................. 54

21. தகவல் தொழில்நுட்பத் துறை........................................ 55

22. ஆதிதிராவிடர் நலத்துறை........................................ 58

23. வனத்துறை ........................................ 59

24. தொழிலாளர் நலத்துறை ........................................ 60

25. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை ........ 63

26. தமிழ் வளர்ச்சி (ம) செய்தி மக்கள் தொடர்புத் துறை..... 65

27. இந்து சமய அறநிலையத் துறை ........................................67

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|


28. போக்குவரத்துத் துறை ........ 69

29. தமிழ் வளர்ச்சி (ம) செய்தி மக்கள் தொடர்புத் துறை...... 72

30. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை........ 76

31. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை........ 77

32. பள்ளிக் கல்வித்துறை ........ 79

33. உயர்கல்வித் துறை ........ 81

34. தகவல் தொழில்நுட்பவியல் துறை ........ 82

35. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை........ 84

36. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை........ 87

37. வேளாண்மைத்துறை........ 93

38. எரிசக்தித் துறை........ 101

39. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ........ 104

40. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை.... 107

41. தொழில் துறை ........ 109

42. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ........ 111

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|


43. உள், நீதி நிருவாகம் மற்றும் சிறைத் துறை ......................114

44. சிறைத் துறை ......................116

45. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை......................117

46. மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ......................119

47. வேளாண்மைத் துறை ......................121

48. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை ......................125

49. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை......................129

50. தமிழ் வளர்ச்சித் துறை ......................133

51. இந்து சமய அறநிலையத் துறை ......................136

52. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை......................137

53. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை......................139

54. செய்தி–மக்கள் தொடர்புத் துறை......................140

55. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை......................142

56. வணிகவரி மற்றும் பதிவுத் துறை......................143

57. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ......................144

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 58. | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 146 |
| 59. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | 148 |
| 60. | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை | 149 |
| 61. | பொதுப்பணித்துறை | 152 |
| 62. | உள் (போக்குவரத்து) துறை | 153 |
| 63. | வேளாண்மைத் துறை | 154 |
| 64. | கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத் துறை | 156 |
| 65. | செய்தி–மக்கள் தொடர்புத் துறை | 159 |
| 66. | வேளாண்மைத் துறை | 165 |
| 67. | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 168 |
| 68. | கூட்டுறவுத் துறை | 170 |
| 69. | வனத்துறை | 172 |
| 70. | சுற்றுச்சூழல் துறை | 175 |
| 71. | பள்ளிக் கல்வித் துறை | 176 |
| 72. | உயர்கல்வித் துறை | 179 |
| 73. | எரிசக்தித் துறை | 181 |

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|


74. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ........ 184

75. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ........ 186

76. மீன்வளத்துறை ........ 187

77. கால்நடை பராமரிப்புத் துறை ........ 190

78. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ........ 193

79. நீதிமன்றங்கள் ........ 196

80. சட்டத் துறை ........ 197

81. பதிவுத் துறை ........ 198

82. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ........ 199

83. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ........ 201

84. மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ........ 204

85. தொழில் துறை ........ 206

86. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை ........ 209

87. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ........ 210

88. தகவல் தொழில்நுட்பவியல் துறை ........ 212

89. கைத்தறி மற்றும் துணிநூல் துறை ........ 214

90. வேளாண்மைத் துறை ........ 216

| வ. எண் | அறிவிப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|


91. இந்து சமய அறநிலையத் துறை ....................221

92. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை....................222

93. போக்குவரத்துத் துறை ....................225

94. பால்வளத் துறை ....................226

95. நகராட்சி நிருவாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை....................228

96. வேளாண்மைத் துறை ....................229

97. வருவாய்த் துறை....................230

98. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ........233

99. பொதுப்பணித் துறை ....................235

100. கூட்டுறவுத் துறை....................241

101. கால்நடை பராமரிப்புத் துறை....................242

102. செய்தி—மக்கள் தொடர்புத் துறை....................243

103. தமிழ் வளர்ச்சித் துறை ....................244

104. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ....................246


✵ ✵ ✵

152

# கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## 19.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பு அளிப்பது நமது பொது விநியோகத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். நாடு முழுவதும் செயல்படும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை நாம் பின்பற்றினாலும், வருமான அடிப்படையினைக் கருத்தில் கொள்ளாமல், பாகுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பொதுவானதாக, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் தனிச் சிறப்பாக கருதப்படுகின்றது. இப்படிப்பட்ட புரட்சிகரமான முன்னோடித் திட்டங்களைத்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு மக்களின் நலன் கருதி செயல்படுத்தினார்கள்.

இச்சிறப்புமிக்க நமது பொது விநியோகத் திட்டத்திற்கு நம் கூட்டுறவு சங்கங்களே பக்கபலமாக இருக்கின்றன. தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படும் இச்சங்கங்கள் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படியே கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலம் சிறப்பான திட்டங்களைத் தீட்டி, அதை மக்களின் நலனுக்காக செயல்படுத்துகிறது. அதன் அடிப்படையில், கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**1.** தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தை முழு கணினிமயமாக்கலின் ஒரு பகுதியாக, அனைத்து நியாய விலைக் கடைகளிலும் விற்பனை இயந்திரம் வழங்கப்பட்டு, அதன் மூலம் குடும்ப அட்டைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடும்ப அட்டைதாரர் கோரும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விவரம் மேற்படி இயந்திரத்தில் பதிவு செய்தவுடன், குடும்ப அட்டைதாரரால் பதிவு செய்யப்பட்டுள்ள கைபேசி எண்ணிற்கு, அவர் பெற்ற பொருட்கள் விவரம் குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களுக்கான பட்டியல் (Bill) தற்போது வழங்கப்படுவதில்லை. இதை சரி செய்யும் விதமாகவும், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் பயோமெட்ரிக் முறையில் வழங்கப்பட வேண்டுமென்பதாலும், தமிழகத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரல்ரேகை படிப்பி (Finger Print Reader) மற்றும் அச்சுப்பொறி வழங்கப்படும்.

**2.** நமது நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, வணிக வங்கிகளுக்கு இணையாக, விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் வழங்கும் சேவையை மேம்படுத்தவும், கிராமப்புறங்களில் பொதுமக்களுக்கு நவீன வங்கி சேவையினையும் வழங்க 'நபார்டு வங்கி' நிதியுதவியுடன், தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அனைத்தும் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்டு, மைய வங்கியில் கணினி சேவை முறை (CORE Banking Solution) 134.67 கோடி ரூபாய் செலவில், மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**3.** கூட்டுறவு நிறுவனங்களில், சொந்த அடிமனை இருந்தும், வாடகைக் கட்டடங்களில் செயல்படும் அனைத்து சங்கங்களுக்கும்

சொந்தக் கட்டடங்கள் கட்டப்படவேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையை செயல்படுத்திட, இந்த ஆண்டில் 114 கூட்டுறவு நிறுவனங்களுக்கு 23 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். மேலும், மதுரை மாவட்டம், விரகனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் 70 இலட்சம் ரூபாய் செலவில், வணிக வளாகம் கட்டப்படும். வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே சேவை அளிக்கும் பொருட்டு, திருச்சி மற்றும் தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 15 புதிய கிளைகள் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்படும். கூட்டுறவு நிறுவனங்களின் தோற்றப் பொலிவினை அழகுபடுத்தும் பொருட்டும், வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை பெறவும், வணிக வங்கிகளுக்கு ஈடாக கூட்டுறவு சங்கங்களின் சேவையை வழங்க 27 கூட்டுறவு நிறுவனங்கள் 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்படும்.

4. சிறு வணிகர்கள், தனியாரிடமிருந்து அதிக வட்டியில் கடன் பெறுவதை தவிர்த்து, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் சிறு வணிகக் கடன் உச்ச வரம்பினை 10,000/– ரூபாயிலிருந்து 25,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சென்னையில் அண்ணாநகர், நந்தனம், திருவான்மியூர், தங்கசாலை மற்றும் கோபாலபுரம் ஆகிய 5 இடங்களில் கிடங்கு வளாகங்கள் உள்ளன. அவற்றில் 86,068 மெட்ரிக் டன் உணவுப் பொருட்கள் இருப்பு வைத்து கையாளப்படுகிறது. இதிலிருந்து சென்னை மாநகரை சுற்றிலும் 30 கிலோ மீட்டர் சுற்றளவில், பொது விநியோகத் திட்டத்திற்கான பொருட்கள் நகர்வு செய்யப்படுகின்றன. உணவு தானிய சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவினை மேலும் அதிகரிக்க

வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, சென்னை பெருநகரை ஒட்டியுள்ள மாதவரம் பகுதியில் 12,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விஞ்ஞான முறையிலான, இயந்திர கையாளுமைத் திறனுடன் கூடிய நவீன சேமிப்புக் கிடங்கு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த நிதியாண்டில் கட்டப்படும்.

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 9.82 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சொந்தக் கிடங்குகளும், பிற நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து வாடகை அடிப்படையில் 2.27 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கிடங்குகளும் சேர்த்து 288 கிடங்குகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. இக்கிடங்குகளின் சேமிப்புக் கொள்ளளவு தற்போதைய தேவைக்கு போதுமானதாக இல்லை என்பதால், இவற்றின் கொள்ளளவினை அதிகப்படுத்திடும் வகையில், முதற்கட்டமாக 9 மாவட்டங்களில் 14 சொந்த இடங்களில், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 30,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 'சூரிய ஒளி கூரை' கொண்ட சேமிப்பு கிடங்குகள் கட்டப்படும்.

7. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் 25 கிடங்கு வளாகங்களுக்கு உட்புற சாலை வசதி, சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குடிநீர் வசதி, ஓய்வு அறை மற்றும் அடிப்படை வசதிகள் நபார்டு வங்கி நிதியுதவியுடன் 25 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 40 வருட தொடர் பயன்பாட்டில் இருந்து வரும் பழைய 15 சேமிப்பு கிடங்கு வளாகங்களில் அடிப்படை பராமரிப்பு பணிகளும், அங்கு பணிபுரியும் சுமைதூக்கும் பணியாளர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களின் நலன் சார்ந்த பணிகளும் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## 19.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வனவளம், வன உயிரின வளம் பெருக சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. வனவளத்தையும், வன உயிரினங்களையும், பொதுமக்களையும் பாதுகாக்கும் மகத்தான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள வனப் பணியாளர்கள், பணியில் ஈடுபட்டிருக்கும்போது, வன உயிரினத் தாக்குதலால் உயிரிழக்கும் துயர நேர்வுகளிலும், வனக் குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுடனான மோதல்களில் உயிரிழக்க நேரிடும் நேர்வுகளிலும், வீர தீர செயல் மற்றும் எதிர்பாராத அசம்பாவித சூழ்நிலை போன்ற நேர்வுகளிலும், காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற இழப்பீட்டுத் தொகைக்கு இணையாக, வனப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையை 4 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. கடந்த 2013 முதல் 2015 வரையிலான காலத்திய இந்திய வன அளவை நிறுவனத்தின் வன அறிக்கையின்படி, நாட்டிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும், வனம் மற்றும் மரங்கள் அடர்ந்த பரப்பளவு தமிழகத்தில் மிக அதிக அளவில் அதிகரித்துள்ளது.

தமிழகத்தினுடைய வனவளத்தை மேலும் பாதுகாக்கவும், அவ்வுணர்வினை அனைவரிடமும் வளர்க்கவும், வனப்பகுதியில் வாழ்ந்து வருகின்ற மலைவாழ் மக்களுடைய இயற்கைச் சார்ந்த வாழ்க்கை முறையினை தற்கால சந்ததியினருக்கு, குறிப்பாக, மாணாக்கர்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையிலும், உள்ளூர் மக்களை இயற்கைச் சுற்றுலா திட்டத்தில் முழுமையாக பங்கேற்கச் செய்து அவர்களது வேலைவாய்ப்பைப் பெருக்குவதுடன், சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்யும் வகையிலும் 'தமிழ்நாடு சூழல்சார் சுற்றுலாக் கொள்கை, 2017' உருவாக்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

**3.** பவானி ஆறு, நீலகிரி மலையில் உற்பத்தியாகி காவிரி ஆற்றில் கலக்கிறது. இந்த ஆற்றின் நீர் 90 சதவீதம் கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களின் பாசனத்திற்கு பயன்படுகின்றது. மேலும், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் பவானி ஆறு விளங்குகிறது. பவானி ஆற்றின் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வடிகால் கழிவுநீர் வெளியேற்றத்தால் ஆற்று நீரில் ஏற்படும் தாக்கத்தை கண்காணிக்கும் வண்ணம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தற்போது மாதம் ஒருமுறை நீர் மாதிரி எடுத்து ஆய்வு செய்கின்றது. ஆற்று நீரின் தன்மையை தொடர்ச்சியாக 24 மணி நேரமும் கண்காணிக்கும் நோக்கத்துடன் நடப்பு நிதியாண்டில், பவானி ஆற்றில் 2 இடங்களில் இணைய வழி தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்நிலையங்கள் தலைமை அலுவலகம் மற்றும் உரிய மாவட்ட அலுவலகங்களுடன் இணைய வழியாக இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

✲ ✲ ✲

# உயர்கல்வித் துறை

## 19.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிக் கல்வித் துறைக்கு அளித்து வரும் அதே அளவு முக்கியத்துவத்தை உயர்கல்விக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அளித்து வந்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால், கடந்த 6 ஆண்டுகளில் 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 16 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் என 65 புதிய கல்லூரிகளும், ஸ்ரீரங்கத்தில் இந்திய தகவல் தொழில்நுட்ப பயிலகம் மற்றும் தேசிய சட்டப்பள்ளி ஆகியவை துவக்கப்பட்டுள்ளன. எனவேதான் உயர்கல்வியில் தேசிய மாணவர் சேர்க்கை விகிதம் 24.5 என இருந்தாலும், தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை விகிதம் 44.3 ஆக உள்ளது. இதனால், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

உயர் கல்வித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கல்வியின் தரத்தினையும், மாணாக்கர்களின் அறிவுத் திறனையும் உயர்த்தும் பொருட்டு, கடந்த ஆறு ஆண்டுகளில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 961 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் 2011–2012ஆம்

கல்வியாண்டில் 7,17,442ஆக இருந்த மாணாக்கர்கள் எண்ணிக்கை 2016–2017ஆம் கல்வியாண்டில், 9,85,974ஆக உயர்ந்துள்ளது. இவ்வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில், 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், கழிப்பறைகள், ஆசிரியர் ஓய்வறைகள், மாநாட்டு அறைகள், கூட்டரங்கங்கள், கூடுதல் அறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 210 கோடி ரூபாய் செலவில், இரண்டாண்டுகளில் ஏற்படுத்தப்படும். இந்த 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டப்படும் கட்டடங்கள், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் **“புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கட்டடங்கள்”** என்ற பெயரில் அழைக்கப்படும்.

இதற்கென, முதற்கட்டமாக, இந்த ஆண்டு 105 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள 105 கோடி ரூபாய் அடுத்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படும்.

2. மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அரசு கலை மற்றும் அறிவியல், கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மாணவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து உயர்கல்வி கற்பதைத் தவிர்க்கும் பொருட்டும், குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி பெறுவதற்கும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 7 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 3 புதிய பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 2017–2018ஆம் கல்வியாண்டில் துவங்கப்படும்.

இதற்காக அரசுக்கு 100 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

**3.** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மிகக் குறைந்த கட்டணத்தில் மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இம்மாணாக்கர்கள், வேலைவாய்ப்பினை பெறுவதற்குத் தேவைப்படும் புதிய பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகிறது. மாநிலத்தில் பின்தங்கிய பகுதியை சேர்ந்த மாணாக்கர்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மாணாக்கர்கள் மற்றும் அதிகளவில் மாணவிகள், உயர்கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2017–2018ஆம் கல்வியாண்டிலிருந்து 268 புதிய பாடப்பிரிவுகள் (60 இளங்கலை, 75 முதுகலை, 133 ஆராய்ச்சி) அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இப்பாடப்பிரிவுகளை கையாள 660 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

இதற்காக அரசிற்கு ஆண்டிற்கு 40 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

✵ ✵ ✵

# பள்ளிக் கல்வித் துறை

## 19.06.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமுதாயத்தின் விளிம்பில் உள்ள ஏழை எளிய மக்கள், பொருளாதார வளர்ச்சி பெற்று ஏனையோருக்கு இணையாக உயர்வடைய வேண்டும் என்றால், அவர்கள் கல்வி வளர்ச்சி பெற வேண்டும். மாநிலம் முழுவதும் சிறந்த கல்வி அளிக்கப்பட்டால் தான் பொருளாதார வளர்ச்சி, அடித்தட்டு மக்களுக்கும் சென்றடையும். எனவேதான், கல்விக்கும் அதன் வளர்ச்சிக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்தார்கள்.

கடந்த ஆறு ஆண்டுகளில், மாணவ, மாணவியருக்கு 4 இணைச் சீருடை, விலையில்லா பாட நூல்கள், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா புத்தகப்பை, விலையில்லா கணித உபகரணப் பெட்டிகள், கிரையான்ஸ், நில வரைபட புத்தகம் ஆகிய கல்வி உபகரணங்கள், ஓர் இணைக் காலணிகள், விலையில்லா மிதிவண்டிகள், கட்டணமில்லாப் பேருந்து பயணச் சலுகை, சத்தான மதிய உணவு போன்ற பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வந்தார்கள்.

மேலும், மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மொத்தம் 5,000 ரூபாய் கல்வி உதவித்தொகை போன்ற உன்னதத்

திட்டங்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டது.

பள்ளிக் கல்வித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. வளர்ந்து வரும் தொழில்நுட்பச் சவால்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில், அரசுப் பள்ளி மாணாக்கர்கள் போதிய கணினித் திறன்களை அடையும் வகையில், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் கணினித் ஆய்வகங்கள் (Hi-tech Labs) ஏற்படுத்தப்படும். இதன்படி, 3,090 உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா 10 கணினிகளும், 2,939 மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா 20 கணினிகளும், அதனுடன் தொடர்புடைய இதர சாதனங்களும் வழங்கப்படும். இதற்கென அரசுக்கு 437 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2. அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் கிராமப்புற மாணவர்களுக்கு கணினி மூலமாக பாடங்களை பயிற்றுவிக்கும் வகையில் முதற்கட்டமாக, 3,000 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ஓர் ‘அறிவுத் திறன் வகுப்பறை’, அதாவது (Smart Class Room) ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு பள்ளிக்கும் 2 இலட்சம் ரூபாய் வீதம், 60 கோடி ரூபாய் இதற்கென செலவிடப்படும்.

3. பள்ளிக் கல்வி இயக்ககம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக டி.பி.ஐ. வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாகும். இதனால், இதனை பராமரிப்பது கடினமாகவும், மிகுந்த செலவினம் கொண்டதாகவும் உள்ளது. அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து அலுவலர்களும், பணியாளர்களும் அதிக

அளவு இங்கு வந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், இந்த இயக்ககத்தில் இயங்கும் பல்வேறு பிரிவுகளுக்காக கூடுதல் இடவசதி தேவைப்படுகிறது. இதற்காக, ஒரு இலட்சம் சதுர அடியில் 33 கோடி ரூபாய் செலவில், பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும். இந்த கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் **“புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கட்டடம்”** என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாணாக்கர்களுக்கும் தரமான கல்வியை அளிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் சிறப்பான சூழ்நிலையில் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தேவைப்படும் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், அறிவியல் உபகரணங்கள், கலை மற்றும் கைவினை அறைகள், கணினி அறைகள், நூலகம், கழிவறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 39 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## 19.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளைஞர்கள் நாட்டின் செல்வம். விளையாட்டு, ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம், நேர்மையாக செயல்படும் பக்குவம் ஆகியவற்றைக் கற்றுத் தருவதுடன், வெற்றி, தோல்வியை சமமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய மனத் திண்மையையும் அளித்து சிறந்த பண்புகளுடன் கூடிய மனிதனாக உருவாக்க உதவுகின்றன. எனவேதான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு அளித்த அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை குறித்த கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டப்பட்டு 42 ஆண்டுகள் ஆகிவிட்டதால், இந்த வளாகத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடங்கள் மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்புகளை இடித்துவிட்டு அதே இடத்தில், நவீன தரத்துடன் கூடிய புதிய விளையாட்டு வளாகம் ஒன்று 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். இவ்வளாகம் பார்வையாளர் மாடம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நல அலுவலர் அறை, நிருவாக அறை,

பயிற்சியாளர் அறை, வீரர்கள் உடை மாற்றும் அறை, கழிவறைகள், சேமிப்பு அறை முதலான வசதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

2. திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் 5 கோடி ரூபாய் செலவில், நீச்சல் பந்தய குளம், பயிற்சி நீச்சல் குளம், உடற்பயிற்சிக் கூடம், உடை மாற்றும் அறைகள், கழிவறைகள், அலுவலகம் மற்றும் பயிற்சியாளர்கள் அறையுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த நீச்சல் குள வளாகம் அமைக்கப்படும்.

3. ‘கெனாயிங்’ (Canoeing) மற்றும் ‘கயாக்கிங்’ (Kayaking) எனும் நீர் விளையாட்டு உலகம் முழுவதும் பிரபலம் அடைந்துள்ளது. தற்கால ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளில் இவ்விளையாட்டு நடத்தப்பட்டு வருகிறது. சர்வதேச ‘ரெகெட்டா’ (Regatta) எனப்படும் மிகப்பெரிய அளவிலான படகுப் போட்டிகளை நடத்தும் மையமாக சென்னை திகழ்கிறது. எனவே, காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகம் அருகில், ‘கெனாயிங்’ (Canoeing) மற்றும் ‘கயாக்கிங்’ (Kayaking) விளையாட்டுகளுக்கு, முதன்மை நிலை விளையாட்டு மையம் ஒன்று 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## 24.06.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியை சேர்ந்த 18 வயது இளைஞரான திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான ஆறு மாணவர்கள் கொண்ட குழு உருவாக்கிய 64 கிராம் எடை கொண்ட மிகச் சிறிய செயற்கைக்கோள் சமீபத்தில், அமெரிக்காவில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான "நாசா" நடத்திய போட்டியில் கலந்து கொண்டு, உலகத்தின் 57 நாடுகளிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 80,000 மாதிரிகளில் முதல் பரிசு பெற்றது. இந்த செயற்கைக்கோள் கடந்த 22.6.2017 அன்று விண்ணில் "கலாம் சாட்" என்ற பெயரில் "நாசா" ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது. முப்பரிமாண அச்சுத் தொழில்நுட்பத்தில் (3D) உருவாக்கப்பட்ட இந்த செயற்கைக்கோள் வானிலை, வான்வெளியில் உள்ள கதிர்வீச்சு, வெப்பம் ஆகியவற்றை ஆராயும் திறன் கொண்டது.

சென்னையிலிருந்து செயல்படும் "ஸ்பேஸ்கிட்ஸ்" என்ற அமைப்பு இந்த மாணவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து உதவியது. இந்த சாதனையினை நிகழ்த்திய மாணவர்கள் ரிஃபாத் சாருக், யக்னா சாய், வினய் பரத்வாஜ், தனிஷ்க் திவேதி, கோபிநாத் மற்றும் முகம்மது அப்துல் காசிப் ஆகியோருக்கும், குறிப்பாக, அந்தக் குழுவின் தலைமை விஞ்ஞானியாக செயல்பட்ட திரு. ரிஃபாத் சாருக்கிற்கும் இம்மாமன்றத்தின் சார்பிலும்,

தமிழ்நாடு அரசின் சார்பிலும், எனது தனிப்பட்ட முறையிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சாதனையை படைத்து, இந்தியாவிற்கு, குறிப்பாக, தமிழகத்திற்கு பெருமைத் தேடித் தந்த மாணவர் திரு.ரிஃபாத் சாருக் தலைமையிலான மாணவர் குழுவினை மேலும் இதுபோன்ற பல சாதனைகளை செய்ய ஊக்கப்படுத்தும் விதமாக, தமிழக அரசின் சார்பில் **10** இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

## 29.06.2017

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி வந்த 3 சதவீத இடஒதுக்கீட்டினை, 4 சதவீதமாக தமிழ்நாடு அரசு பணிகளிலும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது. இந்த 4 சதவீத இட ஒதுக்கீடானது அனைத்து அரசுப் பணியிடங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், அரசு உள்ளாட்சி அமைப்புகள், அரசின் நிதி உதவி பெறும் அமைப்புகள் ஆகியவற்றிற்குப் பொருந்தும். மாற்றுத் திறனாளிகளுக்கு மேலும் பயனளிக்கக் கூடிய வகையில், பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கை, கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு முடநீக்கியல் சாதனங்கள், ஊன்று கோல்கள் மற்றும் செயற்கை அவயங்கள் வழங்கப்பட்டு அவர்களுடைய சுதந்திரமான நடமாட்டத்திற்கு ஏதுவாக, பல்வேறு வகையான மறுவாழ்வு பணிகள் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்கள் பாதிக்கப்பட்ட மூன்று வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு நடக்க உதவும் நடைபயிற்சி உபகரணங்கள் (Rolator/Walker) நடப்பாண்டில் 1,000 குழந்தைகளுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

2. மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம் 2016இல், மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்திடும் வகையில், அனைத்து அரசு பொதுக் கட்டடங்களிலும் மின்தூக்கிகள், சாய்வு தள பாதை, கழிவறை வசதிகள் மற்றும் செவித்திறன் குறையுடையோர் எளிதில் அறியும் வண்ணம் குறியீடுகளும், பார்வையற்றோர் அறிந்துகொள்ளும் வண்ணம் பிரெய்ல் எழுத்துக்கள் மூலமும் தகவல் பலகைகளும் அமைத்தல் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய வசதிகளை ஏற்படுத்திட, நிபுணத்துவம் வாய்ந்த தொழில் நுட்ப வல்லுநர் / பணியாளர்கள் அடங்கிய தணிக்கைக் குழு நடப்பாண்டில் அமைக்கப்படும். இக்குழு தன்னுடைய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம், மாநிலம் முழுவதும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற தடையற்ற சூழலை முழுமையாகவும் விரைவாகவும் ஏற்படுத்திட இயலும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாடு மின்வாரியம்

## 29.06.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தடையற்ற மின்சாரம் என்பது வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். கடந்த 6 ஆண்டுகளில் பல்வேறு மின்திட்டப் பணிகள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் விரைந்து முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கைகளினால் தமிழ்நாடு தற்போது மின் மிகை மாநிலமாக திகழ்கிறது. அனைவரும் தரமான மின்சாரம் பெறும் வகையில், துணை மின் நிலையங்கள், மின் பாதைகள், மின் மாற்றிகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. 2008ஆம் ஆண்டு அமலில் இருந்த மின்கட்டுப்பாட்டு முறைகள், மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அயராத முயற்சியினால், 05.06.2015 முதல் முழுவதுமாக நீக்கப்பட்டு, அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் தற்போது 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. 2016ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலின் போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதியின்படி, அனைத்து வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கும், தற்போது நடைமுறையில் உள்ள கணக்கீட்டின்படி, 100 யூனிட் வரையிலான மின்சாரம் கட்டணம் இன்றி வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் மின்வாரியத்தால் மேற்கொள்ளப்பட உள்ள புதிய மின் திட்டங்கள் பற்றி இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. நாகை மாவட்டம், மணல்மேடு பகுதியில் 650 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் அதனோடு சேர்ந்த மின் பாதைகளும் அமைக்கப்படும்.

2. சென்னை மாநகரிலுள்ள கோயம்பேட்டில் 1,300 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய 400 கிலோ வோல்ட் எரிவாயு காப்பிடப்பட்ட (GIS) துணை மின் நிலையம் மற்றும் அதனோடு சேர்ந்த மின் பாதைகளும் அமைக்கப்படும்.

3. தற்போது 230 கிலோ வோல்ட்டாக இருக்கின்ற தரமணி துணை மின் நிலையம் 710 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 400 கிலோ வோல்ட் எரிவாயு காப்பிடப்பட்ட (GIS) துணை மின் நிலையமாக தரம் உயர்த்தப்படும் .

4. இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில், நரிப்பையூர் மற்றும் அதன் அருகிலுள்ள கிராமங்களை உள்ளடக்கி 500 மெகாவாட் மிக உய்ய சூரியசக்தி மின்னழுத்த பூங்கா (Ultra Mega Solar Photovoltaic Power Park) 2,350 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் பொறியியல்–கொள்முதல்–கட்டுமானம் (EPC) அடிப்படையில் அமைக்கப்பட்டு இயக்கப்படும்.

5. சென்னை பெருநகரின் மின்கட்டமைப்பை மேம்படுத்தும் விதமாக, கூடுதலாக 31 புதிய துணை மின் நிலையங்கள், இயக்கத்தில் உள்ள 314 உயரழுத்த மின்மாற்றிகளை திறன் உயர்த்தும் பணிகள், புதிய 33/11 கிலோ வோல்ட் மின்னூட்டிகள்

நிறுவும் பணிகள் மற்றும் இயக்கத்தில் உள்ள 33/11 கிலோ வோல்ட் மின்னூட்டிகளை வலுப்படுத்தும் பணிகள் ஆகியன 1,800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில், 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் நான்கு, 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் நாற்பத்திநான்கு, 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 80 ஆக மொத்தம் 128 துணை மின் நிலையங்கள் 1,347 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

7. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, எரிசக்தி திறன் சேவை லிமிடெட் (EESL) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டு, அதனால் அடுத்த மூன்றாண்டுகளுக்கு 11,000 கோடி ரூபாய் முதலீட்டுடன் மாநிலத்தில் பயனுள்ள ஆற்றல் செய்திறன் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளவும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உயர்த்திடவும் மற்றும் புதைபடிவ எரிபொருள் நுகர்வினை குறைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

✵ ✵ ✵

# தொழில் துறை

## 29.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியாவில் தொழில் துவங்கத் தேவையான உகந்த சூழ்நிலையும், சிறப்பான திறன்வாய்ந்த மனித வளத்தினையும், 24 மணி நேரம் கிடைக்கின்ற தரமான மின்சாரம், சுமுகமாக தொழில் தொடங்கி நடத்துவதற்கு அனைத்து சூழ்நிலைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது தமிழ்நாடு. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவிலேயே மகாராஷ்டிராவை அடுத்து இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும், தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் எண்ணிக்கையிலும், தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. புதிய சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் பதிவு செய்வதிலும் தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்குகிறது. தொழில் துறையில் நிகர மதிப்புக் கூட்டல் படி தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் மொத்த வருவாய் மதிப்பிலும், மொத்த ஏற்றுமதியிலும் மூன்றாம் இடத்தில் தமிழ்நாடு உள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறுவதில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக உள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசின் சார்பாக, தமிழ்நாட்டில் தொழில்

வளர்ச்சியினை மேலும் மேம்படுத்திட பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களில் உள்ள சுமார் 360 ஏக்கர் நிலப்பரப்பில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை ஆணையக் குழுவுடன் இணைந்து ஒரு பல்முனை சரக்கு போக்குவரத்துப் பூங்கா (Multi Modal Logistics Park) 1,295 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பல்முனை சரக்கு போக்குவரத்துப் பூங்காவை அமைப்பதால் போக்குவரத்து செலவுகள், வாகனங்களினால் ஏற்படும் மாசு மற்றும் சாலை நெரிசல் வெகுவாக குறைய வாய்ப்புள்ளது. இத்திட்டம் பொன்னேரி தொழில் முனைய (Node) மேம்பாட்டுத் திட்டத்தின் கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய ஒன்றாகும்.

2. தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டான் கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலை எண்.45B-ன் புறவழிச் சாலையையொட்டி, 1,032 ஏக்கர் பரப்பளவில், சிப்காட் தூத்துக்குடி தொழில் வளாகம் நிலை–I உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அப்பகுதியில் காணப்படும் தொழில் மனைகளுக்கான தேவையைக் கருத்தில் கொண்டும், கடல்வழி, வான்வழி மற்றும் இரயில் வழிப் போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டும், சிப்காட் தொழில் வளாகம் நிலை–Iஐ ஒட்டி, ஒட்டப்பிடாரம் வட்டத்தில், தெற்கு வீரபாண்டியபுரம் மற்றும் மீளவிட்டான் கிராமங்களில் சுமார் 1,600 ஏக்கர் பரப்பளவில், சிப்காட் தூத்துக்குடி தொழில் வளாகம் – நிலை II உருவாக்கப்படும்.

இவ்வளாகத்தினை மேம்படுத்தும் பொருட்டு, முதலாவதாக 600 ஏக்கர் பரப்பளவுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள், மழைநீர் வடிகால், சாலையோர மரங்கள், தெரு விளக்குகள் மற்றும் பிற வசதிகள் 60 கோடி ரூபாய் செலவில், இரண்டு வருட காலத்திற்குள்ளாக, உருவாக்கப்படும். இதன்மூலம், 500 கோடி ரூபாய் முதலீடும், 10 ஆயிரம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20 ஆயிரம் நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்

## 29.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

1. தமிழ்நாட்டில் அனைத்து வசதியுடன் கூடிய தொழிற்பேட்டைகளை தொடங்குவது மற்றும் அவைகளைத் திறம்பட நிருவகிப்பது தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முக்கியமான செயல்பாடுகளாகும்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம்,

அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், முள்ளுவாடி மற்றும் நாகலேரி கிராமங்களில் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் 4 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், ஏனம்பாக்கம் கிராமத்தில் 216.37 ஏக்கர் நிலப்பரப்பில், 58 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

இ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பெரியகோளாபாடி மற்றும் கண்ணக்குருக்கை கிராமங்களில் 57.18 ஏக்கர் நிலப்பரப்பில், 13 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

மூன்று தொழிற்பேட்டைகள் நடப்பாண்டில் 77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில், குறு நிறுவனங்களின் எண்ணிக்கை 6.92 இலட்சம் ஆகும். ஈரோடு மாவட்ட குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கம் சார்பில், 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 20 சேமிப்பு கிடங்குகள், நிருவாக அலுவலகம், காட்சி மையம், பேச்சுவார்த்தை அரங்கம் ஆகியவை அமைக்கப்படும். இதன்மூலம் 700 குறுந்தொழில்கள் பயன்பெறும்.

காக்களூர், மாவட்ட குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கம் சார்பில், 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பயிற்சி மையம், சந்தை மற்றும் காட்சி மையம், பேச்சுவார்த்தை அரங்கம் ஆகியவை அமைக்கப்படும். இதன்மூலம் 120 குறுந்தொழில்கள் பயன்பெறும்.

திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை சங்கம் சார்பில் (பகுதி I), 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்படும். இதன்மூலம் 60 குறுந்தொழில்கள் பயன்பெறும்.

திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை சங்கம் (பகுதி II), 5 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பயிற்சி மையம், சந்தை மற்றும் காட்சி மையம், பொது கிடங்கு, பேச்சுவார்த்தை அரங்கம் ஆகியவற்றை அமைக்கும். இதன்மூலம் 100 குறுந்தொழில்கள் பயன்பெறும்.

மேற்கண்ட சங்கங்கள் அமைக்கவிருக்கும் திட்டங்களுக்கு அரசின் பங்குத் தொகையாக 10 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

3. நீலகிரி மாவட்டத்தின் முக்கிய வாழ்வாதாரமாக தேயிலை விளங்குகிறது. தேயிலைத் தொழிற்சாலைகள் அம்மாவட்ட

சிறு தேயிலை விவசாயிகளின் பொருளாதார நிலையினை உயர்த்துவதில் முக்கிய பங்காற்றுகிறது. இருப்பினும், தேயிலைச் சந்தை அவ்வப்போது எதிர்கொள்ளும் விலை ஏற்றத்தாழ்வினால், தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதனால், அத்தேயிலைத் தொழிற்சாலைகள், பசுந்தேயிலை வழங்கும் தொழிற்கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு நியாயமான விலை வழங்கிட இயலாமல் போகிறது. இவ்வாறு ஏற்படும் சூழ்நிலையில், சிறு தேயிலை விவசாயிகளின் நலன் காக்கும் பொருட்டு, 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ''விலையினை நிலைநிறுத்தும் நிதியம்'' ஒன்றினை 'இண்ட்கோசர்வ்வுடன்' (Indcoserve) இணைந்து ஒரே தவணையாக 2014–2015ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும், விலை ஏற்றத்தாழ்வு நிலை அடிக்கடி ஏற்படுவதாலும், சிறு தேயிலை விவசாயிகளின் நலன் பெரிதும் பாதிக்கப்படுவதாலும், இச்சிக்கலுக்கு நீண்டகால தீர்வு காண வேண்டியது அவசியமாகிறது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, நடப்பாண்டில், நீலகிரி மாவட்டத்தில் கைகாட்டி மற்றும் மகாலிங்கா தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் தலா 2 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில், இமாச்சல பிரதேசம், பாலம்பூர் இமாலயன் உயிரி வள தொழில்நுட்ப நிறுவன உதவியுடன் தேயிலை பாலிபினால்ஸ் / பசுந்தேயிலை சாறு கலந்த கேட்டச்சின் எனப்படும் மதிப்பு கூட்டப்பட்ட தேயிலை உற்பத்திப் பிரிவுகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

❋ ❋ ❋

# சமூக நலத்துறை

## 29.06.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, நடப்பாண்டில் சமூக நலத் துறை சார்பாக, கீழ்க்கண்ட அறிவிப்பினை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசால் தற்போது 36 அரசு குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் உள்ள அன்னை சத்தியா அம்மையார் நினைவு குழந்தைகள் காப்பகக் கட்டடம் கட்டப்பட்டு 38 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் மிகவும் பழுதடைந்துள்ளதால், தற்போதுள்ள பழைய கட்டடத்தை இடித்து விட்டு, அதே இடத்தில் 100 குழந்தைகள் தங்கும் வகையில், வகுப்பறைகள், அலுவலக அறை, உணவருந்தும் கூடம், நவீன சமையலறை, பண்டகப் பொருட்கள் வைப்பறை, துயிற்கூடங்கள் (கழிவறை மற்றும் குளியலறை வசதியுடன்), தியான அறை, பொழுது போக்கு அறை, பணியாளர்கள் அறை மற்றும் 10 பணியாளர் குடியிருப்புகள் கொண்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம், 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✲ ✲ ✲

# நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை

## 03.07.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்ந்த பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான (AMRUT) திட்டத்தின் கீழ், பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**1.** வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான சத்துவாச்சாரி, அலமேல்மங்காபுரம் மற்றும் குணவட்டம் ஆகிய பகுதிகளில் **343** கோடியே **69** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இதனால் வேலூர் மாநகராட்சியிலுள்ள **2** இலட்சத்து **62** ஆயிரம் பேர் பயன்பெறுவர்.

**2.** கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட குறிச்சி, குனியமுத்தூர் பகுதிகளில் **442** கோடி ரூபாய் மதிப்பீட்டில், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் **2** இலட்சத்து **58** ஆயிரத்து **734** பேர் பயன்பெறுவர்.

**3.** திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பொன்மலை மற்றும் அபிசேகபுரம் பகுதிகளில் **325** கோடி ரூபாய் மதிப்பீட்டில், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் ஒரு இலட்சத்து **77** ஆயிரத்து **454** பேர் பயன் பெறுவர்.

**4.** திருநெல்வேலி மாநகராட்சி இணைப்புப் பகுதிகளில் **326** கோடி ரூபாய் செலவில், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் **2** இலட்சத்து **14** ஆயிரத்து **857** பேர் பயன் பெறுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**5.** அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப் பகுதியின் **358** ஏக்கர் பரப்பளவில் சீரமைப்புப் பணிகள் முழுமையாக நிறைவு பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரையிலான **42** கிலோ மீட்டர் தூரத்தை **555** கோடியே **46** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# ஊரக வளர்ச்சித் துறை

## 03.07.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு மாநிலத்தின் உயிர் நாடியாக விளங்குவது கிராமங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. ஊராட்சிகளில் வாழும் மக்கள் நலன் கருதி, நகரங்களில் கிடைக்கப்பெறும் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை கிராமங்களிலும் ஏற்படுத்துதல், ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல், வீட்டு வசதியினை அளித்தல், தூய்மையான சுற்றுப்புறம் மற்றும் சுகாதாரத்தைப் பேணுதல், ஊரக மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்து வந்தார்கள். மேலும், 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார். இத்திட்டம் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்றது.

நடப்பாண்டில், ஊரகப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. 2015–2016ஆம் ஆண்டில், பல்வேறு வகையான சாலைகளை ஒரே திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் வகையில், தமிழ்நாடு ஊரகச்

சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், கடந்த 2 வருடங்களில், 8,875 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் 1,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் ஆண்டில், 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 3,500 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மத்திய அரசு, இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை செயல்படுத்திட தமிழக அரசுக்கு அனுமதி அளித்துள்ளது. இதன் வாயிலாக, 2017–2018ஆம் ஆண்டில் 2,659 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் மற்றும் 25 உயர்மட்டப் பாலங்கள் 1,254 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

3. ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுப்படுத்திடவும், உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொள்வதற்கும், பயிற்சிகள் அளிப்பதற்கும், தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை கண்காட்சி நடத்தி விற்பனை செய்வதற்கும் ஏதுவாக, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கட்டடங்கள் தலா 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,000 கட்டடங்கள் 600 கோடி ரூபாயில் கட்டப்படும்.

4. திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற “முழு சுகாதார தமிழகம்” என்ற இலக்கினை அடையும் வகையில், 2017–2018ஆம் ஆண்டில், தூய்மை பாரதம் இயக்கம் மற்றும் தேசிய வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 26.49 இலட்சம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள், தலா 12,000 ரூபாய் ஊக்கத் தொகையில் மொத்தம் 3,178 கோடி ரூபாயில் கட்டப்படும்.

5. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வெற்றிகரமாக செயல்படுவதை மேம்படுத்தும் வகையிலும், கழிவுகள் அகற்றப்படும் முறைகளை நவீனப்படுத்தும் விதமாகவும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அருகாமையில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கும், மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ள கிராம ஊராட்சிகளுக்கும், அதிகமான மக்கள் தொகை கொண்ட பெரிய கிராம ஊராட்சிகளுக்கும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளாக, தெருவில் வைக்கப்படும் குப்பைத் தொட்டிகள் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மூன்று சக்கர மிதிவண்டிகள் / தள்ளு வண்டிகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் மின்கலம் மூலம் இயக்கப்படும் தள்ளு வண்டிகள் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் வழங்கப்படும். மொத்தத்தில், இத்திட்டத்திற்கென 500 கோடி ரூபாய் செலவிடப்படும்.

6. சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான கடன் உதவியை உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிகள் மூலம் பெற்றுத் தருவதன் வாயிலாக, பெண்கள் பொருளாதார மேம்பாடு அடையவும் மற்றும் கடன் சுமைகளிலிருந்து விடுபடவும் வழிவகை செய்யப்படுகிறது. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கென கடந்த 6 ஆண்டுகளில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் 32,848 கோடி ரூபாய் வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 7,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

## 05.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை சார்பில் கீழ்க்கண்ட அறிவிப்பினை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மழைக் காலங்களில் மண்பாண்டங்கள் செய்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்ற பொது தேர்தலின் போது வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், "மண்பாண்ட தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் 4,000 ரூபாய் மழைக் கால பராமரிப்பு உதவித் தொகையானது, 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்" என்ற வாக்குறுதியை அளித்திருந்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, மண்பாண்டத் தொழிலாளர்களின் மழைக் கால பராமரிப்பு உதவித் தொகையாக, தற்போது வழங்கப்பட்டு வரும் 4,000 ரூபாய், இனி 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம், இத்தொழிலில் ஈடுபட்டு வரும் 12,236 குடும்பங்கள் பயன் பெறுவர்.

இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு கோடியே 22 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

✵ ✵ ✵

# மக்கள் நல்வாழ்வுத் துறை

## 05.07.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, மக்கள் நல்வாழ்வுத் துறையால் செயல்படுத்தப்பட இருக்கும் சில புதிய திட்டங்களை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், சென்னை அடையார் புற்றுநோய் மையத்தை 120 கோடி ரூபாய் செலவில், புற்றுநோய்க்கான உயர் சிகிச்சை மையமாக அறிவித்தார்கள். இதற்கான கட்டடப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இது மட்டுமின்றி, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மண்டல புற்றுநோய் மையங்கள் 60 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இந்த ஆண்டு, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை, அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய நான்கு மருத்துவமனைகளில் 64 கோடி ரூபாய் செலவில் புற்றுநோயாளிகளுக்கு நவீன சிகிச்சை அளிக்கும் பொருட்டு, நவீன ‘லீனியர் ஆக்சிலேட்டர்’ கருவி நிறுவப்படும்.

2. தாய்சேய் நலனைப் பேணிக் காக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வந்தார்கள். அந்த வகையில், மயிலாடுதுறை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் தலா 20 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு மேன்மைமிகு மையங்கள் (Centre of Excellence) அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தாய் மற்றும் சேய் இறப்பு பெரிய அளவில் குறைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு சேவை, தேசிய நலவாழ்வு குழும நிதி மற்றும் சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து திருப்பூர், இராமநாதபுரம், பெரம்பலூர், செய்யாறு, உளுந்தூர்பேட்டை, இராஜபாளையம், திருத்தணி, ஆத்தூர் மற்றும் காரைக்குடி அரசு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் 57 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இது தவிர, 10 தாலுக்கா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அவசரகால நிலைப்படுத்தும் மையம் ஏற்படுத்தப்படும். 5 தேசிய நெடுஞ்சாலைகளில் அனைத்து முதலுதவி வசதிகளைக் கொண்ட நடமாடும் அவசர சிகிச்சை ஊர்தி சேவை தொடங்கப்படும்.

4. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தற்போது 17 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 18 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகளை நிறுவி பராமரித்து வருகிறது. நடப்பாண்டில், காஞ்சிபுரம், திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், திருவள்ளூர், நாமக்கல், திருப்பூர் மற்றும் கள்ளக்குறிச்சி

ஆகிய 9 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 45 கோடி ரூபாய் செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி நிறுவப்படும்.

5. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துகளை கொள்முதல் செய்து மருந்து கிடங்குகளில் சேமித்து வைத்து விநியோகம் செய்து வருகிறது. போதிய இடவசதி இல்லாத, கடலூர், புதுக்கோட்டை, திருவாரூர், வேலூர், விருதுநகர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, நாமக்கல், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், திருப்பூர், சேலம், விழுப்புரம் மற்றும் நீலகிரி ஆகிய 22 மாவட்டங்களில் உள்ள மருந்து கிடங்குகளுக்கு கூடுதல் கட்டடங்கள் 33 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

6. அரசு மருத்துவனைகளில் நடப்பாண்டில் 7 சி.டி. ஸ்கேன் கருவிகள் மணப்பாறை, மேட்டூர் அணை, மன்னார்குடி, பென்னாகரம், ஒசூர், பரமக்குடி, மற்றும் குளித்தலை ஆகிய 7 அரசு மருத்துவமனைகளில் 12 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

7. தாய் சேய் நலப் பணிகளை திறம்பட செயல்படுத்தி வரும் 9,994 சுகாதார செவிலியர்களுக்காக 9 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் கைக் கணினிகள் (Tab) வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# வீட்டு வசதித்துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் நகர்ப்புற ஊரமைப்புத் துறை

## 05.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023யின்படி, மாநிலம் முழுவதற்கும் உயர்தர உட்கட்டமைப்பை வழங்குவது, போதுமான வீட்டுவசதித் திட்டங்களை நிறைவேற்றி தமிழ்நாட்டை 2023க்குள்ளாக குடிசைகளற்ற மாநிலமாக உருவாக்கிட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, வீட்டு வசதித்துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் நகர்ப்புற ஊரமைப்புத் துறை ஆகிய துறைகளின் பின்வரும் புதிய திட்டங்களைச் செயல்படுத்தும் என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

1. தமிழ்நாடு அரசு ஒரு புதிய குடியிருப்பு மற்றும் உறைவிடக் கொள்கையை உருவாக்கும். வீடு கட்டும் செலவினத்தைக் குறைத்தல், பொருளாதாரத்தில் நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினரை உள்ளடக்கிய அனைவருக்கும் போதுமான வீட்டுவசதியினை கிடைக்கச் செய்தல்; வாங்கத்தக்க விலையில் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வீடுகள் கட்ட இடம் ஒதுக்கீடு செய்தல்; அனைவருக்கும் அடிப்படை வசதிகளான, மின்சாரம், குடிநீர் மற்றும் சாலை வசதிகளுடன் கூடிய வீடு வழங்குதலை உறுதி

செய்தல்; நகர்ப்புற மக்களின் மாறிவரும் சமூகப் பொருளாதார நிலையினைக் கருத்திற்கொண்டு, நகர்ப்புறங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்; நீடித்த நிலையான சுற்றுச்சூழல் சார்ந்த வாழ்க்கை முறையினை நகர்ப்புறங்களில் உறுதி செய்தல்; நிலையான நகரமயமாக்குதலை ஊக்குவித்தல்; சட்டம் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளில் பொருத்தமான திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்; பெருந்திட்டங்கள் (Master Plan) மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் (Development Control Rules) திருத்தங்கள் கொண்டு வருதல்; ஒற்றைச் சாளர முறையை உருவாக்குதல்; மனை வரைபடம் ஒப்புதல் மற்றும் கட்டட அனுமதி பெற காலக்கெடு நிர்ணயித்தல்; மூத்த குடிமக்கள் மற்றும் பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு, வீடுகள் கட்டுதல் மற்றும் அதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்; இடரற்ற வாடகை வீடு வழங்கும் முறையினை உருவாக்குதல் போன்றவை இக்கொள்கையின் சிறப்பம்சங்களாகும்.

**2.** பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்ட நிதி (PMAY), சிறப்பு மாற்றத்தக்க வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் (Transferable Development Rights) மூலம் திரட்டப்படும் நிதி, பயனாளிகளின் பங்களிப்புத் தொகை மற்றும் தமிழக அரசால் அளிக்கப்படும் பற்றாக்குறை நிதி (Gap Fund) ஆகியவற்றைப் பயன்படுத்தி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம், எர்ணாவூரில் **676** கோடியே **61** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், **6,874** வீடுகள் குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்கு கட்டித் தரப்படும்.

**3.** பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீட்டுவசதித் (PMAY-Urban) திட்டத்தில், பயனாளிகள் தாமாகவே வீடு கட்டும் (Beneficiary Led Construction) வகைப்பாட்டின் கீழ், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் **1,86,308** தனி வீடுகள் **5** ஆயிரத்து **589** கோடியே **24** இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். மேலும், நடப்பாண்டில் பயனாளிகள் பங்களிப்புடன் வாங்கும்

திறனுக்கேற்ற வீடுகள் கட்டும் (Affordable Housing in Partnership Component) வகைப்பாட்டின் கீழ் ஒரு குடியிருப்பு 10 இலட்சம் ரூபாய் வீதம் 14,828 அடுக்குமாடி குடியிருப்புகள் 1,482 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். மேற்கண்ட இரண்டு வகைப்பாட்டின் கீழ், கட்டப்படும் குடியிருப்புகளுக்கு மாநில அரசின் மானியமாக 2,007 கோடியே 53 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

**4.** திட்டமிட்ட மற்றும் நீடித்த நிலையான நகர் வளர்ச்சி ஏற்படுத்திட, நிலப் பயன்பாடு குறித்து திட்டமிடுதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டங்களை வகுத்தல், பாதுகாப்பு அம்சங்களுடன் வசிக்குமிடங்கள் ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு, போக்குவரத்து போன்ற தேவைகளை அறிந்து சிறப்பான தீர்வுகளை பரிந்துரைக்க, தகுதி பெற்ற தனிச் சிறப்புடைய நகரமைப்பு வல்லுநர்களை பணியில் ஈடுபடுத்துவது அவசியமாகிறது. நகரமைப்பு வல்லுநர்கள், மண்டல மற்றும் உள்ளூர் விதிமுறைகளை அறிந்து, மண்டலங்களுக்கு இடையேயான நகர வளர்ச்சி குறித்த அம்சங்களை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக மாநில அளவில் நகரமைப்பு வல்லுநர்களுக்கான ஒரு பணித் தொகுப்பினை உருவாக்கி, அதற்கென தனியாக பணிவிதிகள் உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணித் தொகுப்பிலுள்ள நகரமைப்பு வல்லுநர்கள், நகர் ஊரமைப்புத் துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம், உள்ளூர் திட்டக் குழுமங்கள் (LPA) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுப்பணி அடிப்படையில் பணியமர்த்தப்படுவர். நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஆணையாளர் பணிநிலை கட்டுப்பாட்டு தகவாளராக இருப்பார்.

✵ ✵ ✵

# சட்டத் துறை

## 05.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

சட்டக் கல்வி மேம்பாட்டிற்காக நான் கீழ்க்கண்ட திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

1. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இப்பல்கலைக்கழகத்திற்கு குளிர்சாதன வசதி, மின்னணு மேடைகள் (Electronic Podiums), கணினி ஒலி வீச்சிகள், கண்காணிப்பு கேமராக்கள் ஆகியவற்றுடன் 1,040 மாணவர்கள் அமரக் கூடிய வகையில் 20 விரிவுரை அறைகள், இயக்குநர் அறை, அலுவலக அறைகள், ஆசிரியர் அறைகள், கௌரவ ஆசிரியர் அறைகள், கருத்தரங்கக் கூடம், மாதிரி நீதிமன்றக் கூடம், ஆவண அறைகள் மற்றும் மாணவியருக்கான பொது ஓய்வறை ஆகியவற்றை உள்ளடக்கி, தரை மற்றும் இரண்டு தளங்களைக் கொண்ட கூடுதல் கட்டடம் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

2. மதுரை அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வருகின்ற மாணவர்களுக்கு கருத்தரங்குகள், சிறப்பு சட்ட வகுப்புகள், கலை நிகழ்ச்சிகள், பல்வேறு விழாக்கள் மற்றும் பட்டமளிப்பு விழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தற்போதைய கலையரங்கில் போதுமான இடவசதி இல்லாததை கருத்திற்கொண்டு, புதிய கலையரங்கம் ஒன்று; முதல் தளத்திலும், நூலகக் கட்டடத்தில் உள்ள இட நெருக்கடியை கருத்திற்கொண்டு, புதிய நூலகக் கட்டடத்தை தரை தளத்திலும் உள்ளடக்கிய புதிய கட்டடம் 8 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். ✵

# வேளாண்மைத் துறை

## 11.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதாரத்தின் அடித்தளமாக விளங்கும் வேளாண் தொழிலை வளர்ச்சி அடையச் செய்து, உணவு தானிய உற்பத்தியை பெருக்குவதிலும், உணவு உற்பத்தி செய்து மனித சமுதாயத்திற்கு வழங்கும் உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கும் வகையில், பல முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள்.

அதன் காரணமாகவே, 2014–2015ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி ஒரு கோடியே 27 இலட்சத்து 95 ஆயிரம் மெட்ரிக் டன் என உயர்ந்தது. 2011–2016 கால கட்டத்தில், நான்கு ஆண்டுகளாக 100 இலட்சம் மெட்ரிக் டன்களுக்கு மேல் உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை படைத்ததோடு மட்டுமல்லாமல், இதற்கான மத்திய அரசின் 'கிரிஷி கர்மான்' விருதுகளை நான்கு முறை தமிழ்நாட்டிற்காக பெற்று தந்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக, வேளாண்மைத் துறை சார்ந்த பின் வரும் புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

1. தற்போது நிலவி வரும் வறட்சியினைக் கருத்தில் கொண்டு, குறைந்த நீரில் அதிக விளைச்சலும், விவசாயிகளுக்கு வருமானமும் தரும் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிப்பதற்கு, நடப்பாண்டில் 22 மாவட்டங்களில், தக்காளி, கத்தரி, வெண்டை போன்ற காய்கறிப் பயிர்களில் வீரிய ஒட்டு இரகங்கள் மற்றும் உயர் விளைச்சல் இரக சாகுபடி 11,250 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம், சுமார் 2,250 விவசாயிகள் பயன்பெறுவர். இதற்காக, வீரிய ஒட்டு இரக விதைகள் மற்றும் குழித்தட்டுகளில் வளர்க்கப்பட்ட காய்கறி நாற்றுகள், 50 சதவீத மானியத்தில் ஏக்கருக்கு 8,000 ரூபாய் வரை வழங்கப்படும்.

2. சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, அம்மாவின் அரசு 2012ஆம் ஆண்டில், தமிழ்நாடு சூரிய சக்திக் கொள்கை ஒன்றை வகுத்து, பல்வேறு வகைகளில் சூரிய சக்திப் பயன்பாட்டினை ஊக்குவித்து வருகிறது. கடந்த 4 ஆண்டுகளாக, 102 கோடி ரூபாய் மானியத்தில், 2,826 சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்ப் செட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. தமிழக விவசாயிகளிடையே சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்ப்செட்டுகளுக்கான தேவை அதிகம் இருப்பதால், தமிழ்நாடு அரசு, நடப்பாண்டில் இவ்வகை மோட்டார் பம்ப் செட்டுகளை 1,000 விவசாயிகளுக்கு 90 சதவிகித மானியத்தில் வழங்கும். 30 சதவீத மானியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் 15 கோடி ரூபாயும், மீதமுள்ள 60 சதவிகித மானியம், வேளாண்மை பொறியியல்துறை மூலமும் செயல்படுத்திட, 29 கோடியே 94 இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கப்படும்.

3. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் 430 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 ஆண்டு கால செயல்திட்டமாக ‘உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம்’ (Centre of Excellence for Bio-technology) ஒன்று நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பாண்டில் இம்மையத்தின் ஆயத்தப் பணிகள் 51 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இம்மையத்தில், விரைவில் செயல்படும் நொதிகள், பழுக்க வைக்கும் உயிரி ஹார்மோன்கள், செடிகளின் சீரமைப்புக்கான நொதிகள் போன்ற உயிரி வேளாண் இடுபொருட்கள், வேளாண் மூலக் கூறுகள் மற்றும் உயிரி செயலாக்க முறைகள், வணிக ரீதியாக தமிழ்நாடு விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில், பொது மற்றும் தனியார் நிறுவன கூட்டு முயற்சியுடன் உருவாக்கப்படும்.

4. அறுவடைக்குப் பின், விளைபொருள் வீணாவதை குறைக்கவும், பண்ணையளவில் மதிப்புக்கூட்டி விற்பனை செய்யவும் தோட்டக்கலை விளைபொருட்களை சேகரித்து, தரம் பிரித்து, சிப்பம் கட்டி, விநியோகத் தொடர் மேலாண்மையை மேம்படுத்துவதற்காக, நடப்பாண்டில், பண்ணை அளவில் 597 சிப்பம் கட்டும் அறைகள் (Pack houses) அமைக்கப்படும். இதற்காக, சிப்பம் கட்டும் அறை ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபாய் வீதம், 11 கோடியே 94 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

5. வேளாண் சார்ந்த அனைத்துத் துறைகளின் சேவைகளை ஒரே இடத்தில் விவசாயிகள் பெற்றிடும் வகையில், வட்டார அளவில் 146 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கிராம அளவில் இயங்கி வரும் 550 துணை வேளாண் விரிவாக்க மையங்களில் பல கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. இதனை சரி செய்து, நவீனப்படுத்தும்

முயற்சியாக, முதற்கட்டமாக நடப்பாண்டில், 160 துணை வேளாண் விரிவாக்க மையங்கள் 48 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

6. திருச்சிராப்பள்ளியில் மகளிர் தோட்டக்கலைக் கல்லூரியும், குடுமியான்மலை, ஈச்சங்கோட்டை மற்றும் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் மூன்று வேளாண் கல்லூரிகளும் புதிதாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் அமைக்கப்பட்டன. இம்மூன்று வேளாண் கல்லூரிகள் உள்ளிட்ட பல்கலைக்கழக இதர மையங்களான, கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கிள்ளிகுளம் வேளாண் கல்லூரிகள், பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி, மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி, வம்பன் பயறு ஆராய்ச்சி நிலையம், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் உள்ளிட்ட பல்வேறு நிலையங்களில் மாணவர் பயில்திறன் சிறப்புற, நூலகம், கூடுதல் வகுப்பறைகள், ஆராய்ச்சிக் கூடங்கள், விடுதிகள், கலையரங்கம், மாணவர்களுக்கு தூய்மையான குடிநீர் போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளும், விதை மையம் (Seed Hub) உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளும் நபார்டு வங்கியின் உதவியுடன் ஏற்படுத்தப்படும். இதற்காக, நடப்பாண்டில் 108 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

7. விவசாயிகளுக்கு தரமான இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் உரிய நேரத்தில் சென்றடையும் வகையில், வேளாண் விரிவாக்க சேவையினை மேம்படுத்திட, அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, நடப்பாண்டில் 430 வேளாண் உதவி அலுவலர் பணியிடங்கள் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✲ ✲ ✲

# வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை (ம) பேரிடர் தணிக்கும் துறை

## 11.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழக அரசின் சார்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. அரசின் சேவைகளை எளிதாகவும், விரைவாகவும், பொதுமக்கள் பெறுவதை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய அரசின் கொள்கையாகவே ஏற்று செயல்படுத்தி வந்தார்கள். ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட பஞ்சாயத்து அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையம், பால் கூட்டுறவு சங்க அலுவலகம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை, தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகம், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் அலுவலகம், வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகம், குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், சமூக நலத் துறை அலுவலகம் உள்ளிட்ட இதர அரசுத் துறை அலுவலகங்கள் பல்வேறு இடங்களில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட அலுவலகங்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திலேயே செயல்பட, 52 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். இந்த கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் **"புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடம்"** என்ற

பெயரில் அழைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. மதுரை மாவட்டத்தில், செய்தி—மக்கள் தொடர்புத் துறை, தணிக்கை துறை, மாவட்ட கருவூலம், ஆதிதிராவிடர் நல அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட வழங்கல் அலுவலகம், மண்டல கலால் அலுவலகம் உள்ளிட்ட இதர அரசுத் துறை அலுவலகங்கள் பல்வேறு இடங்களில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட அலுவலகங்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திலேயே செயல்பட, 26 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். இந்த கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் **"புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடம்"** என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. நாமக்கல் மாவட்டத்தில் இந்து அறநிலையத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழக கிளை அலுவலகம், கல்வித் துறை அலுவலகங்கள், பால்வளத் துறை, குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகம் மற்றும் உள்ளாட்சி நிதித்தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகம் ஆகிய அரசுத் துறை அலுவலகங்கள் பல்வேறு இடங்களில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட அலுவலகங்கள் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திலேயே செயல்பட, 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

4. பேரிடர்களின்போது, மாநில அரசு, பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து முறையான மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்கின்றது. பேரிடர் கால பாதிப்பு மிக அதிக அளவில் உள்ளபோது, மாநிலத் துறைகள் மட்டுமல்லாமல், தேசிய பேரிடர் மீட்புப் படையும், மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பேரிடர்களின்போது ஏற்படுகின்ற இன்னல்களைக் குறைக்கும் விதமாகவும், பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மிக துரிதமாக மீட்பு உதவிகளை உடனுக்குடன் கால விரயமின்றி அனுப்பிடவும், பாதிப்பிற்குள்ளான பகுதிகளையும், மக்களையும் எளிதில் சென்றடைவதற்கும், உள்ளூர் நிலப் பகுதி பற்றி நன்கு அறிந்திருக்கும் ஒரு தனி அமைப்பு தேவைப்படுகிறது. எனவே, தேசிய பேரிடர் மீட்புப் படை வழியில் ஏற்கனவே உள்ள மாநில பேரிடர் மீட்புப் படையினை (SDRF) பலப்படுத்திடவும் மற்றும் பெரும் பேரிடர்களின்போது அனைத்து விதமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும், காவல் துறையில் தனியாக ஒரு பட்டாலியன் "தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை" (TNDRF) என்ற ஒரு புதிய பெயரில் உருவாக்கப்படும். இதன் திறன் மேம்பாட்டிற்காகவும், தகவல் தொடர்பு மற்றும் மீட்பு உபகரணங்கள் வாங்குவதற்கும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 15 கோடி ரூபாய் வழங்கப்படும்.

**5.** பருவ நிலை மாறுபாடுகளின் காரணமாக, வரலாறு காணாத பேரிடர் நிகழ்வுகளை தமிழகம் சமீப காலமாக தொடர்ந்து சந்தித்து வருகிறது. மீட்புப் பணிகளில் ஈடுபடும் பல்வேறு துறைகளின் திறன் மேம்பாட்டிற்காகவும், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு பணிகளை மேம்படுத்துவதற்காகவும் நவீன கருவிகளை தமிழ்நாடு அரசு மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் மூலம் வழங்கி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இந்த வருடம், சென்னை மாநகராட்சி, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், கடலோரக் காவல் படை, வனத் துறை, பொதுப்பணித் துறை, ஊர்க் காவல் படை, நெடுஞ்சாலைத் துறை போன்ற துறைகளுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் தகவல் தொடர்பு, தேடுதல் மற்றும் மீட்பு சாதனங்கள் உள்ளிட்ட நவீன கருவிகள் வாங்கிட 52 கோடியே 40 இலட்சம் ரூபாய் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை

## 14.07.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆறு ஆண்டுகளாக கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் அம்மாவின் அரசின் சார்பாக, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை சார்ந்த கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. நடப்பாண்டில், 49 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில், 150 கால்நடை மருத்துவ நிலையங்கள் நபார்டு வங்கியின் நிதியுதவிடன் புதிதாகக் கட்டப்படும்.

2. நடப்பாண்டில், 93.86 இலட்சம் கால்நடைகளுக்கு நோய்த் தொற்றுகளை தடுக்கும் வகையில், 18 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் தடுப்பூசிகள் போடப்படும்.

3. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ், கோடுவெளியில் உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியில்

பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி உட்கட்டமைப்பு வசதிகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் நோக்குடன், வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் ஆகியன 14 கோடி ரூபாய் செலவில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் மேம்படுத்தப்படும்.

4. உற்பத்தியாளர்களிடமிருந்து கூடுதலாக பெறப்படும் பாலை கையாள, திண்டுக்கல், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், வேலூர், காஞ்சிபுரம்–திருவள்ளூர், விருதுநகர், தருமபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் குளிர்பதன வசதி, நவீன பாலகம் அமைத்தல், பால் பதப்படுத்தும் இயந்திரங்கள் நிறுவுதல், கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை மேம்படுத்துதல், தீவனக் கிடங்குகள், நெய் நிரப்பும் இயந்திரங்கள், தரக் கட்டுப்பாடு ஆய்வகம், பால் பை நிரப்பும் இயந்திரங்கள் மற்றும் இதர உபகரணங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

5. தமிழகத்தில் கிராம அளவில் சுமார் 12,000 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. கிராம அளவில் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்யும் பணியுடன், பால் தரப் பரிசோதனை செய்தல், கால்நடை தீவனம் வழங்குதல் போன்ற இதர பணிகளில் ஈடுபட்டு வரும் சுமார் 20,000 பணியாளர்களுக்கு, அச்சங்கங்களின் பால் உற்பத்தி மற்றும் அவை ஈட்டும் இலாபம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இவர்களது ஊதியத்தை உயர்த்தி வழங்குமாறு வைத்த கோரிக்கையை பரிசீலனை செய்து, அவர்களது பணி மூப்பு அடிப்படையில், அனைத்து முதுநிலை பணியாளர்களுக்கும் பயன் அளிக்கும் வகையில், மாற்று ஏற்பாடாக, பணப்பயன் பெறும் மாற்றுத் திட்டத்தை அரசு பரிசீலித்து

வருகிறது. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் 20,000 பணியாளர்கள் உடனடியாக பயன்பெறும் வகையில், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 200/– ரூபாய் கூடுதலாக வழங்கப்படும். இதற்கான 5 கோடி ரூபாய் செலவினம் சங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

6. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2012ஆம் ஆண்டில், நாகை மாவட்டம், நாகப்பட்டினத்தில் இந்தியாவிலேயே முதலாவது மீன்வளப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்கள். தற்போது, மீன்வளப்பிரிவில் தேவைப்படும் மனிதவளத் தேவையினைப் பூர்த்தி செய்திடும் வகையில், நடப்பாண்டில், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தலைஞாயிறு பேரூராட்சியில் அமைந்துள்ள ஓரடியம்புலம் கிராமத்தில் ஒரு புதிய மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவக்கப்படும். தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் நிறுவப்படும் இந்த புதிய மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், நடப்பாண்டிலிருந்து 20 மாணவர்கள் மீன்வள இளநிலை பட்டப்படிப்பிற்கு சேர்க்கப்படுவார்கள். இந்த மீன்வளக் கல்லூரிக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் 15 ஏக்கர் பரப்பிலும், 50 ஏக்கர் பரப்பளவில் நன்னீர் மற்றும் உவர்நீர் மீன்பண்ணைகளும் அமைக்கப்படும். இந்த மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினை அமைப்பதற்கு 28 கோடியே 82 இலட்சம் ரூபாய் முதற்கட்டமாக வழங்கப்படும்.

7. சென்னை, இராயபுரத்தில் ஒரு மீன்வளப் பயிற்சி நிலையமும், மீன்வளர்ப்புத் தொழில்நுட்பங்களில் பல்வேறு பயிற்சிகள் வழங்க காஞ்சிபுரம் மாவட்டம் முட்டுக்காட்டிலுள்ள மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் பயிற்சி மையமும், 13 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைகழகத்தின், சென்னையிலுள்ள வாணியஞ்சாவடி முதுகலை பட்ட மேற்படிப்பு வளாகத்தில் இந்தியாவிலேயே முதன் முறையாக, 'மீன்வள வணிக மேலாண்மை' (MBA in Fisheries Enterprises Management) முதுகலைப் பட்டப்படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டு, ஆண்டு தோறும் 40 மாணவர்கள் நடப்பாண்டிலிருந்து சேர்க்கப்படுவார்கள். மேலும், மத்திய அரசின் உயிர் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன், கடல்சார் உயிர் தொழில்நுட்ப (Marine Biotechnology) முதுகலைப் பட்டப்படிப்பு தொடங்கப்பட்டு 12 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். இவை தவிர, இந்தியாவிலேயே முதன்முதலாக, 'மீன்வள மருந்தியலில்' (Fisheries Pharmacology) முதுகலைப் பட்டப்படிப்பும் தொடங்கப்படும். இந்த நிலையத்தில் நவீன நூலகம், அதி நவீன ஆய்வுக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சியினை மேற்கொள்ள உயிரணு மரபியல், மூலக்கூறு உயிரியல், மரபுசங்கிலி தொடர் வேதிவினை, நொதியியல், நுண்ணுயிரியல் மற்றும் உயிர்–வேதியியல் ஆய்வகங்கள் உருவாக்கப்படும். இந்த மீன்வள முதுநிலை பட்டப்படிப்புகளுக்கான கூடுதல் கல்விக் கூட வசதிகள் 6 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

9. கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி மீனவ கிராமத்தில், பழையாறு ஆறு, கடலில் சங்கமிக்கும் இடத்தில் மீன்வளத் துறைக்குச் சொந்தமான 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட மீன் பண்ணை அமைந்துள்ள பகுதியில், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் விதமாக, நடப்பாண்டில் மீன் வளர்ப்புக் குளம், படகு சவாரி வசதிகள், நடைப் பயிற்சிக்கான நடைபாதைத் தளம், புல்வெளி, வண்ண மீன் காட்சியகம், குழந்தைகள் விளையாட்டுப் பகுதி மற்றும் உணவக வசதிகளுடன் மணக்குடி சூழியல் பாதுகாப்புப் பூங்கா 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**10.** மீன்வளத் துறையால் சேத்துப்பட்டு ஏரியில் அமைக்கப்பட்டிருக்கும் பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமைப் பூங்காவிற்கு வரும் பார்வையாளர்களின் தேவைக்காக தற்போது அமைக்கப்பட்டுள்ள ஒரு பன்னடுக்கு வாகன நிறுத்தகம் **9** அடுக்குகள் கட்டுவதற்கு வடிவமைக்கப்பட்டு, **5** அடுக்குகள் மட்டும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதன் அருகில் அமைக்கப்பட்டு இருக்கும் கீழ்ப்பாக்கம் மெட்ரோ இரயில் நிலையத்தினைப் பயன்படுத்தும் பயணிகளின் வாகன நிறுத்தத் தேவைகளையும் கருத்திற்கொண்டு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் மூலம் விரிவான ஆய்வு மேற்கொண்டு, இரு நிறுவனங்களும் வருவாயினை பகிர்ந்து கொள்ளும் வகையில் கூடுதல் தளங்கள் கட்டப்படும்.

**11.** வண்ணமீன்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வணிகர்களை ஒருங்கிணைத்து, சர்வதேச அளவில் வண்ணமீன்கள் வர்த்தகத்தை மேம்படுத்திடும் விதமாக, வண்ணமீன்கள் வளர்ப்பு சார்ந்த அனைத்து பொருட்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்தின் மூலம், பொதுமக்கள் மற்றும் தொடர்புடைய வர்த்தகர்களை ஈர்க்கும் பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய தேசிய வண்ணமீன் வானவில் பேரங்காடி சென்னை மாதவரத்தில் **3** கோடியே **50** இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

✵ ✵ ✵

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை

## 14.07.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் 40,000/– ரூபாய்க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் 60,000/– ரூபாய்க்கு மிகாமலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு விலையில்லா வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசால் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, இத்திட்டத்தின் கீழ், அதிக பயனாளிகள் பயனடையும் வகையில், தற்போது உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு 72,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

2. கிராமப்புற பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், பயன் பெறும் மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமான உச்சவரம்பு 25,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். ✵

# தகவல் தொழில்நுட்பத் துறை

## 14.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழக அரசின் சார்பில், தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. ‘தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு’ என்பது, தேசிய மின்னாளுமைத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில மற்றும் மத்திய அரசுகளின் ஒரு பகிர்வுத் திட்டமாகும். இந்த வலையமைப்பு தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வலையமைப்பு இரண்டு படிநிலைகளைக்கொண்டு, முதல் நிலையில், மாநிலத் தலைநகரத்துடன் மாவட்டத் தலைநகரங்களும், இரண்டாம் நிலையில், மாவட்டத் தலைநகரங்களுடன் வருவாய்க் கோட்ட அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டு கட்ட செயல்பாடுகள் முடிவடைந்த நிலையில், தற்போது மூன்றாம் கட்ட செயல்பாடுகள் 2017–2022 வரையிலான 5 ஆண்டு காலத்திற்கு 437 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது அரசுத் துறைகளுக்கும் பொதுமக்களுக்கும் பெரும்பயன் அளிக்கக் கூடியதாக அமையும்.

**2.** தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் "அம்மா இ–கிராமம்" என ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு, அந்த கிராமத்திற்கு, தகவல் தொழில்நுட்பவியல் வசதியினைக் கொண்ட கம்பியில்லா ஹாட்ஸ்பாட் (WiFi Hotspot), திறன்மிகு தெரு விளக்குகள் (Smart Street Lighting), தொலைக்கல்வி (Tele Education), தொலை மருத்துவம் (Tele Medicine) போன்ற சேவைகள் வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனங்களின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நிதியிலிருந்தும் (Corporate Social Responsibility Fund) மற்றும் அந்தந்தத் துறைகளின் திட்ட ஒதுக்கீட்டிலிருந்தும், தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் ஊராட்சி அளவில், இது வரை கிடைக்கப் பெறாத நவீன தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகளை கிராமங்களுக்குக் கொண்டு செல்ல முடியும். அதாவது, மின்வகுப்பறைகள் மூலம் பிற இடங்களில் நடத்தப்படும் சிறப்பான பாடத்திட்டங்களைக் காணொலிக்காட்சி மூலமும், இணையவழி மூலமும் கிராமப் பள்ளிகளை அடையச் செய்யலாம். அதுபோன்றே, பெரிய நகரங்களில் உள்ள சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனைகளை, கிராமத்தில் இருந்து கொண்டே தொலைமருத்துவம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**3.** தமிழ்நாட்டிலுள்ள **12,524** கிராம ஊராட்சிகளை Optical Fibre மூலம் இணைத்து அரசின் பல்வேறு சேவைகள் பொதுமக்களுக்கு சென்று அடைய மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding (MoU)) எனது முன்னிலையில் **25.04.2017** அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்திடப்பட்டது.

கிராமப்புறப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் மேற்கண்ட திட்டத்தின் பயன்கள் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளையும் சென்றடைய Optical Fibre மூலம் இணைத்து, டிஜிட்டல் புரட்சியின் பயன்களை தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் பெற்றிடும் வகையிலும், அவரவர் இல்லங்களுக்கு அருகில் தமிழ்நாடு அரசின் பல்வேறு சேவைகளை இணையம் மூலம் பெறவும், நகர்ப்புறப் பகுதிகளிலும் Optical Fibre நெட்வொர்க் திட்டத்தை செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டம் "தமிழ்நெட்" (TamilNet) என்று அழைக்கப்படும். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் போன்ற நிறுவனங்களிடமிருந்தும், பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியிலும் செயல்படுத்தப்படும்.

✵ ✵ ✵

# ஆதிதிராவிடர் நலத்துறை

## 19.07.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்பினை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில் தற்பொழுது இத்துறையின் கீழ் 1,324 ஆதிதிராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் விடுதிகளும், 314 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. தமிழக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, பள்ளிகளில் இடை நிற்றல் கணிசமாக குறைந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 11 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு 13 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

# வனத்துறை

## 19.07.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு வனத்துறையில் காடுகளின் உட்பகுதிகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளில் வேட்டைத் தடுப்பு முகாம்கள் செயல்படுவதால், வேட்டையாடுதல் மற்றும் திட்டமிட்ட கடத்தல் போன்றவை கணிசமான அளவில் தடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கடினமான பணியில் ஈடுபட்டு வரும் 908 வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்திரத் தொகுப்பு ஊதியம் 6,750/– ரூபாயிலிருந்து 10,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# தொழிலாளர் நலத்துறை

## 19.07.2017

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் தொழிலாளர்களின் நலன் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் நலத் திட்டங்கள் தீவிரமாக செயல்படுத்தப்பட்டும், சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் உறுதியாக கண்காணிக்கப்பட்டும் வருகின்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு கட்டுமானம் சார்ந்த தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் காத்திட, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமான தொழிலாளர்கள்) நலத் திட்டத்தினையும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தினையும் உருவாக்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் அம்மாவின் அரசு சார்பாக, தொழிலாளர் நலன் சார்ந்த பின்வரும் திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு அத்தொழிலாளர் இயற்கை மரணம் அடைந்தால், தற்போது வழங்கப்பட்டு வரும் உதவித்தொகை 15,000/– ரூபாயிலிருந்து 20,000/– ரூபாயாக உயர்த்தப்படும். இதேபோன்று அமைப்புசாரா தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்பட்டு

வரும் ஈமச் சடங்கு உதவித்தொகை **2,000/–** ரூபாயிலிருந்து **5,000/–** ரூபாயாக உயர்த்தப்படும்.

**2.** தமிழகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காகவும், தொழிற்திறன் பெற்ற மனித வளத்தை பெருக்குவதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் (Industrial Training Institutes) செயல்பட்டு வருகின்றன. தற்போது தமிழகத்தில் **85** அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் வேலூர் மாவட்டத்தில் வாணியம்பாடி, அணைக்கட்டு, குடியாத்தம், ஆலங்காயம், ஜோலார்பேட்டை ஆகிய வட்டாரப் பகுதி மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், வாணியம்பாடியிலும், ஈரோடு மாவட்டத்தில் கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், நம்பியூர், அந்தியூர், பவானிசாகர், தாளவாடி ஆகிய வட்டாரப் பகுதி மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், கோபிசெட்டிப்பாளையத்திலும், திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, மன்னார்குடி, திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் சேதுபாவாசத்திரம், பேராவூரணி ஆகிய வட்டார பகுதி மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், கோட்டூரிலும் தலா **200** மாணவ, மாணவியர் தொழிற்பயிற்சி பெறும் வகையில், விடுதியுடன் கூடிய **3** புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் **28** கோடியே **61** இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்படும்.

**3.** தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது ஒரு விரிவான சமூக பாதுகாப்பு திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு காப்புறுதி

வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் சேர்ந்த நாள் முதல் முழுமையான மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் 216 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மற்றும் 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் 2,093 படுக்கைகளோடு மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில், நடப்பாண்டில் ஒட்டன்சத்திரம், நெல்லியாளம், கள்ளக்குறிச்சி, சிதம்பரம், பவானி, குன்னூர், கீழ்குண்டா (ஊட்டி), பாப்பிரெட்டிப்பட்டி, அரவக்குறிச்சி, பூதலூர் ஆகிய பத்து இடங்களில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் 12 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 31,699 தொழிலாளர்கள் பயன் பெறுவர்.

✵ ✵ ✵

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## 19.07.2017

**மா**ண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசின் சார்பாக திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை சார்ந்த கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. மெட்ரோ இரயில் திட்டத்தின், இரண்டாம் கட்டமாக 45.77 கி.மீ. நீளத்தில் மாதவரத்திலிருந்து சிறுசேரி வரையிலும், 17.12 கி.மீ. நீளத்தில் சென்னை புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து கலங்கரை விளக்கம் வரையிலும் மற்றும் 44.66 கி.மீ. நீளத்தில் மாதவரத்திலிருந்து சோழிங்கநல்லூர் வரையிலும் மொத்தம் 107.55 கி.மீ. நீளத்தில் மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களை 85,047 கோடி ரூபாய் என்ற உத்தேச மதிப்பீட்டளவில் செயல்படுத்துவதற்கு மாநில அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காகவும், நிதியுதவிக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் கலங்கரை விளக்கத்தில் இருந்து வடபழனி வழியாக சென்னை புறநகர் பேருந்து நிலையம் வரை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நான்காவது வழித்தடத்தினை, விருகம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய பகுதிகளில் ஆற்காடு சாலையில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு, கலங்கரை விளக்கம் முதல் வடபழனி, போரூர் வழியாக

பூந்தமல்லி வரை நீட்டிப்பு செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான விரிவான துணைத் திட்ட அறிக்கையை (Supplementary DPR) தயாரிக்கும் பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொள்ளும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் சுமார் 3,850 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

2. சென்னையைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாநகரில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலை தீர்க்கும் வகையில், புதிய மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான விரிவான சாத்தியக்கூறு / திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணியினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொள்ளும். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் மூலமாக ஜெர்மன் நிதி நிறுவனமான கே.எப்.டபுள்யூ (KFW)-விடம் நிதியுதவி பெறப்படும்.

3. மாநிலச் சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள மலை மற்றும் வனப் பகுதிகளில் வாழும் மிகவும் பின்தங்கிய மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக ஒரு திட்டம் வகுக்கப்படும். அடிப்படை வசதிகளை அளிப்பதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல், குறைந்த மக்கட்தொகை கொண்ட குக்கிராமங்களை இணைக்க சாலை மற்றும் போக்குவரத்து வசதி செய்தல், பல்லுயிர் பாதுகாப்பு, அழிக்கப்பட்ட மற்றும் வளம் குன்றிய வனப் பகுதிகளை பசுமையமாக்கல், மண் அரித்தலை தடுத்தல் மற்றும் நீர்வளத்தினை மேம்படுத்துதல், வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழில்களை மேம்படுத்தி, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், சுற்றுச்சூழல் குறித்த கல்வி, நீராதாரத்தினை மேம்படுத்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டம் மாநிலத் திட்டக் குழுவால் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

# தமிழ் வளர்ச்சி (ம)
# செய்தி மக்கள் தொடர்புத் துறை

## 19.07.2017

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழர்களின் உயரிய பண்பாட்டுப் பாரம்பரியத்தினைப் பறைசாற்றும் வகையில், தமிழர் பண்பாட்டுப் பாரம்பரிய அருங்காட்சியகம் 50 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென இந்த ஆண்டு முதற்கட்டமாக, 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

2. சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் (18.02.1860 – 11.02.1946) ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிராக தம் வழக்கறிஞர் தொழிலையே துறந்த பெருந்தகை, தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுத்தவர், அவர்கள் நலனுக்காகப் பல போராட்டங்களில் பங்கேற்றவர், இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் தந்தை, இந்தியத் தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடி, அறிவியல் தமிழறிஞர், பொதுச் சொத்துகள் மக்கள் நலனுக்காகப் பயன்பட வேண்டும் என்கிற பொதுவுடைமைக் கருத்தை வலியுறுத்தியவர், "பொதுவுடைமை இயக்கத்தின் விதிகள் மனித நேயத்துக்கு இசைவானது" என்று வலியுறுத்தியவர்.

அவர்தம் வழியில், தமிழில் அறிவியல் கருத்துக்களை நூலாக எழுதுபவர்களிலும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், சமத்துவக் கொள்கைக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும்,

போராடுபவர்களிலும் சிறந்த ஒருவருக்கு தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக 'சிங்காரவேலர் விருது' ஆண்டுதோறும் சித்திரை தமிழ் புத்தாண்டு விருதுகளோடு வழங்கப்படும்.

விருதுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கிப் பொன்னாடை அணிவித்து, விருதாளர் சிறப்பிக்கப்படுவார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. ஜனநாயகத்தின் 4ஆவது தூணாக விளங்குபவர்கள் பத்திரிகையாளர்கள். காலம் நேரம் பாராமல் உழைக்கின்ற பத்திரிகையாளர்கள், தாங்கள் ஓய்வு பெற்ற பின், மன நிறைவோடும், மன அமைதியோடும் வாழ்ந்திட வேண்டும் என்பதில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள். அதனால்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் ஆட்சிப் பொறுப்பேற்ற போது 5,000/– ரூபாயாக வழங்கப்பட்டு வந்த பத்திரிகையாளர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தை 8,000/– ரூபாயாகவும், அதே போல, அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியத்தை 2,500/– ரூபாயிலிருந்து 4,750/– ரூபாயாகவும் உயர்த்தி வழங்கினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, இன்றைய பொருளாதாரச் சூழலையும், பத்திரிகையாளர் நலனையும் கருத்தில் கொண்டு, பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் 8,000/– ரூபாயிலிருந்து 10,000/– ரூபாயாகவும், அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் 4,750/– ரூபாயிலிருந்து 5,000/– ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✲ ✲ ✲

# இந்து சமய அறநிலையத் துறை

## 19.07.2017

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்துக்கள் சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் திருத்தலங்களுக்குச் சென்று வழிபட, மானியம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின் துவக்கி வைத்தார்கள்.

1. இந்த இரு யாத்திரைகளையும் மேற்கொள்ள தமிழகத்தில் உள்ள யாத்ரீகர்களிடமிருந்து நல்ல வரவேற்பு உள்ளதால், மானியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 500லிருந்து 1,000ஆக உயர்த்தப்படும். நடப்பு நிதியாண்டில் இதனால் அரசுக்கு ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

2. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களின் புனரமைப்புத் திருப்பணிகளுக்கு நிதி வழங்கும் நோக்குடன், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கி வந்தார்கள். 2017–2018ஆம் ஆண்டில், கிராமக் கோயில்களைப் புதுப்பிப்பதற்காக கோயில் ஒன்றிற்கு

தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவதுடன், இத்திட்டத்தில் பயன்பெறும் கோயில்களின் எண்ணிக்கை 500லிருந்து 1,000 ஆக இரட்டிப்பாக்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு கிராமப்புறங்களில், குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலிருந்து அதிக கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளதால், திருப்பணி செய்யப்படும் இத்தகைய கிராமப்புற திருக்கோயில்களின் எண்ணிக்கை 2,000 ஆக உயர்த்தப்படும். இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் திருக்கோயில் நிதியிலிருந்து 20 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# போக்குவரத்துத் துறை

## 10.01.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், முக்கியமானதாக விளங்குவது போக்குவரத்து வாகனங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இதில், சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், போக்குவரத்துத் துறையின் மேம்பாட்டிற்காகவும், போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலனை மேம்படுத்திடவும், எண்ணற்ற திட்டங்களை வகுத்து செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிப் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, போக்குவரத்துக் கழகங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை, அதிகப்படியான நிதி வழங்கி வந்துள்ளது.

கடந்த காலங்களில், அதிகரித்து வந்த செலவினத்தை ஈடு செய்வதற்கு ஏற்ப, நிரந்தர நிதி ஆதாரத்தை ஏற்படுத்தாததால், போக்குவரத்துக் கழகங்கள் பெரும் நஷ்டத்தில் இயங்கின. இச்சூழ்நிலையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

ஆட்சியில், போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமையை சரி செய்யும் பொருட்டு, நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவதற்கான உத்திகளை கடைபிடித்ததோடு, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு கடந்த 2011 முதல் இந்நாள் வரை, டீசல் விலை ஏற்றத்திற்கான தொகை 2,848.36 கோடி ரூபாயை அரசு மானியமாக வழங்கியுள்ளது. மேலும், மாண்புமிகு அம்மாவின் அரசு பொது மக்களின் நலன் கருதி, போக்குவரத்துக் கட்டணத்தை குறைந்த அளவிலேயே பராமரித்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை, அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்திட, 5,138.57 கோடி ரூபாய் அளவிற்கு நிதி வழங்கியுள்ளது. 2017–2018ஆம் ஆண்டில் மட்டும், ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கிட 1,397.39 கோடி ரூபாயும், தற்போது பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி உள்ளிட்ட நிலுவைத் தொகைக்காக, 291.99 கோடி ரூபாயும் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, போக்குவரத்துக் கழகங்களில் 30.11.2017 வரை பணியாற்றி ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகைக்காக 750 கோடி ரூபாயினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கும் என்பதை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். மேலும், இந்த அறிவிப்பின் மூலம் வழங்கப்படும் 750 கோடி ரூபாய் தொகையானது, போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக

அளிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது, அரசால் வழங்கப்படும் இத்தொகையுடன் சேர்த்து, போக்குவரத்துக் கழக ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வு காலப் பலன்களுக்காக மட்டும், இதுவரை தமிழ்நாடு அரசு 2,147.39 கோடி ரூபாய் வழங்கியுள்ளது என்பதையும் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் கோரிக்கைகள் பலவற்றை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள், பொதுமக்களின் நலன் கருதி, தங்கள் போராட்டத்தை உடனடியாக கைவிட்டு, பணிக்குத் திரும்புமாறு இந்த அவையின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

* * *

# தமிழ் வளர்ச்சி (ம)
# செய்தி மக்கள் தொடர்புத் துறை

## 11.01.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் வரலாறும், தமிழ் மக்களின் பண்பாடும், மிகவும் தொன்மை வாய்ந்தவை ஆகும். பூமியில், முதல் மனிதன் தோன்றியது தமிழ் பேசும் நிலத்தில்தான் என்று மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் சொல் ஆராய்ச்சிகளால் விளக்கியுள்ளார்.

"வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

என்று, வடக்கே வேங்கட மலை முதல், தெற்கே குமரி வரை, 'தமிழ்நாடு' சீரோடும் சிறப்போடும் விளங்கியதை வரையறுத்துச் சொல்கிறார்.

தொடர்ந்து, இருபதாம் நூற்றாண்டில் இணையில்லாத் தமிழ்ப்பெருங்கவியாய் விளங்கிய மகாகவி பாரதியார்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றும்

"கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்றும்

'தமிழ்நாடு' என்ற உணர்வோடு பாடி அன்றைக்கே பரவசப்படுத்தினார்.

“நம் நாடு தமிழ்நாடு,
நாமெல்லாம் தமிழ் மக்கள்”

என்று புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் ஆணித்தரமாக உரைத்தார்.

இவ்விதமாக, ஆளுமைத் திறம்கொண்ட தமிழ்ப் புலவர்கள் ‘தமிழ்நாடு’ என்று வாயாரப் பாடி மனதார அழைத்த நாடு, நம் தமிழ்நாடு.

நம்மோடு ஆந்திரம், கருநாடகம், கேரளம் இணைந்து, ‘பிரசிடன்சி ஆப் மெட்ராஸ்’ என்று ஆங்கிலத்திலும், ‘சென்னை மாகாணம்’ என்று தமிழிலும் அழைக்கப்பட்டு வந்த நிலையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, மாநிலப் பிரிவினை ஏற்படுத்தப்பட்ட பிறகு, சென்னை மாகாணம் என்னும் பெயரை மாற்றித் ‘தமிழ்நாடு’ எனப் பெயர் மாற்றப்படவேண்டும் என்று அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் அரசின் முன்பாக 1956ஆம் ஆண்டு, ஜூலையில், கோரிக்கையினை தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் முன் வைத்தார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலான அரசு அமைந்தவுடன், 1967ஆம் ஆண்டு அப்போதைய “சென்னை மாகாணத்திற்கு” “தமிழ்நாடு” என்று பெயர் சூட்ட, சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, 1969ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் நாள் “தமிழ்நாடு” என்று நமது மாநிலத்திற்கு பெயர் சூட்டப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 2ஆவது உலகத் தமிழ் மாநாட்டினையும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 5ஆவது உலகத் தமிழ் மாநாட்டினையும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா

அவர்கள் 8ஆவது உலகத் தமிழ் மாநாட்டினையும் சிறப்பாக நடத்தி, தமிழின் பெருமையையும், தொன்மையையும் உலகறியச் செய்தார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழுக்கென்று தனிப் பல்கலைக்கழகத்தினை தஞ்சாவூரில் நிறுவினார்கள். மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை தோற்றுவித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையிலும், தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும், சித்திரை முதல் நாளை மீண்டும் தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்தார்கள். உலக நீதி நூலான திருக்குறளை அதிக மக்கள் பேசும் சீன, அரபு மற்றும் கொரிய மொழிகளிலும், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் மற்றும் ஔவையாரின் ‘‘ஆத்திச் சூடி’’ ஆகியவற்றை சீன மற்றும் அரபு மொழிகளிலும், மொழி பெயர்த்து தமிழர்களின் பெருமைகளை உலகறியச் செய்தார்கள். தமிழ் அறிஞர்களை சிறப்பிக்கும் வகையில்

‘‘முதலமைச்சர் கணினித் தமிழ் விருது’’,
‘‘தமிழ்த் தாய் விருது’’
‘‘தமிழ்ச் செம்மல் விருது’’
‘‘அம்மா இலக்கிய விருது’’

போன்ற 55 விருதுகளை அறிவித்தார்கள்.

தமிழுக்கு மேலும் மகுடம் சூட்டும் வகையில், தமிழ் மொழியின் தொன்மை, இலக்கியம், இலக்கணம் மற்றும் பண்பாடு தொடர்பான ஆய்வுகள் மேற்கொண்டு, தமிழ் மொழியின் சிறப்பினை ஆவணப்படுத்தி உலகெங்கும் கொண்டு செல்ல, அமெரிக்காவில் உள்ள ‘ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில்’ தமிழ் இருக்கை அமைத்திட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, 10 கோடி ரூபாய் வழங்கி உள்ளது.

வரும் ஜனவரி 14ஆம் நாள், வரலாற்றுச் சிறப்புமிக்க நமது மாநிலம் "தமிழ்நாடு" என்ற பெயரோடு 50ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு "தமிழ்நாடு" பொன் விழா ஆண்டாக மாண்புமிகு அம்மாவின் அரசு கொண்டாட முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நம் கண் போன்ற தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் பெருமையை பறை சாற்றும் வகையில், கலை, விளையாட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகள் சென்னையிலும், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக நடத்தப்படும். தமிழ் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் இளம் தமிழ் ஆய்வாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, சென்னையில் நடைபெறும் நிறைவு விழாவில் இவர்கள் அனைவரும் சிறப்பிக்கப்படுவார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, "தமிழுண்டு, தமிழ் மக்களுண்டு - இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்ப, தமிழ் மொழியையும், தமிழ்நாட்டையும் கண்ணின் மணி போல தொடர்ந்து காத்து வரும் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன்.

✵ ✵ ✵

# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை

## 01.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை குறித்த அறிவிப்பினை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற குரூப்-1 பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளில் பங்கு பெறுவதற்கான வயது உச்சவரம்பினை உயர்த்திடுமாறு பல்வேறு தரப்பினரிடம் இருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. அதன் அடிப்படையில், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகளுக்கு உள்ள வயது உச்சவரம்பினைப் போல, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்-1, 1-A, 1-B பணியிடங்களுக்கு தற்போதுள்ள SC/ST/MBC/BC & DNC பிரிவினருக்கான வயது உச்சவரம்பு **35**லிருந்து **37** ஆகவும், இதர பிரிவினருக்கு தற்போதுள்ள வயது உச்சவரம்பு **30**லிருந்து **32** ஆகவும் உயர்த்தப்படுகிறது என்பதை இப்பேரவைக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## 01.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மிகப் பெரிய வனப்பகுதிகளைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். வன வளத்தை மேம்படுத்துவதிலும், காப்பதிலும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே வனத்துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இந்த பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டின் இலையுதிர் காடுகள் வறட்சியான காலங்களில் காட்டுத் தீயினால் பாதிப்புக்குள்ளாகக் கூடியவை. பெரும்பாலான காட்டுத் தீ நிகழ்வுகள் மனிதத் தவறுகளால் நிகழ்பவை. காட்டுத் தீயினைக் கட்டுப்படுத்த வனத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தீயினால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய காட்டுப் பகுதிகள் பரவலாக உள்ளதால், களத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு காட்டுத் தீயினை கட்டுப்படுத்தவும், துரதிருஷ்டவசமாக அத்தீயில் சிக்கிக் கொள்ளும் மக்களை மீட்க சிறப்பு பயிற்சி மற்றும் அடிப்படை உபகரணங்கள் வழங்கவும் 2 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. தற்போது வனத்துறை தலைமை அலுவலகம் பனகல் மாளிகையில் செயல்பட்டு வருகிறது. அங்குள்ள இடப்பற்றாக்

குறையை கருத்தில் கொண்டு, வேளச்சேரியில் அமைந்துள்ள வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் வனத்துறை தலைமை அலுவலகக் கட்டடம் 70,000 சதுர அடி பரப்பளவு கொண்ட இரு தொகுதி கட்டடங்களாக 30 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

3. வனச் சரகங்களுக்கு வழங்கிட 125 புதிய ஜீப்புகள், 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

4. தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியின மக்களின் கலாச்சாரம் மற்றும் சூழல் நட்பு வாழ்க்கையை அடையாளம் கண்டு, அவர்களின் கலாச்சார வளமையை மேம்படுத்தவும், இயற்கை நட்பு வாழ்க்கை முறையைத் தெரியப்படுத்தவும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பக புற எல்லைப் பகுதியில் அருங்காட்சியகம் மற்றும் பழங்குடியினர் சூழல் கலாச்சார கிராமம் ஒன்று 7 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இது தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை பெரிய அளவில் ஏற்படுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

# பள்ளிக் கல்வித்துறை

## 01.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு அளப்பரிய முக்கியத்துவம் அளித்து வந்தார். மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்பட்டு வரும் அம்மாவின் அரசு தொடர்ந்து ஏழை, எளிய மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பள்ளிக் கல்வித்துறை சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

**1.** பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதி அனைத்துப் பள்ளிகளிலும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலாக குடிநீர் வசதிகள் தேவைப்படும் **2,448** அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் **48** கோடியே **96** இலட்சம் ரூபாய் செலவில் சுத்தமான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

**2.** அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் அனைத்துப் பாடங்களையும் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாக **2,283** திறன் வகுப்பறைகள் (Smart Classes) 42 கோடியே **92** இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

3. நடப்பு கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ள புதிய பாடத்திட்டத்தினை மாணவர்களுக்கு சீரிய முறையில் பயிற்றுவிக்க ஏதுவாக, அனைத்து ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சி வழங்கப்படும். மேலும், தலைமை ஆசிரியர்கள் அவர்களது தலைமைப் பண்பினை மேம்படுத்திக்கொள்வதற்காக பயிற்சியும், ஆய்வு அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், தேசிய ஆசிரியர் தகவுக்கான (National Teacher Portal) கட்டகங்கள் (Modules) உள்ளீடு செய்தல் சார்ந்த பயிற்சியும் மற்றும் இதர பயிற்சிகளும் 35 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

4. மாவட்டத்திற்கு ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி வீதம் 32 மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 32 பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கல்வி கற்பிக்கும் தரத்தை மேலும் உயர்த்தும் வகையிலும், வளர்ந்துவரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, இப்பள்ளிகள் மாதிரிப் பள்ளிகளாக செயல்படும் விதத்தில், ஒரு பள்ளிக்கு 50 இலட்சம் ரூபாய் வீதம் 16 கோடி ரூபாய் செலவில் மாதிரி பள்ளிகள் உருவாக்கப்படும்.

5. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அரசு பள்ளிகளில் மாணவர்களுக்கான திறன் அட்டை வழங்கும் முன்னோடித் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திறன் அட்டையில் பல்வேறு புதிய அம்சங்கள் மற்றும் ஆதார் எண் இணைக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட திறன் அட்டையாக நடப்பு கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவிகளுக்கும் 11 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

❋ ❋ ❋

# உயர்கல்வித் துறை

## 01.06.2018

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

கடந்த ஏழு வருடங்களில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 56 அரசு / பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 4 அரசு பொறியியல் கல்லூரிகள், 19 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு உயர்கல்வித் துறையில் இந்த ஆண்டு செயல்படுத்த உள்ள புதிய திட்டங்களை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டிலுள்ள 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அனைத்தும் நடப்பு கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்படும். இதற்கென ஆண்டிற்கு 152 கோடியே 20 இலட்சம் ரூபாய் தொடரும் செலவினம் ஆகும்.

2. 2011–2012 முதல் 2017–2018ஆம் கல்வியாண்டு வரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,232 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. 2018–2019ஆம் கல்வியாண்டில் 264 புதிய பாடப் பிரிவுகள் (68 இளங்கலை, 60 முதுகலை, 136 ஆராய்ச்சி) அறிமுகப்படுத்தப்படும். இப்பாடப் பிரிவுகளைக் கையாளுவதற்கு 683 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும். இதற்கென அரசுக்கு தொடரும் செலவினமாக 68 கோடியே 46 இலட்சம் ரூபாய் ஏற்படும். இப்பாடப் பிரிவுகளின் தேவைக்கென 324 வகுப்பறைக் கட்டடங்கள், 50 ஆய்வகங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் 62 கோடியே 75 இலட்சம் ரூபாயில் அமைக்கப்படும்.

3. தமிழ்நாட்டில் பர்கூர், கோயம்புத்தூர், காரைக்குடி, சேலம், திருநெல்வேலி மற்றும் வேலூரில் உள்ள 6 அரசு பொறியியல் கல்லூரிகளிலுள்ள அரசு விடுதிகளில் தலா 150 மாணாக்கர்கள் தங்குவதற்கு ஏதுவாக 3 நபர்கள் தங்கும் வசதியுள்ள 50 அறைகள் கொண்ட விடுதிகள் 37 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## 01.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அளப்பரிய வளர்ச்சியினை அடைந்து இருக்கின்ற தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பொதுமக்களுக்கான சேவைகளை விரைந்து வழங்கி வருகின்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, அதனை முன்னெடுத்து செல்ல பல நடவடிக்கைகளை முனைப்புடன் எடுத்து வருகிறது.

அந்த வகையில், நடப்பாண்டில் பின்வரும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. தொழில் முனைவோர்களுக்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த வணிகத்தைத் தொடங்க ஏதுவாக, கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சியில் உள்ள எல்கோசெஸ்ஸில் 2 இலட்சத்து 50 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் திருச்சியில் ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், இரண்டு தகவல் தொழில்நுட்பக் கட்டடங்கள் கட்டப்படும்.

2. தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்புகளான TNSWAN, TNSDC மற்றும் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் மின் ஆளுமை சேவைகளை இணைய

அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகளிலிருந்து கண்காணித்து, தடங்கலற்ற மற்றும் பாதுகாப்பான இணைய சேவையினை வழங்கும் பொருட்டு “தமிழ்நாட்டிற்கான இணைய பாதுகாப்புக் கட்டமைப்பு திட்டம்” (Cyber Secuirty Architecture for Tamil Nadu) 21 கோடியே **39** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எல்காட் நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் தடையற்ற இணையவழிச் சேவைகள் மற்றும் அரசு துறைகளின் தரவுகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

**3.** தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அதன் சந்தாதாரர்களுக்கு தற்போது தரமான வரையறையில் (SD-Standard Definition) டிஜிட்டல் கேபிள் டிவி சேவை வழங்கி வருகிறது. அதனை மேம்படுத்தும் விதமாக, உயர் வரையறைத் (HD-High Definition) தரத்தில் மிக துல்லியமான சேவையை “HD செட்டாப் பாக்ஸ்” வாயிலாக வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## 05.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று, ஜூன் 5, "உலக சுற்றுச்சூழல் தினம்". சமுதாயம் நலமாக வாழவும், வளமுள்ள நாடு உருவாகவும் இன்றியமையாததாக விளங்குவது சுற்றுச்சூழல். இத்தினத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் உறுதி எடுப்போம். சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சூழல் துறை மூலமாக புரட்சிகரமான திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றினார்கள். அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு தொடர்ந்து அதனைப் பின்பற்றி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், "பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஆய்வு செய்யும் வல்லுனர் குழு" என்ற சிறப்புக் குழுவினை அமைத்தார்கள்.

இந்த வல்லுனர் குழு, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் குவளைகள் போன்ற பொருட்களை தடை செய்யவும், பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் வாழை இலைகள், பாக்குமட்டை தட்டுகள், தாமரை இலைகள் போன்றவற்றின் பயன்பாட்டினை ஊக்குவிக்கவும் ஆலோசனை வழங்கியது.

இவற்றில், அன்றாடம் மக்களுக்குத் தேவைப்படும் பால், தயிர், எண்ணெய், மருத்துவப் பொருட்களுக்கான உறைகள் போன்ற

பொருட்களுக்கான பிளாஸ்டிக் உறைகளுக்கு மட்டும் விலக்கு அளிக்க பரிந்துரைத்துள்ளது.

ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள், நிலங்களில் தேங்கிவிடும்போது, நீர்நிலைகளை நோக்கிச் செல்லும் நீரின் போக்கு மாறி, நீர் தேங்கி விடும் நிலை உருவாகிறது. மேலும், கழிவு நீர் செல்லும் பாதைகளிலும் இதன் பாதிப்புகள் அதிக அளவில் உள்ளது. இதனால் தண்ணீர் மாசடைகிறது. மேலும் மழைநீர், பூமியில் கசிந்து நிலத்தடியினை அடையாமல் போவதால், நிலத்தடி நீர் மட்டம் உயர்வதும் பாதிக்கப்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தேங்கி இருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளில் மழைநீர் தேங்கும்போது, கொசு உற்பத்தியாகி, அதன் மூலம் மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் பரவுகின்றன. மேலும், மழைநீர்க் கால்வாய்களில் அடைப்புகள் ஏற்பட்டு, வெள்ளப் பெருக்கு ஏற்படவும் காரணமாகிவிடுகிறது. மண் வளமும் பாதிக்கப்படுகிறது.

தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் எரிக்கப்படும்போது, அதன் மூலம் வெளியாகும் நச்சு வாயுவின் மூலமாக மனிதன் மற்றும் உயிரினங்கள் சுவாசிக்கும் காற்றும் மாசடைகிறது.

உணவுப் பொருட்களுடன் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் பிற உணவுகளுடன் சேர்ந்து உண்ணும் நிலை ஏற்படுவதனால், கால்நடைகள் மற்றும் வன விலங்குகளின் உயிரிழப்புக்கும் பிளாஸ்டிக் பொருட்கள் காரணமாகி விடுகிறது.

மேலும், பிளாஸ்டிக் பொருட்கள், பல ஆண்டுகள் ஆனாலும் மக்காத தன்மை உடையதால், அவற்றை அழிப்பதோ, ஒழிப்பதோ இயலாத காரியம். இவ்வாறு நிலம், நீர், காற்று போன்ற பல்வேறு நிலையில் மாசு ஏற்பட்டு, மனித உயிருக்கும், சுகாதாரத்திற்கும் பிளாஸ்டிக் பொருட்கள் பெரும் தீங்கு விளைவிக்க காரணமாகி விடுகிறது. எனவே, இவற்றை அறவே தவிர்ப்பது இன்றைய சூழ்நிலையில் கட்டாயமாகிறது.

மேற்படி பாதிப்புகளை கருத்தில் கொண்டும், இந்தத் தீங்கினை நம் எதிர்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லக்கூடாது என்ற உயரிய நோக்கத்திலும், தமிழ்நாட்டில் 2019ஆம் ஆண்டு, ஜனவரி 1 முதல் பால், தயிர், எண்ணெய், மருத்துவப் பொருட்களுக்கான உறைகள் தவிர, தடிமன் வேறுபாடின்றி, இதர மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் தேநீர் / தண்ணீர்க் குவளைகள், தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல் மற்றும் பிளாஸ்டிக் கைப்பைகள், பிளாஸ்டிக் கொடிகள் உள்ளிட்ட பொருட்களை தயாரித்தல், விற்பனை செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றை சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986இன் கீழ் தடை செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு செய்து, தமிழ்நாடு முழுவதும் தடை செய்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்களும், வியாபாரிகளும் மேற்படி பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக, துணிப் பைகள், காகித உறைகள் போன்ற மக்கும் பொருட்களைப் பயன்படுத்த பழகிக்கொள்ள ஏதுவாக, மேற்படி தடைகளை உடனடியாக அமல்படுத்தாமல், 2019, ஜனவரி மாதம் 1ஆம் தேதி முதல் அமல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டமான 'மழைநீர் சேகரிப்புத் திட்டம்', பொதுமக்களின் ஒத்துழைப்போடும், பங்களிப்போடும், வெற்றிகரமாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு, நிலத்தடி நீர் பெரிய அளவில் செறிவூட்டப்பட்டது.

அதே போன்று, உலக சுற்றுச்சூழல் தினமான இன்று, உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடும், பங்களிப்போடும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்த இருக்கும் "பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாட்டை" நம் எதிர்கால சந்ததியினருக்கு பரிசளிப்போம்! என்று கூறி அமர்கிறேன்.

✵ ✵ ✵

# கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை

## 06.06.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் கால்நடைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், சமூகப் பொருளாதார மாற்றங்களை உருவாக்குவதிலும், வேலை வாய்ப்புகளை தோற்றுவிப்பதிலும் முக்கியப் பங்காற்றி வரும் சத்துள்ள உணவான பாலின் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலை கிடைக்கவும், நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் தங்கு தடையின்றி நியாயமான விலையில் கிடைக்கவும் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. எனவே தான், கால்நடை மேம்பாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அதற்கான திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே, மாண்புமிகு அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, இத்துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**1.** அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் சிறந்த கால்நடை மருத்துவ சேவைகளை வழங்க ஏதுவாக, சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்து வருகின்றது. அதன் அடிப்படையில் இதுவரை, **1,895** கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள்

கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 30 கால்நடை நிலையங்களுக்கு 10 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

2. கால்நடை வளர்ப்போருக்கும் விவசாயிகளுக்கும் மருத்துவம் மற்றும் ஈனியல் சம்பந்தமான நோய்களால் ஏற்படும் பொருளாதார இழப்பை தவிர்க்க, நவீன நோய் கண்டறியும் கருவிகளை கால்நடை நிலையங்களுக்கு வழங்குவது அவசியமாகும். அதனடிப்படையில், மாவட்டத்திற்கு ஒரு கால்நடை நிலையத்திற்கு என்ற அளவில், 32 கால்நடை நிலையங்களுக்கு தலா ஒரு நுண்ணலை நுண்ணாய்வுக் கருவியும், ஒரு கணினிமயமாக்கப்பட்ட ஊடுகதிர் கருவியும், 8 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

3. தமிழ்நாட்டில் தற்போது 6 மாநகராட்சிகளில் கால்நடை பன்முக மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய நிலையங்களை பிற மாநகராட்சிகளிலும் ஏற்படுத்தும் நோக்கோடு திண்டுக்கல், தஞ்சாவூர், வேலூர், தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் ஈரோடு மாநகராட்சிகள் ஒவ்வொன்றிலும் ஒரு கால்நடை நிலையம் கால்நடை பன்முக மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும். இந்த பன்முக மருத்துவமனைகளுக்கு அறுவை சிகிச்சைக்கூடம், உள்நோய் சிகிச்சை வசதி, நுண்ணலை நுண்ணாய்வுக் கருவி மற்றும் கணினிமயமாக்கப்பட்ட ஊடுகதிர் கருவி போன்ற வசதிகள் 6 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். அவை 24 மணி நேரமும் செயல்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 26 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் 32 மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் நோய்க் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக, மேலும் 2 புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள், 2 கோடி ரூபாய் செலவில் நாமக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தோற்றுவிக்கப்படும்.

4. கோமாரி நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் மூலம் மாநிலத்தின் 32 மாவட்டங்களில் 93.89 இலட்சம் மாட்டினங்களுக்கு 15ஆவது மற்றும் 16ஆவது சுற்று தடுப்பூசிப் பணி முறையே செப்டம்பர், 2018 மற்றும் மார்ச், 2019 ஆகிய மாதங்களில் 24 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

5. தமிழ்நாட்டில் நாட்டுக்கோழி முட்டை மற்றும் இறைச்சியின் தேவை அதிகரித்துள்ளதால், புழக்கடை கோழி வளர்ப்புத் தொழில் பெருமளவில் வெற்றியடைந்துள்ளது. எனவே, புழக்கடை கோழி வளர்ப்பை மேலும் ஊக்குவிக்க சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் 38,500 பெண் பயனாளிகளுக்கு, தலா 50 கோழிகள், 25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

6. திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் தற்போது 280 மாணவர்கள் பயிலுகிறார்கள். இம்மாணவர்களுக்கு கூடுதல் கட்டமைப்பு வசதிகளாக கூடுதல் வகுப்பறைகள், தேர்வு அறைகள், விடுதி வசதிகள் மற்றும் எச்.டி. மின்சக்தி ஆகிய பணிகள் ஒவ்வொரு கல்லூரிக்கும், தலா 14 கோடி ரூபாய் வீதம் 28 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

7. சென்னை பெருநகர நுகர்வோர்களின், பெருகி வரும் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் பால்பண்ணைகளின் கொள்ளளவை விரிவாக்கம் செய்ய வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகிறது. அதனடிப்படையில், தற்பொழுது நாளொன்றுக்கு 3.5 இலட்சம் லிட்டர் என்ற கையாளும் திறன் கொண்ட மாதவரம் மத்திய பால்பண்ணை, 10 இலட்சம் லிட்டர் பாலைக் கையாளும் திறன் கொண்ட புதிய தானியங்கி நவீனமயமாக்கப்பட்ட பால் பண்ணையாக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விரிவாக்கம் செய்யப்படும்.

8. சேலம் பால்பண்ணையின் பால் பதப்படுத்தும் திறன் நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து, 7 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு அதிகரிக்கப்படும். மேலும், நாளொன்றுக்கு 30 மெட்ரிக் டன் டெய்ரி ஒயிட்னர் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

9. வேலூர் – திருவண்ணாமலை மாவட்ட ஒன்றிய பால்பண்ணை நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்டது. தற்போதுள்ள பால்பண்ணை இயங்கும் இடம் பெங்களூர் நெடுஞ்சாலையில் பாலாறுக்கு அருகே அமைந்துள்ள காரணத்தினால், தற்போதுள்ள இடத்திலேயே விரிவாக்க பணிகள் மேற்கொள்வது இயலாததாக உள்ளது. இதனால், நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட புதிய பால்பண்ணை, 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்நுட்ப கலை நயத்துடனும், கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள், தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் பால் பதப்படுத்தும் உபகரணங்களுடன் புதிய இடத்தில் உருவாக்கப்படும்.

10. தஞ்சாவூர் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 55,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இப்பால்பண்ணை 25,000 லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் மட்டுமே கொண்டுள்ளது. இது ஒரு இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட, பால் பொருட்கள் தயாரிக்கும் வசதிகளுடன் கூடிய தானியங்கி பால்பண்ணையாக 75 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

11. மாவட்ட ஒன்றியங்களின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடனும், நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், 30 மாவட்டங்களில் மொத்தம் 500 பாலகங்கள் தலா 4 இலட்சம் ரூபாய் வீதம், 20 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

**12.** திருச்சி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 5,000 லிட்டர் ஐஸ்கிரீம் தயாரிக்கும் திறன் கொண்ட தொழிற்சாலை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். இந்த ஐஸ்கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலை, அதிநவீன வசதிகளுடன் கூடிய தானியங்கி ஐஸ்கிரீம் கலவை தயாரிக்கும் கருவி, கெட்டியாக்கும் அரை தானியங்கி சிப்பங்கட்டும் இயந்திரம், குளிரூட்டும் அமைப்பு மற்றும் குளிர்பதன சேமிப்பு அறைகள் கொண்டதாக அமையும்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, அவர்களின் வருவாயை பெருக்குவதற்கு முன்னோடி திட்டங்களைத் தீட்டி, மீனவர் நலன் காக்க மீன்பிடித் தடை காலத்தில் நிவாரணத் தொகை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது.

**13.** ஆழ்கடல் மீன்களை கையாளுவதற்கு ஏற்ற தரமான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், சென்னை மீன்பிடி துறைமுகத்தில் தற்போதுள்ள இட நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், ஒரு சூரை மீன்பிடி துறைமுகம் 200 கோடி ரூபாய் செலவில், திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர் குப்பத்தில் அமைக்கப்படும். இந்த மீன்பிடி துறைமுகம், ஆழ்கடல் சூரை மீன்பிடிப் படகுகள் கொண்டு வரும் மீன்களை கையாளுவதற்கும், ஏலமிடுவதற்கும், ஏற்ற உலகத் தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் அமைக்கப்படும்.

**14.** கடலூர் முதுநகரில், தற்போதுள்ள மீன்பிடி துறைமுகம், படகுகளை நிறுத்துவதற்கும், மீன்களை ஏலமிடுவதற்கும், வலை பின்னுவதற்குமான உலகத் தரம் வாய்ந்த கூடுதல் கரையோர வசதிகளுடன், 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

**15.** கன்னியாகுமரி மாவட்டம் 72 கி.மீ. நீள கடற்கரை கொண்ட மாவட்டமாகும். ஒவ்வொரு கிலோ மீட்டர் தூரத்திற்கும் ஒரு மீனவ கிராமத்தை கொண்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்ட

கடற்கரையோரங்களை தாக்கிய "ஒகி" புயல் மற்றும் சமீபத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் வள்ளவிளை, மார்த்தாண்டம்துறை மற்றும் நீரோடி கிராமங்களில், மீனவர்களின் வீடுகளும் உடைமைகளும் பலத்த சேதம் அடைந்தன. எனவே, அம்மீனவர்களின் இருப்பிடம் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களை ஆபத்தான அலைகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் மேற்படி மூன்று மீனவ கிராமங்களில் **116** கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறைந்த நீளமுள்ள தூண்டில் வளைவுச் சுவர்கள் அமைக்கப்படும்.

**16.** தற்போது தமிழ்நாட்டில் திலேப்பியா மீன் வளர்ப்பானது மிக லாபம் தரக்கூடிய ஓர் தொழிலாக வளர்ந்து வருகிறது. இதை கருத்தில் கொண்டு, திண்டுக்கல் மாவட்ட, பாலாறு புரந்தலாறு அணையில் திலேப்பியா மீன் தொழில் முனைவோர் பூங்கா, **6** கோடியே **97** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறி அமைகிறேன்.

✵ ✵ ✵

# வேளாண்மைத்துறை

## 08.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர், கரூர் மாவட்டங்களில் உள்ள குறுவை சாகுபடி செய்யும் பகுதிகளில், பிரதானமாக மேட்டூர் அணையின் நீர் இருப்பைப் பொறுத்தே குறுவை நெல் சாகுபடி அமைகிறது. வழக்கமாக, மேட்டூர் அணையின் நீர் மட்டம் 90 அடியாக இருக்கும் நிலையில், குறுவை நெல் சாகுபடிக்கு ஜுன் 12ஆம் தேதி அன்று பாசனத்திற்காக அணை திறக்கப்படும். அவ்வாறு ஜுன் 12ஆம் தேதியன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டால், மேற்கண்ட பகுதிகளில் 3.15 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

கடந்த 6 ஆண்டுகளாக, மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால், ஜுன் 12ஆம் தேதியன்று அணையினை பாசனத்திற்கு திறக்க இயலவில்லை. எனினும், டெல்டா வேளாண் பெருமக்களின் நலனையும், அவர்களின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள் நிலத்தடி நீரினைக் கொண்டு குறுவை நெல் சாகுபடியினை மேற்கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில், 2012ஆம் ஆண்டு 12 மணி நேர மும்முனை மின்சாரமும், 2013ஆம் ஆண்டிலிருந்து குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் அறிவித்து, செயல்படுத்தி வந்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் பெருமுயற்சியினாலும், வேளாண் பெருமக்களின் ஏகோபித்த ஆதரவினாலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தபட்சம் **2.07** இலட்சம் ஏக்கரிலிருந்து அதிகபட்சமாக **3.16** இலட்சம் ஏக்கர் வரையிலும், குறுவை நெல் சாகுபடி செய்து சாதனை படைக்கப்பட்டது. அதன் விளைவாக,

**2012**ஆம் ஆண்டில் **2.3** இலட்சம் மெட்ரிக் டன்னும்,

**2013**ஆம் ஆண்டில் **3.4** இலட்சம் மெட்ரிக் டன்னும்,

**2014**ஆம் ஆண்டில் **4.3** இலட்சம் மெட்ரிக் டன்னும்,

**2015**ஆம் ஆண்டில் **4.9** இலட்சம் மெட்ரிக் டன்னும்,

**2016**ஆம் ஆண்டில் **5** இலட்சம் மெட்ரிக் டன்னும்

அரிசி உற்பத்தி செய்து வேளாண் பெருமக்களால் சாதனை நிகழ்த்தப்பட்டது.

சென்ற ஆண்டு, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படி, கருநாடகா தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீரினை விடுவிக்காததால், மேட்டூர் அணையின் நீர் இருப்பு குறுவை நெல் சாகுபடி செய்ய போதுமானதாக இல்லை என்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, சென்ற ஆண்டில் குறுவை சாகுபடி செய்யும் நெல் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, **56** கோடியே **92** இலட்சம் ரூபாய் செலவில் குறுவை தொகுப்புத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியது.

மாண்புமிகு அம்மாவின் அரசு சட்ட ரீதியாக தொடர்ந்து போராடியதன் விளைவாக, மத்திய அரசு, காவேரி நதி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்து

**01.06.2018** அன்று அரசிதழில் வெளியிட்டது. அதன்படி, தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களை காவேரி நீர் மேலாண்மை ஆணைய உறுப்பினராகவும், நீர்வள ஆதாரத் துறையின் திருச்சி மண்டல தலைமைப் பொறியாளரை காவேரி நீர் முறைப்படுத்தும் குழு உறுப்பினராகவும் நியமனம் செய்து, **01.06.2018** அன்று மத்திய அரசிற்கு தெரிவிக்கப்பட்டது. கேரள அரசு தன்னுடைய பிரதிநிதியை **06.06.2018** அன்று நியமனம் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. புதுச்சேரியும் தனது பிரதிநிதியை பரிந்துரை செய்து அனுப்பியுள்ளது. கருநாடகா மட்டும் அதன் உறுப்பினர்களை நியமனம் செய்து இன்று வரை மத்திய அரசுக்கு பரிந்துரையை அளிக்கவில்லை என்று தெரிய வருகிறது.

டெல்டா மாவட்ட விவசாயிகள் பெரிதும் எதிர்பார்க்கின்ற குறுவை நெல் சாகுபடியை குறித்த நேரத்தில் துவக்கிட, காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை உடனே அமைத்து நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்று நாடாளுமன்ற துணை சபாநாயகர் அண்ணன் முனைவர் மு.தம்பிதுரை அவர்கள் தலைமையில், அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. நிதின் கட்கரி அவர்களை **06.06.2018** அன்று டெல்லியில் நேரில் சந்தித்து, எனது **05.06.2018** ஆம் நாளிட்ட கடிதத்தை அளித்தனர். காவேரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவராக மத்திய நீர்வள குழுமத்தின் தலைவர் திரு. மசூத் உசைன் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், பிற மாநிலங்கள் அவற்றின் உறுப்பினர்களை நியமிக்காமல் இருந்தாலும் கூட, இந்த ஆணையத்தின் கூட்டம் விரைவில் கூட்டப்படும் எனவும் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இக்கூட்டம் நடைபெற்று டெல்டா விவசாயிகளுக்கு உரிய தண்ணீர் கிடைக்கும் வரை, மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும். இவ்வாறான மாண்புமிகு அம்மா அரசின்

நடவடிக்கைகள் மூலமாக விரைவில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீர் கிடைக்கும் என நம்புகிறேன்.

தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 39.42 அடியாக மட்டுமே உள்ளது. வினாடிக்கு 2,190 கன அடி மட்டுமே நீர்வரத்து வந்து கொண்டிருக்கின்றது. இதைக்கொண்டு, குறுவை நெல் சாகுபடிக்காக வழக்கமாக திறக்கப்படும் நாளான ஜூன் 12ஆம் தேதியன்று அணையினை திறந்து விட இயலாத சூழ்நிலை உள்ளது. கால்வாய் பாசனம் இல்லாத காலங்களில் இதர நீர் ஆதாரங்களான வடிமுனைக் குழாய் மற்றும் ஆழ்துளை கிணறுகளிலிருந்து பெறப்படும் நீரினைக் கொண்டு டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்படும். எனவே, தண்ணீரை மிகவும் சிக்கனமான முறையில் பயன்படுத்தி, நடப்பாண்டில் குறுகிய கால நெல் மற்றும் பயறு வகைப் பயிரையும் சாகுபடி செய்வதற்காக, இந்த ஆண்டின் குறுவை தொகுப்புத் திட்டத்தினை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதன்படி,

- கடந்த ஆறு ஆண்டுகளில் வழங்கியது போல், டெல்டா மாவட்டங்களுக்கு இந்த ஆண்டும் விவசாயத்திற்கு 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும்.

- குறுவை பருவத்தில் 79,285 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கேற்ற வகையில், அதிக மகசூல் தரும் நெல் ரகங்களை குவிண்டாலுக்கு 1,750/– ரூபாய் மானியம் வீதம் 15,857 குவிண்டால் நெல் விதைகளை மானிய விலையில் விநியோகிப்பதற்கு 2 கோடியே 77 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

- வேளாண் இயந்திரங்களைக் கொண்டு நெல் நடவு வயலை குறித்த காலத்தில் திறம்பட தயார் செய்வதற்காக, 870 பவர் டில்லர்களும், 860 ரோட்டவேட்டர்களும்

50 சதவீத மானியத்தில் விநியோகிப்பதற்காக, 11 கோடியே 94 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

- ❖ டெல்டா பகுதியில் உள்ள நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கு சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் பதிவு செய்த விவசாயிகள் தங்கள் விண்ணப்பத்தை திரும்பப் பெற முன்வந்தால், 90 சதவீத மானியம் வழங்கப்படும். டெல்டா பகுதிகளில் 500 சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்கள் நிறுவுவதற்காக 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

- ❖ மின் இணைப்பு கிடைக்கப் பெறாத டெல்டா விவசாயிகளுக்கு உதவும் வகையில், 2 ஆயிரம் டீசல் இன்ஜின்கள், 50 சதவீத பின்னேற்பு மானியத்தில் வழங்குவதற்காக, 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இத்தகைய வேளாண் இயந்திரங்களை மானியத்தில் பெறுவதற்கு, இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ள உழவன் கைபேசி செயலி மூலம் பதிவு செய்து கொள்ளுமாறு விவசாயிகளை கேட்டுக்கொள்கிறேன்.

- ❖ நடவு இயந்திரங்களைக் கொண்டு நெல் நடவு செய்ய ஏக்கருக்கு 4,000/– ரூபாய் வீதம், ஒரு இலட்சம் ஏக்கர் பரப்புக்கு இயந்திர நடவு மேற்கொள்ள, 100 சதவீத மானிய உதவித்தொகை வழங்கப்படும். இதற்காக தமிழ்நாடு அரசு 40 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்யும். நுண்ணூட்டச் சத்து குறைபாடுள்ள 40,000 ஏக்கர் பரப்பளவில், நெல் நுண்ணூட்டக் கலவை 50 சதவீத மானியத்தில் விநியோகிக்கப்படும்.

- ❖ டெல்டா மாவட்டங்களில் துத்தநாக சத்து குறைபாடு உள்ள இடங்களில், துத்தநாக சல்பேட் உரத்தை பயன்படுத்துவதற்கு,

பின்னேற்பு மானியமாக ஏக்கருக்கு 200 ரூபாய் வீதம், 80 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு, ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், 30 ஆயிரம் ஏக்கரில் ஜிப்சம் பயன்படுத்துவதற்காக ஏக்கருக்கு முழு மானியமாக 600 ரூபாய் வீதம் பின்னேற்பு மானியமாக ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

❖ குறைந்த நாட்களில், குறைந்த நீரில், அதிக லாபம் தரக்கூடிய பயறு வகைப் பயிர்களை 12,500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கு, 60 சதவீத மானியத்தில் தரமான விதைகள், 50 சதவீத மானியத்தில் திரவ உயிர் உரங்கள், பயறு நுண்ணூட்டக் கலவை மற்றும் இலை வழி டிஏபி உரம் தெளிக்கவும், ஒரு கோடியே 13 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ பயறு வகைகளில், சிக்கனமாக பாசன நீரைப் பயன்படுத்தும் வகையில், 2,000 தெளிப்பு நீர் பாசன அமைப்புகளை நிறுவுவதற்கு சிறு குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து 100 சதவீத மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்குவதற்காக ஒரு கோடியே 99 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ காவேரி டெல்டா மற்றும் கல்லணைப் பாசனத்தின் கடைமடைப் பகுதியான வெண்ணாறு பகுதியின் மண் வளத்தினை அதிகரிக்கும் வகையில், பசுந்தாள் உர பயிர் சாகுபடி 15,000 ஏக்கரில் மேற்கொள்ள ஏக்கர் ஒன்றுக்கு 1,200/– ரூபாய் மானியத்தில் பசுந்தாளுர பயிர் விதைகள் விநியோகிக்கப்படும்.

❖ டெல்டா மாவட்ட விவசாயிகள், நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்தி, குறுவை சாகுபடி பரப்பினை அதிகரிக்கும்

நோக்கில், 4 அங்குல விட்டம் மற்றும் 6 மீட்டர் நீளத்தில் 30 PVC குழாய்கள் கொண்ட அலகு ஒன்றுக்கு 15,000/– ரூபாய் வீதம் 1,500 அலகுகளுக்கு மானியம் வழங்குவதற்காக, 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

❖ டெல்டா மாவட்டங்களில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மட்டுமல்லாது, வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவும், முதன் முறையாக குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தில், வேளாண் தொழிலாளர்களுக்கு உரிய வேலைவாய்ப்பை வழங்கும் வகையில் அமைக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, வாய்க்கால்களை தூர்வாருதல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், தோட்டக்கலை பயிர் சாகுபடிக்கு குழி எடுத்து நடவு செய்தல், உரக்குழி அமைத்தல் போன்ற பணிகளுடன், சிறு, குறு விவசாயிகளின் வயல்களில் மண் வரப்புகளை அமைத்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளுக்கு டெல்டா பகுதிகளில் உள்ள வேளாண் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவர். இதற்காக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் அரசு, 24 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசால் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக, இன்று 115 கோடியே 67 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த குறுவைத் தொகுப்புத் திட்டத்தின் காரணமாக, டெல்டா மாவட்டங்களில், குறுவை நெல் மற்றும் பயறு சாகுபடி மேற்கொண்டு, உயர் மகசூல் பெறவும், மண்வளம் மேம்படவும்

வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை உடனடியாக துவக்குவதற்கு துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வேளாண் பெருமக்கள் இதைப் பயன்படுத்திக்கொண்டு குறுவை சாகுபடியினை சிறந்த முறையில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த திட்டங்கள் அனைத்தும், வேளாண் பெருமக்கள் உரிய காலத்தில் சாகுபடி மேற்கொள்வதற்கு ஏதுவாக அறிவிக்கப்பட்டுள்ளன. எனினும், மத்திய அரசினை தொடர்ந்து வலியுறுத்தி, காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்து, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டிற்கு உரிய நீரினை பெறுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு துரித தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும், விரைவில் காவேரி நீர் மூலம் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு நீர் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

* * *

# எரிசக்தித் துறை

## 12.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் வளர்ச்சிக்கு மின்சாரம் பெரும் பங்கு வகிக்கிறது. எதிர்காலத் தேவையைக் கருத்திற்கொண்டு, மின் திட்டங்களைத் தீட்டி, தமிழ்நாட்டின் மின் நிறுவுத் திறனை கணிசமாக அதிகரித்துள்ளதோடு மட்டுமல்லாமல், அதற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல தொலைநோக்குத் திட்டங்களை முனைப்போடு செயல்படுத்தினார்கள். அதனால், இன்றும், என்றும், தமிழ்நாடு ஒரு மின்மிகை மாநிலமாக திகழும் என்பதில் ஐயமில்லை. நடப்பாண்டில், எரிசக்தித் துறையால் மேற்கொள்ளப்பட உள்ள புதிய மின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் பற்றி இந்த அவையில் அறிவிக்கிறேன்.

1. தமிழ்நாட்டில் பின்வரும் இடங்களில் 5 ஆயிரத்து 68 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 25 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும்.

அ) திருநெல்வேலி மாவட்டம், ஆரல்வாய்மொழி பகுதியில் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளிக்கொணர்வதற்காக, சமூகரெங்கபுரத்தில் ஒரு புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஆ) கடலூர் மாவட்டம், நெய்வேலி, சிவகங்கை மாவட்டம், கோந்தகை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், பரலி ஆகிய இடங்களில் மொத்தம் மூன்று புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 1,669 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இ) உடன்குடி அலகு – 1, 2x660 மெகாவாட் அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்றவும், 2x150 மெகாவாட் இந்த் (IND) பாரத் அனல் மின் நிலையத்தில் இருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்றவும் மற்றும் புதிய காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்றவும், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் 1,039 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

ஈ) சென்னை மாநகரத்தின் மின் கட்டமைப்பை மேம்படுத்த, சென்னை மாவட்டத்தில் கணேஷ் நகர் மற்றும் கே.கே.நகர்; திருவள்ளூர் மாவட்டத்தில் ஆவடி மற்றும் எண்ணூர்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் மறைமலை நகர் மற்றும் பல்லாவரம்; ஆகிய ஆறு இடங்களில் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 932 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

உ) மதுரை மாவட்டத்தில் கே.புதூர், திருநெல்வேலி மாவட்டத்தில் ராஜகோபாலபுரம், திருப்பூர் மாவட்டத்தில் கலிவேலம்பட்டி மற்றும் சேலம் மாவட்டத்தில் எடப்பாடி என மொத்தம் நான்கு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 716 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஊ) திருவண்ணாமலை மாவட்டத்தில் காரப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்தளூர், நாகை மாவட்டத்தில் ஆச்சாள்புரம், வேலூர் மாவட்டத்தில் மேல்பாடி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பாபநாசம், தருமபுரி மாவட்டத்தில் இலக்கியம்பட்டி, திருப்பூர் மாவட்டத்தில்

பணப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சின்னதடாகம், மதுரை மாவட்டத்தில் தானியமங்கலம் மற்றும் மாணிக்கம்பட்டி ஆகிய 10 இடங்களில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 110 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

2. தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நீர்த் தேக்கங்களில் நீர் ஆவியாவதைத் தடுக்கவும் மற்றும் சூரிய சக்தி கட்டாயக் கொள்முதல் அளவை அதிகரிக்கவும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமும், இந்திய சூரியசக்திக் கழகமும் இணைந்து முதன்முறையாக 250 மெகாவாட் மிதக்கும் சூரியசக்தி மின் நிலையங்கள் 1,125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாத்தியக்கூறின் அடிப்படையில் அமைக்கப்படும்.

3. 65 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள மோயாறு புனல் மின் நிலையத்தின் ஆயுட் காலத்தை மேலும் 25 ஆண்டுகள் நீட்டிப்புச் செய்திடவும், நிறுவு திறனை 3x12 மெகாவாட்டிலிருந்து 3x14 மெகாவாட்டாக அதிகப்படுத்திடவும், 67 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

4. 2023ஆம் ஆண்டு சூரிய எரிசக்தியில் 8,884 மெகாவாட் திறனை அடைவதற்கு ஏதுவாக "சூரிய எரிசக்திக் கொள்கை 2012" மாற்றி அமைக்கப்படும். இதன் மூலம், தமிழ்நாடு சூரிய எரிசக்திக் கொள்கை 2012, மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழ்நாடு தொலை நோக்குப் பார்வை 2023 மற்றும் தேசிய சூரிய இயக்கம் ஆகியவற்றின் நோக்கங்கள் ஒருங்கிணைக்கப்படும்.

5. மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டுக்கு வழங்கிய தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தின் படி, உயர்ந்த பொருளாதார மற்றும் சமூகக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், புதிய எரிசக்தி கொள்கை ஒன்று உருவாக்கப்படும்.

✵ ✵ ✵

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## 12.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது ஊரகப் பகுதிகளின் வளர்ச்சியில் தான் இருக்கிறது. எனவே தான், ஊரகப் பகுதி வாழ் மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில், ஊரகப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்காணும் திட்டங்களை அறிவிக்கின்றேன்.

1. ஊரகப் பகுதிகளில், குடியிருப்பு பகுதிகளின் சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்து வெளியேறும் திரவக் கழிவு நீர், சாலைகள் மற்றும் தெருக்களில் தேங்கி நோய் தொற்று ஏற்படாமல் பாதுகாக்க, தனிநபர் உறிஞ்சு குழிகளும், ஊரகப் பகுதிகளில், ஆழ்துளை கிணறு, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி போன்ற குடிநீர் அமைப்புகளை சுற்றி கழிவு நீர் தேங்காமல் தடுத்திட சமுதாய உறிஞ்சு குழிகள் என மொத்தம் 2 இலட்சத்து 500 உறிஞ்சு குழிகள் 168 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். இதனால் கழிவு நீர் வடிகட்டப்பட்டு நிலத்தடி நீர் செறிவூட்டப்படும்.

2. ஊரகப் பகுதிகளில் நடப்பாண்டில், 8 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 1,000 அங்கன்வாடி மையங்கள், 87 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

3. பழமையான மற்றும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்களுக்குப் பதிலாக,

நடப்பாண்டில் தலா 17 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், 500 புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 88 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

4. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் I-ஐ தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்தியதைத் தொடர்ந்து, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் II–னை செயல்படுத்த 2017–2018ஆம் ஆண்டு மத்திய அரசு அனுமதி வழங்கியது. இத்திட்டத்தின்கீழ், நடப்பாண்டில், 192 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 287 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும். மேலும், 10 உயர்மட்டப் பாலங்கள் கட்டப்படும்.

5. பல்வேறு வகையான சாலைகளை ஒரே திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 1,200 கோடி ரூபாய் செலவில் 5,500 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

6. ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதில் ஆழ்துளை கிணறுகள் முக்கிய குடிநீர் ஆதாரங்களாக உள்ளன. உப்பு அல்லது கடினத் தன்மை மற்றும் குடிநீரில் காணப்படும் இதர குறைகளை சீர்செய்து, பாதுகாக்கப்பட்ட குடிநீரினை மக்களுக்கு வழங்க நடப்பாண்டில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், குக்கிராமங்களில், எதிர் சவ்வூடு பரவல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

7. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அருகாமையில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கும், அடர்த்தியான மற்றும் அதிகமான மக்கள்தொகை கொண்ட பெரிய கிராம ஊராட்சிகளுக்கும், தெருவில் வைக்கும் 60,000 குப்பைத் தொட்டிகள் தலா 25,000 ரூபாய் மதிப்பில், 150 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**8.** ஊரகப் பகுதிகளில் பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் **25** ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகள் பழுதடைந்துள்ளதால், இவ்வீடுகளை பராமரிப்பு செய்து தரக் கோரி மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் பல்வேறு கோரிக்கைகள் மற்றும் மனுக்கள் தொடர்ந்து வருவதை ஒட்டி, பழுதடைந்த நிலையில் உள்ள **45,594** வீடுகளை ஒரு வீட்டிற்கு **50,000** ரூபாய் வீதம் மொத்தம் **227** கோடியே **97** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதுநீக்கம் செய்யப்படும். இதற்கான தொகை மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**9.** கடந்த 7 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு **41,180** கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. **2017–2018**ஆம் ஆண்டில் விதி எண் **110**இன் கீழ் **7,000** கோடி ரூபாய் வங்கிக் கடன் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, அதனை விஞ்சி **8,332** கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கி, **119** சதவீதம் சாதனை எய்தப்பட்டது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசால், மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, நடப்பாண்டில் **11,000** கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## 12.06.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை உயர்ந்த அளவில் நிறைவேற்றிக் கொடுப்பதற்கும், பொது சுகாதாரத்தை பராமரிப்பதற்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு முனைப்பான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இம்மாமன்றத்தில் கீழ்க்காணும் அறிவிப்புகளை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டில் உள்ள 135 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (சென்னை தவிர) 35 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டம் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், 3 மாநகராட்சிகள், 25 நகராட்சிகளில் பாதாள சாக்கடைப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, ஒரு மாற்று ஏற்பாடாக, கசடுக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்த முடிவெடுத்து 51 நகராட்சிகள் மற்றும் 59 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் 49 நகரங்களில் கசடுக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் 217 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**2.** மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர்த் திட்டங்களில் குழாய்கள் பதித்தல் மற்றும் மழையினால் சேதமடைந்த சாலைகளை மறு சீரமைக்கும் பொருட்டு, நடப்பாண்டில் **1,350** கிலோ மீட்டர் நீளத்திற்கு **1,000** கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**3.** பேரூராட்சிப் பகுதிகளில் **200** கோடி ரூபாய் மதிப்பீட்டில், சாலை மேம்பாட்டுப் பணிகள் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தொழில் துறை

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக விளங்கும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, சாதகமான தொழில் கொள்கைகளை வகுத்து, தொழில் முனைவோர்களை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. அந்நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் உள்ள கண்ணுடையான்பட்டி, கே.பெரியபட்டி மற்றும் சத்திரப்பட்டி ஆகிய வருவாய் கிராமங்களில் சுமார் 1,077 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சுமார் 5,000 நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவர். இப்பூங்காவில், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், தண்ணீர் வழங்குவதற்கான வசதிகள், மழைநீர் வடிகால் வசதி, சாலையோர மரங்கள் மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற வசதிகள் 96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

**2.** சிப்காட் நிறுவனத்தால், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் உள்ள பெலாக்குப்பம், கொல்லார் மற்றும் வெண்மணியாத்தூர் ஆகிய வருவாய் கிராமங்களில் சுமார் **720** ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சுமார் **5,000** நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவர். இப்பூங்காவில், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், தண்ணீர் வழங்குவதற்கான வசதிகள், மழைநீர் வடிகால் வசதி, சாலையோர மரங்கள் மற்றும் தெரு விளக்குகள் போன்ற வசதிகள், **52** கோடியே **50** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மூலம் செயல்படுத்தப்படவிருக்கும் பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுகின்றேன்.

**1)** தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப பொருட்கள் மேம்படுத்துதலுக்கு உதவி செய்யவும், தொடக்க நிலை தொழில் முனைவோருக்கு ஆரோக்கியமான சூழலை உறுதிப்படுத்தவும், “தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை **2018–2023**”ஐ உருவாக்கி, தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்த உள்ளது. இக்கொள்கையினால், அனைத்துத் துறைகளிலும் உள்ள திறமையுள்ள தனி நபர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் தங்களுடைய புத்தாக்க எண்ணங்களை செயல்படுத்தி, சிறந்த தொழில் முனைவோர்களாக உருவாவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க முடியும். “தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை–**2023**”இல் குறிப்பிடப்பட்டுள்ள, ஆண்டுக்கு **11** சதவீத மாநில மொத்த உள்நாட்டு வளர்ச்சி வீதத்தினை அடையும் வகையில் இக்கொள்கை அமையும்.

**2)** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கி வரும் முதலீட்டு மானியச் சலுகைக்கு இணையாக புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கும்,

அதிகபட்ச மானியத் தொகை 25 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

3) 2018–2019ஆம் நிதியாண்டில், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், ஆலத்தூர் கிராமத்தில், 70.33 ஏக்கர் நிலப்பரப்பில், 84 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சிட்கோ தொழிற்பேட்டை– பகுதி 2 நிறுவப்படும்.

4) புத்தாக்க பற்றுச் சீட்டு திட்டம் மூலமாக புத்தாக்கம் சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு புத்தாக்கம் / தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்கள் மூலமாக புத்தாக்கத்தினை உருவாக்குதல் அல்லது கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு பரிசோதனைக் கூடங்கள் மூலமாக முன்மாதிரி மேம்பாடு மற்றும் பொருட்கள் பரிசோதனை செய்வதற்காக மானியம் வழங்கப்படும். உலக அளவில் பல நாடுகளில் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புத்தாக்கத் திறனை அதிகரித்தல் ஆகும். இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 400 தொழில் முனைவோர்களுக்கு புதுமைகளைப் புகுத்துவதற்காகவும் மற்றும் சிறிய அளவிலான தொழில்நுட்ப சிக்கல்களை அறிவுசார் ஆலோசகர்களுடன் இணைந்து சரி செய்வதற்காகவும், அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக 20 கோடி ரூபாய் செலவிடப்படும்.

05.06.2018 அன்று இப்பேரவையில் நான் அறிவித்த “ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடை” அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் விதமாக, எளிதில் மக்கக் கூடிய மாற்றுப் பொருட்களை கண்டறியவும் இத்திட்டம் பெரிதும் உதவும்.

**5)** தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டுமயமாக்கவும், வெளிநாட்டு ஒத்துழைப்பைப் பெறவும், தமிழ்நாட்டில் முதலீட்டை ஈர்க்கவும், “குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு” ஒன்று உருவாக்கப்படும். தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு விரைவாகவும், உரிய காலத்திலும் அனுமதி வழங்கவும், ஒற்றைச்சாளர முறையை செயல்படுத்துவதற்காக வேண்டி ஒருங்கிணைப்பு முகமையாகவும் இது விளங்கும். மேலும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான முதலீடுகளை மேம்படுத்துதல், வணிக அமைப்புகள், தொழிலக அமைப்புகள் மற்றும் முதலீட்டுக் கொள்கையை முன்மொழிபவர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் படிப்படியாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல் ஆகியவற்றையும் ஒருங்கிணைக்கும் முகமையாகவும் இந்த அமைப்பு செயல்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# உள், நீதி நிருவாகம் மற்றும் சிறைத் துறை

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நீதி நிருவாகம் துறையின் மூலம் செயல்படுத்த உள்ள பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் அறிவிக்கின்றேன்.

1. கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு இருசக்கர வாகன நிறுத்தத்துடன் கூடிய கட்டடம் மற்றும் குடியிருப்புகள், 4 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்புகள், 6 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தின் மேல் தளங்களில் சார்பு நீதிமன்றம், கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு கூடுதலாக இரண்டு நீதிமன்ற அறைகள் மற்றும் அலுவலகங்கள், 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

4. தேனி மாவட்டம், ஆண்டிபட்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு உணவகம், இருசக்கர வாகன நிறுத்தத்துடன் கூடிய ஒருங்கிணைந்த கட்டடம் மற்றும் வாகன நிறுத்தத்துடன் கூடிய

இரண்டு குடியிருப்புகள், 6 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

5. விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம், சைக்கிள் நிறுத்தம், வாகன நிறுத்தம், உணவகம், பொது கழிப்பிடம் மற்றும் சுற்றுச் சுவருடன் கூடிய குடியிருப்பு, 8 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் மற்றும் குடியிருப்புகள், 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

7. தருமபுரி மாவட்டம், அரூரில் சார்பு நீதிபதி, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

8. திருச்சி மாவட்டம், துறையூரில் உள்ள சார்பு நீதிபதிக் குடியிருப்பு கட்டடம் கட்டப்படும்.

9. திருவண்ணாமலை மாவட்டத்தில் 6 நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

10. விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் விரைவு நீதிமன்ற நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டப்படும்.

11. கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரத்தில் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

✵ ✵ ✵

# சிறைத் துறை

## 13.06.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறைத் துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. சென்னை புழல் மத்திய சிறை–2இல் உள்ள இட நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, 500 சிறைவாசிகளை கூடுதலாக அனுமதித்திடும் வகையில், 15 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

2. புழல் மத்திய சிறை–2, வேலூர், கடலூர், திருச்சி, கோயம்புத்தூர், சேலம், மதுரை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய சிறைகளில் பணிபுரிந்து வரும் உதவி சிறை அலுவலர்களுக்கு 50 குடியிருப்புகள், 10 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. சிறைகளுக்குள் சிறைவாசிகள் செல்லிடத் தொலைபேசியை உபயோகப்படுத்துவதை தடுத்திடும் பொருட்டு, ஏற்கெனவே 9 மத்திய சிறைகளில் செல்லிடத் தொலைபேசியை செயலிழக்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, சென்னை புழல் மத்தியசிறை–1 மற்றும் 2, திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை மற்றும் 5 பெண்கள் தனிச்சிறைகளில் நடப்பாண்டில் 10 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செல்லிடத் தொலைபேசியை செயலிழக்கும் கருவிகள் பொருத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை சார்ந்த பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் வழங்க தமிழ்நாடு அரசால் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டன. மதுரையில் செயல்படும் அன்னை சத்தியா அரசு குழந்தைகள் காப்பகம், 1986ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சிக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. தற்போது இக்கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், ஒரு புதிய கட்டடம், துயிற்கூடம், குழந்தைகள் நலக் குழு அறை, வகுப்பறை, தொழிற் பயிற்சிக் கூடம் மற்றும் உணவுக் கூடம் ஆகியவை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளியில் உள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் ஒன்று 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், 54 ஆயிரத்து 439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 46 ஆயிரத்து 397 அங்கன்வாடி மையங்கள்

சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 860 அங்கன்வாடி மையக் கட்டடங்களில் உள்ள சிறிய மற்றும் பெரிய வகையிலான பழுதுகளை நீக்கி, சீர்படுத்துவதற்காக தலா 2 இலட்சம் ரூபாய் வீதம், 17 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# மாற்றுத்திறனாளிகள் நலத் துறை

## 13.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்களின் தன்னம்பிக்கையை வளரச் செய்யவும், சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும், அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக,

1. மனவளர்ச்சி குன்றியோர், பார்வைத் திறன் மற்றும் செவித் திறன் குறையுடையோருக்காக செயல்படும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் மதிப்பூதியம் 10,000/– ரூபாயிலிருந்து 14,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் 1,129 சிறப்பாசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் பயன்பெறுவர். இதனால், அரசுக்கு ஆண்டொன்றிற்கு 5 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2. மாற்றுத்திறனாளிகளுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்திப் பொருள் விற்பனை மையம் அமைக்க, அவர்கள் ஆவின் நிறுவனத்திற்கு செலுத்தவேண்டிய முன்வைப்பு நிதி 25,000/- ரூபாய் மானியமாக வழங்கப்படும். முதற்கட்டமாக, 100 நபர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**3.** மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் கீழ் செயல்படும் **301** சிறப்புப் பள்ளிகள் மற்றும் இல்லங்கள் மூலம் **11** ஆயிரத்து **948** மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுகின்றனர். அவர்களுக்கு தற்போது மாதமொன்றிற்கு வழங்கப்பட்டு வரும் உணவூட்டு மானியம் **650/-** ரூபாயிலிருந்து **900/-** ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு **3** கோடியே **15** இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# வேளாண்மைத் துறை

## 14.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், விவசாயப் பெருமக்களின் வளமான வாழ்வுக்கு முக்கியமாக விளங்கும் வேளாண்மைத் தொழிலை மேம்படுத்துவதற்கும், விவசாயப் பெருமக்களின் வாழ்வு வளம் பெறச் செய்வதற்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. தமிழ்நாட்டில் அபரிமிதமாகக் கிடைக்கும் சூரிய சக்தியை, பல்வேறு வழிகளில் பயன்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு “சூரிய சக்திக் கொள்கை” ஒன்றை 2012ஆம் ஆண்டில் உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இதுவரை, தமிழ்நாட்டில் 3,112 சூரிய சக்தி பம்ப் செட்டுகளும், 181 சூரிய உலர்ப்பான்களும், 117 கோடியே 24 இலட்சம் ரூபாய் மானியத்தில் நிறுவப்பட்டுள்ளன. இலவச மின் இணைப்பை ஏற்கெனவே பெற்றுள்ளவர்களும், இலவச மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தவர்களும், மின் இணைப்பை துறப்பதற்கு முன்வந்தால், இத்திட்டத்தின் கீழ், 90 சதவீத மானியத்தில் சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகள் அமைத்து தரப்படும்.

தற்போது விவசாயிகளிடையே, சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு அதிக தேவை இருப்பதை கருத்திற்கொண்டு,

ஏற்கெனவே டெல்டா மாவட்டங்களுக்கு குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்துடன் அறிவிக்கப்பட்ட 500 சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகள் போக, டெல்டா மாவட்டங்கள் அல்லாத பிற பகுதிகளுக்கும் 500 சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்டுகள் என மொத்தம் 1,000 சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்டுகள் 50 கோடி ரூபாய் செலவில் 90 சதவீத மானியத்தில் நிறுவப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

2. உடல்நலத்துக்குத் தேவையான அனைத்து ஊட்டச் சத்துக்களையும் வழங்கக் கூடிய சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, வரகு, பனிவரகு மற்றும் குதிரைவாலி போன்ற சிறுதானியங்களின் தேவை தமிழகத்தில் அதிகரித்து வருகிறது.

எனவே, சிறுதானியப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்தும் வகையில், விதை உற்பத்தி மற்றும் விநியோகம், தொகுப்பு செயல் விளக்கம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து மேலாண்மை, சிறு தளைகள் விநியோகம் போன்ற பணிகளுக்காக, நடப்பாண்டில் 6 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும்.

3. வாழை சாகுபடி பரப்பளவில் இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. வாழை அதிக நீர் தேவைப்படும் பயிராகும். தண்ணீர் பற்றாக்குறையினால், வாழை சாகுபடி பரப்பில் குறைவு ஏற்படக்கூடாது என்பதற்காக, வாழை சாகுபடியில் சிக்கன நீர் மேலாண்மைக்காக நடப்பாண்டில் வாழை சாகுபடி மேற்கொள்ளப்படும் 10,000 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசன முறையினை அமைப்பதற்கு விவசாயிகளுக்கு மானியமாக 27 கோடியே 83 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

4. உயர் தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தல் மூலம் தரமான உற்பத்தி உறுதி செய்யப்படுகிறது. காய்கறிகளை பசுமைக்குடில், நிழல் வலைக்குடில் போன்ற பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிரிடுதல்,

ஏறுகொடிகள் மற்றும் பற்று கொடிகளான காய்கறி மற்றும் பழங்களுக்கு ஆதாரமாக பந்தல் அமைத்தல், நிலப்போர்வை அமைத்தல் போன்ற தொழில்நுட்பங்களை மேற்கொள்ள 10 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

5. தோட்டக்கலைத் துறையில் பட்டயப் படிப்பு படித்த மாணவர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்புகள் உள்ளன. தற்சமயம் சென்னையை அடுத்த மாதவரத்தில் மட்டுமே, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலம் இப்பட்டயப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. எனவே, அதிகமான மாணவர்களுக்கு இப்பட்டயப் படிப்பு அளிக்க, கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் செயல்பட்டு வரும் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்திலும், திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில் இயங்கி வரும் காய்கறி மகத்துவ மையத்திலும், தோட்டக்கலை அறிவியல் சார்ந்த ஈராண்டு பட்டயப் படிப்பு (Diploma in Horticulture) நடப்புக் கல்வி ஆண்டில் துவங்கப்பட்டு, ஆண்டுதோறும் ஒவ்வொரு மையத்திலும் 50 மாணவர்கள் சேர்க்கப்படுவர். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெற்று இம்மையங்கள், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்படும். இவ்விரண்டு மையங்களிலும், மாணவர்கள் பயில்வதற்காக ஏற்கெனவே உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் வசதிகளை உருவாக்குவதற்கு இரண்டு கோடி ரூபாய் நிதி வழங்கப்படும். மேலும், திருவள்ளூர் மாவட்டம், மாதவரத்தில் இயங்கி வரும் ஈராண்டு தோட்டக்கலை பட்டயப் படிப்பு மையமும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெற்று, தோட்டக்கலைத் துறையின் மூலம் நடத்தப்படும்.

6. வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை, விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று போன்ற வேளாண் சார்ந்த அனைத்து துறைகளின் விரிவாக்க

சேவைகளையும் ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் வகையில், அனைத்துத் துறை அலுவலர்களும் ஒரே இடத்தில் இயங்குவதற்கேற்ப, இடுபொருள் சேமிப்புக் கிடங்கு, கருத்தரங்கக் கூட வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் இதுவரை 146 வட்டாரங்களில் 219 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், மேலும் 9 வட்டாரங்களில் இம்மையங்கள் 18 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

7. “மலைகளின் ராணி” என அழைக்கப்படும் உதகமண்டலம், 200 ஆண்டுகாலம் பழமை வாய்ந்ததுடன், பிரதான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக திகழ்கிறது. தற்போது செயல்பட்டு வரும் தாவரவியல் பூங்காவுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, நடப்பாண்டில், நீலகிரி மாவட்டத்தில் 80 ஏக்கர் பரப்பளவில் புதிதாக “இருநூற்றாண்டு பசுமைப் புல்வெளி” எனும் புதிய பூங்கா ஒன்று 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். மேலும், வருடந்தோறும், சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் அரசு ரோஜாப் பூங்காவிற்கு வருகை புரிவதால், போக்குவரத்து நெரிசல் அதிகமாகி, வாகனம் நிறுத்துவதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதை கருத்திற்கொண்டு, நீலகிரி நகரத்தில் 500 வாகனங்களை நிறுத்தும் வகையில் வாகன நிறுத்துமிடம் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

ஆக மொத்தம், 127 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இன்று நான் அறிவித்துள்ள இத்திட்டங்கள் மூலம் தமிழ்நாடு வேளாண்மையும், விவசாயிகளின் வாழ்வாதாரமும் மேலும் செழிக்க வழிவகை ஏற்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை

## 14.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மைக்கு அடுத்தபடியாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவதிலும், நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், நாட்டின் ஏற்றுமதி வருவாயைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது நெசவுத் தொழில். இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலான நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் இத்துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் அறிவிக்கின்றேன்.

1. விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்தல் மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் துணித் தேவையினை பூர்த்தி செய்தல் ஆகிய இரு நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து கைத்தறிகள் மற்றும் பெடல் தறிகளுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு வழங்கும்

பொருட்டு கீழ்கண்டவாறு கூடுதலாக உற்பத்தித் திட்டம் வழங்கப்படும்.

i) கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு, வரும் பொங்கல் 2019 முதல் ஜூன் மாதம் வரை கூடுதல் உற்பத்தித் திட்டம் வழங்கப்படும்.

ii) மொத்தமுள்ள பெடல் தறிகளில் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 6 மாதங்களுக்கு ஏற்கெனவே உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு வரும் 9,692 பெடல் தறிகள் போக எஞ்சிய 1,558 பெடல் தறிகளுக்கு மேற்படி 6 மாத காலம் கூடுதல் உற்பத்தித் திட்டம் வழங்கப்படும்.

iii) விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு வரும் 6,975 பெடல் தறிகள் போக எஞ்சிய 4,275 பெடல் தறிகளுக்கு பிப்ரவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 5 மாதங்களுக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் கூடுதல் உற்பத்தித் திட்டம் வழங்கப்படும்.

iv) ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் மொத்தமுள்ள 11,250 பெடல் தறிகளுக்கும் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு மாதத்திற்கு கூடுதல் உற்பத்தித் திட்டம் வழங்கப்படும்.

இதற்காக ஆண்டொன்றுக்கு அரசுக்கு 15 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

2\. ஜவுளித் தொழிலின் வளர்ச்சியை தமிழ்நாட்டில் மேலும் ஊக்குவிக்கும் விதமாக, நடப்பாண்டில் தமிழ்நாடு அரசின் சார்பாக கோயம்புத்தூரிலுள்ள கொடிசியா அரங்கில் பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

3\. தமிழ்நாடு அரசின் விலையில்லா சீருடைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சீருடைத் துணிகளை பதனீடு செய்வதை முக்கிய பணியாகக் கொண்டு தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. சீருடைத் துணிகளை பதனிடுவதன் மூலம் இவ்வாலை பிப்ரவரி முதல் ஆகஸ்ட் முடிய 7 மாதங்கள் முழுமையாக செயல்படுகிறது. மீதமுள்ள 5 மாதங்கள் பதனிடுவதற்கு போதுமான துணி இல்லாததால் குறைந்த திறனுடன் செயல்பட்டு வருகிறது. இந்நிலையைக் கருத்திற்கொண்டு இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சீருடைத் துணி பதனீட்டு பணி இல்லாத காலங்களில் தொடர் வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் ஆலையை தொடர்ந்து இலாபத்தில் இயக்க செய்யவும், ஒரு தொகுதிக்கு (Unit) 2 டன் வீதம் 60எஸ் கோம்டு நூல் சாயமிடும் திறன் கொண்ட சாயமிடும் அலகு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

4\. தமிழ்நாடு, தேசிய அளவில் வெண்பட்டு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் தலா 20 இலட்சம் பட்டு முட்டைகளை பதனம் செய்யும் திறன் கொண்ட இரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரிலும், கிருஷ்ணகிரியிலும் செயல்பட்டு வருகின்றன. வெண்பட்டு முட்டை உற்பத்தியினை அதிகரித்து அதனை பதனப்படுத்திட, மேலும் ஒரு, 20 இலட்சம் பட்டு முட்டைகளைப் பதனம் செய்யும் திறன் கொண்ட பல்நிலை குளிர்பதன அலகு, ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

5. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை முழுவதுமாகப் பயன்படுத்தி பட்டு நூல் உற்பத்தி செய்ய, போதுமான பட்டு நூற்பு அலகுகள் இல்லை என்பதால், பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய பட்டு நூற்பு பிரிவினை வலுப்படுத்தும் நோக்கில் நடப்பாண்டில் பட்டு நூற்பு அலகுகளை நிறுவிட மாநில அரசின் பங்காக நிதியுதவி பின்வருமாறு வழங்கப்படும்.

அ) 400 முனைகள் கொண்ட மூன்று தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட, 1 கோடியே 5 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

ஆ) 200 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகினை நிறுவிட, 19 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

இ) ஒரு தானியங்கி டூபியான் பட்டு நூற்பு அலகினை நிறுவிட, 11 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

ஈ) 100 முனைகள் கொண்ட பல்முனை பட்டு நூற்பு அலகுகள் 25 நிறுவிட, மாநில அரசின் பங்காக 1 கோடியே 6 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

உ) இரண்டு தனியார் பட்டு முறுக்கேற்றும் அலகுகளும், ஒரு அரசு பட்டு முறுக்கேற்றும் அலகும் நிறுவிட, 10 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

* * *

# மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை

## 25.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தரமான மருத்துவ சேவையை அனைத்து மக்களும், குறிப்பாக ஏழை, எளிய மக்கள் பெற்றிட வேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், நடப்பாண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறையால் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுகிறேன்.

1. இன்றைய காலகட்டத்தில், வாழ்க்கை முறை மாற்றத்தினால் ஏற்படுகின்ற தொற்றா நோய்களை தடுப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும், யோகா மற்றும் இயற்கை மருத்துவம் பெரும்பங்கு வகிக்கிறது. இந்தியாவிலேயே முதல்முறையாக, தமிழ்நாட்டில்தான் சர்வதேச தரத்தில் யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, உலகத்தரம் வாய்ந்த “சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம்” செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 60 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு பட்டப்படிப்பு பிரிவு, பட்ட மேற்படிப்பு பிரிவு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுடன் கூடிய மருத்துவமனை, மாணவர் விடுதிகள், பணியாளர் குடியிருப்புகள் போன்றவை ஏற்படுத்தப்பட்டு, இதற்குத் தேவையான

பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இங்கே இயற்கையான சூழ்நிலையில், மிகவும் பாதுகாப்பான சிகிச்சை முறைகளான யோகா சிகிச்சை, இயற்கை உணவு சிகிச்சை, நீர் சிகிச்சை, அக்குபங்க்சர், அக்குபிரஷர், காந்த சிகிச்சை, இயற்கை மூலிகை சிகிச்சை, மண் சிகிச்சை, மசாஜ் சிகிச்சை, நிற சிகிச்சை போன்ற பல சிகிச்சைகள் அளிக்கப்படும்.

2. தமிழ்நாட்டில் உள்ள 985 துணை சுகாதார நிலையங்கள், ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்களாக, 82 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

3. சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனைத்து சிறப்புத் துறைகளும் ஒரே அடுக்குமாடிக் கட்டடத்தில் செயல்படும் வகையில், தற்போது கட்டப்பட்டுள்ள சிறப்பு அடுக்குமாடிக் கட்டடத்தில், 4ஆவது தளம் முதல் 6ஆவது தளம் வரை, மேலும் மூன்று தளங்கள் 55 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

4. சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில், நோயாளிகளின் வசதிகளைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள வெளி நோயாளிகள் பிரிவு கட்டடத்திலேயே அனைத்து துறைகளும் செயல்படும் விதத்தில், தற்போது கட்டப்பட்டு வரும் புறநோயாளிகள் பிரிவு கட்டடத்திற்கு மேல், 5ஆவது தளம் முதல் 8ஆவது தளம் வரை, மேலும் நான்கு தளங்கள், 42 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

5. சீர்காழி, திருத்தணி, ஓமலூர், திருச்செந்தூர், பரமக்குடி, பண்ருட்டி, ஆரணி ஆகிய அரசு வட்ட மருத்துவமனைகளுக்கு பெருகி வரும் நோயாளிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்திட, 30 கோடி ரூபாய் செலவில் தரை தளம் மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

**6.** மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சைக்காக, “பிரேக்கி” தெரப்பியுடன் கூடிய “சி.டி.ஸ்டிமுலேட்டர்” மற்றும் “பங்க்கர்” கருவிகள் 22 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

**7.** சாலை விபத்துக்களில் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைத்திட, “தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர கால சிகிச்சைத் திட்டம்” செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 20 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் 19 வட்ட மருத்துவமனைகள் என 64 அரசு மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டு வரும் அவசர கால சிகிச்சை மையங்களுக்கு, நவீன மருத்துவக் கருவிகள், 21 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**8.** காச நோயாளிகளுக்கு சிறந்த ஊட்டச்சத்து வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை கருத்திற்கொண்டு, நடப்பாண்டில் 96 ஆயிரத்து 200 காச நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உணவு 20 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**9.** தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் நலன் காக்கும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் “மகப்பேறு மற்றும் குழந்தை நல ஒப்புயர்வு மையம்” ஒன்று 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**10.** நடப்பாண்டில், காஞ்சிபுரம், நீலகிரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில், மாணவியர் விடுதிகள் 20 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**11.** பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் கீழ், 12 அரசு துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சிப் பள்ளிகளின்

உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், நடப்பாண்டில் எழும்பூர், பூவிருந்தவல்லி மற்றும் விழுப்புரம் ஆகிய மூன்று இடங்களில் உள்ள துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு, 17 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

தற்போது நான் அறிவித்துள்ள, இந்த திட்டங்களால் அரசு மருத்துவமனைகள் மேலும் சிறப்பாகச் செயல்பட்டு, ஏழை, எளிய மக்கள் உயர்தர மருத்துவ சேவை பெற வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# தமிழ் வளர்ச்சித் துறை

## 28.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகவும், சீரிளமை குன்றாத மொழியாகவும், வளமையும், தூய்மையும் மிக்க மொழியாகவும், வாழும் நெறிக்கும் இலக்கணம் வகுத்த மொழியாகவும், வீரம் செறிந்த மொழியாகவும் விளங்குகின்ற தமிழ் மொழிக்கு பெருமை சேர்ப்பதிலும், அதனை உலகமெங்கும் பரப்புவதிலும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, தமிழ் மொழியை சிறப்பிப்பதை முன்னெடுத்து செல்லும் விதமாக, இத்துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் அறிவிக்கின்றேன்.

1. பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் தமிழ்ச் சமூகத்திற்குப் பாடுபட்டவர்களின் வாழ்வியலைப் பன்முக நோக்கில் ஆராய்ந்து, வளரும் தலைமுறையினரும் எதிர்கால தலைமுறையினரும் அறிந்துக் கொள்ளும் வகையில், ஆய்வுகள் நடத்தப்பட்டு நூல்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. அவ்வகையில் முன்னாள் முதலமைச்சர் மக்கள் திலகம் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டைப் போற்றும் வகையிலும் மற்றும் சமூகத்தின் மீதான அவரின் ஆழ்ந்த அக்கறை, கலைத் தொண்டு, தமிழ் உணர்வு மற்றும் மக்கள் பணி ஆகியவற்றை நம் நாட்டு மக்களும், வெளிநாட்டவர்களும் அறிந்துகொள்ளும் வகையில்

ஆய்வுகள் மேற்கொள்ளவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாடு ஆய்வு இருக்கை ஒன்று ஒரு கோடி ரூபாய் வைப்புத் தொகையாக வைத்துத் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இந்தியாவிலுள்ள முன்னணி பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை ஏற்படுத்தி, தமிழ் வளர்க்கும் அற்புதமான திட்டம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால்தான் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, முதற்கட்டமாக இலண்டனில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், தென்னாப்பிரிக்காவில் உள்ள ஜோகனஸ்பார்க் பல்கலைக்கழகம், மலேசியாவிலுள்ள மலேயா பல்கலைக்கழகம், இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மற்றும் தமிழர்கள் அதிகமாக வாழும் வெளிநாடுகள் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள கல்வி நிறுவனங்களிலும் தமிழ் இருக்கைகள் தொடர்ந்து நிறுவப்படும். இதற்கென ஆண்டுதோறும் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. உலக நாடுகள் மற்றும் இந்திய மாநிலங்களில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள், தாய்மொழியையும், கலையையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாக்கும் நோக்கில், அங்குள்ள தமிழ் அமைப்புகளை ஒருங்கிணைத்து, அவர்கள் மேற்கொண்டு வரும் தமிழாய்வுகள், தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள், மொழி பெயர்ப்புகள் போன்ற தமிழ் இலக்கியப் பணிகளை ஒன்றிணைக்கும் வகையில், ஆய்வரங்குகள், கருத்தரங்குகள், கவியரங்குகள், சொற்பொழிவு, பட்டிமன்றம், இலக்கியச் சுற்றுலா, உலகத் தமிழர் கலைத் திருவிழா உள்ளிட்ட நிகழ்வுகளை உள்ளடக்கிய உலகத் தமிழ் அமைப்புகள் மாநாடு 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை 5 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

4. ஆங்கில மொழி அறிஞர்கள், ஆங்கில மொழிச் சொற்களை தொகுத்தல் முறையில் அணியமாக்கி, மொழி ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களுக்கு வழங்கி வருகின்றனர்.அதுபோல், உலகின் பழமையான மொழிகளுள் மூத்த மொழியாகக் கருதப்படும் நம் தமிழ் மொழியிலும் அத்தகைய தொகுப்பு தேவை என்பதை உணர்ந்து, “சொற்குவை” என்ற திட்டம் தொடங்கப்படும். இதில் தமிழில் உள்ள சொற்கள் அனைத்தையும் தொகுத்து நிரல்படுத்துதல், சொற்களின் இலக்கண வகைப்பாடுகளைப் பதிவு செய்தல், நிகரான சொற்களை பதிவு செய்தல், சொற்களின் தொடராக்கப் பரிமாணங்களைப் பதிவு செய்தல், சொற்களுக்கான பொருள் விளக்கத்தைத் தேடும் வசதியை அமைத்துக் கொடுத்தல், அடிக்கடி தேடப்படும் சொற்களுக்கு வண்ண அடையாளம் கொடுத்தல், வந்த சொல்லே மீளவும் வராமல் தடுத்தல் மற்றும் புதிய சொற்களைப் பதிவு செய்தல் போன்ற வசதிகள் உருவாக்கப்பட்டு, அவை இணையதளப் பொது வெளியில் உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், மொழியியல் ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்படும். இதற்கென ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் தொடர் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும்.

5. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுகலை தமிழ் (M.A.) பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் தெரிவின் அடிப்படையில் முதலாம் ஆண்டு பயிலும் 15 மாணவர்கள், இரண்டாம் ஆண்டு பயிலும் 15 மாணவர்கள் என மொத்தம் 30 மாணவர்களுக்கு மாதந்தோறும் கல்வி உதவித் தொகையாக தலா 2,000/– ரூபாய் வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ஆண்டுக்கு 7 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# இந்து சமய அறநிலையத் துறை

## 28.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்து சமய அறநிலையத்துறை குறித்த கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

**1.** தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பக்தர்கள் வசதிக்காக 'பக்தர்கள் தங்கும் விடுதி' 30 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

**2.** இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிதி வசதி இல்லாத 1,000 கிராமப்புறத் திருக்கோயில்களில், நடப்பாண்டில் திருப்பணி மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள, திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம், 10 கோடி ரூபாய் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும்.

**3.** இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,000 திருக்கோயில்களில் நடப்பாண்டில் திருப்பணிகள் மேற்கொள்ள, திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம், 10 கோடி ரூபாய் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## 28.06.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**உ**டற்கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய இரண்டும், உடற்திறனை வளர்ப்பதோடு, திடமான மன வலிமையையும், சகோதர மனப்பான்மையையும், சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்கிட பெரிதும் உதவுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, விளையாட்டு வளர்ச்சிக்கென சிறப்பான விளையாட்டு கட்டமைப்பு வசதிகள், ஊக்க உதவித் திட்டங்கள், முறைப்படுத்தப்பட்ட பயிற்சிகள் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதனை முன்னெடுத்துச் செல்ல, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

1. வேலூர் மாவட்டத்தில், 400 மீட்டர் தடகள ஓடுபாதை, பார்வையாளர் மாடம், நிருவாக அலுவலகம், வளைகோல் பந்து, கூடைப் பந்து, கபடி, கோ–கோ, இறகுப் பந்து, டென்னிஸ் ஆகியவற்றிற்கான ஆடுகளங்கள், நீச்சல் குளம், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் இதர விளையாட்டு வசதிகளைக்கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகம் 17 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

2. பல்வேறு விளையாட்டு வீரர்களின் திறன்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு தகுந்த முறையில் பயிற்சிகள் அளித்து சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், “பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும்

திட்டம்’’ செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 5 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்/ வீராங்கனைகள் உட்பட, 50 விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும், வெளிநாடுகளில் சென்று சிறப்புப் பயிற்சி மேற்கொள்வதற்கும் மற்றும் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும், மானியமாக தேவையின் அடிப்படையில் தலா 10 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் செலவிடப்படும்.

3. காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நீர்ப்பெயர் கிராமத்தில் தேசிய மாணவர் படையினருக்கு பயிற்சி வளாகம் அமைக்க 2.02 ஹெக்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் அணிவகுப்பு பயிற்சி மைதானம், தடை தாண்டுதல் பயிற்சி நிலையம், 25 மீட்டர் மற்றும் 50 மீட்டர் தூரம் சுடக் கூடிய துப்பாக்கி சுடும் தளம் ஆகியவற்றைக் கொண்ட தேசிய மாணவர் படை பயிற்சி வளாகம், 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்த பயிற்சி வளாகத்தில் ஒரே சமயத்தில் 600 மாணவர்கள் வீதம், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 18,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

4. இறகுப் பந்தாட்டப் போட்டிகளில் சர்வதேச அளவில் பதக்கங்கள் வெல்லக் கூடிய திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். அவர்களை ஊக்குவிக்கும் வகையில், ஒரு “இறகுப்பந்து அகாடமி’’ தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இப்பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பல்வேறு விளையாட்டு அறிவியல் ஆய்வகங்களைப் பயன்படுத்தி வீரர்களின் திறமைகளை அடையாளம் கண்டு, சர்வதேச போட்டிச் சூழலுக்கு ஏற்றவாறு அவர்களைத் தயார் செய்ய இந்த அகாடமி உதவும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

✵ ✵ ✵

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

## 29.06.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளை இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

வடகிழக்கு பருவமழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின் விளைவாக அடையாறு, ஆரணியாறு, கொசஸ்தலையாறு, கூவம் மற்றும் கோவளம் ஆற்றுப்படுகைகளில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் மற்றும் ஊரக பகுதிகளிலுள்ள குடியிருப்புகள் நீரில் மூழ்குகின்ற நிலைமை அவ்வப்போது ஏற்படுகின்றது.

அப்பகுதிகளில் வெள்ளத் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நடப்பாண்டில் மாநில நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து, அப்பகுதிகளில் வெள்ளநீர் தங்கு தடையின்றி வெளியேற்றப்படும் வகையில், தொடர்புடைய ஏரிகளுக்கு இணைப்புக் கால்வாய்கள் அமைத்தல், மூடிய கால்வாய்களை புனரமைத்தல், பாசனமில்லாத ஏரிகளை ஆழப்படுத்தி நீர்த் தேக்கங்களாக மாற்றுதல், வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்பினை ஏற்படுத்துதல், உபரி நீர்க் கால்வாய்கள் மற்றும் சாலையோரக் கால்வாய்களை அகலப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✻ ✻ ✻

# செய்தி—மக்கள் தொடர்புத் துறை

## 29.06.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**1.** உலகத் தமிழர்களின் இதயங்களில் தங்க சிம்மாசனம் இட்டு அமர்ந்திருப்பவரும், திராவிட ஆட்சி தமிழ்நாட்டில் நிலை பெற வித்திட்டவரும், தன்னை ஈன்ற தமிழகத்திற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டிப் பெருமை சேர்த்தவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தை புதுப்பித்தல், பதிக்கப்பட்டுள்ள கிரானைட் கற்களைப் புதுப்பித்தல், புல்வெளி சீரமைத்தல், மின் பணிகள் மற்றும் இதர புனரமைப்புப் பணிகள் 4 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**2.** சமூக நீதிக்காகப் பாடுபட்டவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான மறைந்த மரியாதைக்குரிய திரு. இராமசாமி படையாச்சியார் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், அவரது பிறந்த தினமான செப்டம்பர் 16ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

**3.** கலைமாமணி, பத்மஸ்ரீ, பத்மபூஷன், செவாலியே, தாதாசாகேப் பால்கே ஆகிய விருதுகளைப் பெற்று நடிகர் திலகம் என்று மக்களால் போற்றப்பட்ட மறைந்த திரு. சிவாஜி கணேசன் அவர்கள் கலைத் துறைக்கு ஆற்றிய சேவையைப் போற்றிடும் வகையில், அவரது பிறந்த தினமான

அக்டோபர் 1ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

பத்திரிகையாளர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே அவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

4. பத்திரிகையாளர் பெற்று வரும் ஓய்வூதியத்தை 8 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியத்தை 4,750 ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகவும் கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு உயர்த்தி வழங்கியது. மேற்படி ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கொடையின் உச்சவரம்பு மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு, 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

5. பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட நேர்ந்தால், அவர்கள் சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக பத்திரிகையாளர் நல நிதியம் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி, ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

* * *

# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

## 29.06.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடப்பாண்டில் செயல்படுத்தவிருக்கும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வாடிக்கையாளர்களை கவரவும், சந்தை வாய்ப்பினை பெருக்கவும், விற்பனை நிலையங்களைப் புதுப்பித்து நவீனமயமாக்கும் நோக்கில், சென்னை, கொல்கத்தா, திருச்சி மற்றும் தஞ்சாவூரில் செயல்பட்டு வரும் பூம்புகார் விற்பனை நிலையங்கள், ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பொலிவு பெற அழகுபடுத்தப்படும்.

2. பூம்புகார் நிறுவனம் சார்பில் நடப்பாண்டு முதல், உலக அளவிலான கண்காட்சி (Handifest) ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடத்தப்படும். சர்வதேச வர்த்தக நிறுவனங்களான இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் (ITPO) மற்றும் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கவுன்சில் (EPCH) உடன் இணைந்து இக்கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும். கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைவினைப் பொருட்களுக்கு மிகச்சிறந்த சந்தை வாய்ப்பு ஏற்படுத்துவதற்கும், வருவாய் பெருக்குவதற்கும், ஏற்றுமதி அதிகரிப்பதற்கும் மற்றும் அன்னிய செலாவணி ஈட்டுவதற்கும் இக்கண்காட்சி வழிவகுக்கும் என்பதை தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

✵ ✵ ✵

# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## 03.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வந்துள்ளது. அதன் அடிப்படையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 10 சார்பதிவாளர் அலுவலகங்கள், நவீன வசதிகளுடன் கூடிய அலுவலகங்களாக 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

## 03.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

**1)** மத்திய அரசு ஆண்டுதோறும் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய சமூகத்தினருக்கு மானியம் அளித்து வந்தது. இந்த மானியத்தை **2018**ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுத்தியுள்ளது. இந்துக்களுக்கு மானசரோவர் மற்றும் முக்திநாத் செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், சிறுபான்மை இன மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலம் செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் **6** கோடி ரூபாய் மானியம் வழங்கும். இத்திட்டத்தின் கீழ் **3,728** நபர்கள் இந்த ஆண்டு **(2018–2019)** ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வர் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**2)** மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் **502** பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளில் **31,940** மாணவியர் தங்கிப் பயின்று வருகின்றனர். இவர்களின் பாதுகாப்பினைக்

கருத்தில் கொண்டு, இவ்விடுதிகளின் நான்கு பகுதிகளிலும், விடுதி ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவில் **502** விடுதிகளுக்கும் **5** கோடியே **2** இலட்சம் ரூபாய் செலவில் CCTV Camera பொருத்தப்படும்.

**3)** தமிழ்நாடு முழுவதும் மொத்தம் உள்ள **1,343** விடுதிகளில் **1,265** விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவ்வாறு சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரும் **1,265** விடுதிகளில், சுமார் **595** விடுதிகளுக்கு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்பது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அதன் அடிப்படையில், நடப்பாண்டில் **5** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இவ்விடுதிகளில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**4)** மதுரை மாவட்டத்தில் மதிப்பனூர் மற்றும் மேலத் திருமாணிக்கம், தேனி மாவட்டத்தில் மு.பெருமாள்பட்டி மற்றும் பாலார்பட்டியில் உள்ள **4** அரசு கள்ளர் தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும்;

மதுரை மாவட்டத்தில் கொ.புளியங்குளம், அ.புதுப்பட்டி மற்றும் வி.பெருமாள்பட்டி ஆகிய **3** அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்;

தேனி மாவட்டம்—அன்னஞ்சி, திண்டுக்கல் மாவட்டம்—தெப்பத்துப்பட்டி மற்றும் மதுரை மாவட்டம்—கோவிலாங்குளம் ஆகிய **3** அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், என மொத்தம் **10** கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் **3** கோடியே **8** இலட்சத்து **33** ஆயிரம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## 03.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்.

1. கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் முதற்கட்டமாக, 25,000 கட்டுமான தொழிலாளர்களுக்கு தலா 2,000/– ரூபாய் மதிப்புள்ள பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகம் 5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். இப்பெட்டகத்தில் பாதுகாப்புக் காலணிகள், பாதுகாப்புத் தலைகவசம், பளிச்சிடும் மேலங்கி, கையுறைகள் மற்றும் பாதுகாப்புக் கண்ணாடிகள் இருக்கும்.

2. கோவையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகங்களுக்கு 4 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

3. தமிழ்நாட்டில் தற்போது உள்ள 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 29 அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில், கிருஷ்ணகிரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

4. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலமாக 32 மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு திறன்பயிற்சித் திட்டங்களை, தற்போது 5 மண்டல இணை இயக்குநர்கள் கண்காணித்து வருகின்றனர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்களை திறம்பட நிர்வகிக்கவும், கண்காணிக்கவும், விழுப்புரம் மற்றும் சேலம் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகங்கள் நடப்பாண்டில் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

5. அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு 7 கோடி ரூபாய் செலவில் “சிடி ஸ்கேன் கருவி” வழங்கப்படும். ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் 3 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் அவசர சிகிச்சைப் பிரிவு (ICU) உருவாக்கப்படும். 75 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் உள்ள ஆய்வகங்களில் 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் “செமி ஆட்டோ அனலைசர், பைனாகுலர் மைக்ராஸ்கோப், இசிஜி இயந்திரம்” போன்ற புதிய உபகரணங்கள் வழங்கப்படும். தொழிலாளர்களுக்கு சிகிச்சைக்காக வழங்கப்படும் உயர் மருந்துகளை பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் 4 மண்டல நிருவாக மருத்துவ அலுவலகங்களில் குளிர்சாதன அறை மற்றும் ஜெனரேட்டர் கருவிகள் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

✲ ✲ ✲

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## 05.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 1,367 விடுதிகளில், தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்தம் உடமைகளைப் பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு ஏற்கெனவே அறையில் அமைக்கப்பெற்றிருக்கும் R.C. அலமாரிகளுக்கு, மாணாக்கர் எண்ணிக்கைக்கேற்ப, தனித்தனி இரும்புக் கதவு மற்றும் பூட்டு, சாவி ஏற்பாடுகளுடன் கூடிய வசதிகளை ஏற்படுத்தி தர விடுதி ஒன்றிற்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 27 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரும்பு அலமாரிகள் நடப்பாண்டில் அமைக்கப்படும்.

2. திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், தருமபுரி மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள பழங்குடி இன மக்களுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 வீடுகள் வீதம் மொத்தம் 250 வீடுகள் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். மேலும், அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட, திறனுக்கு ஏற்ப தொழில் துவங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 நபர்களைக் கொண்ட 5 குழுக்களை அமைத்து, ஒரு குழுவிற்கு 10 இலட்சம் ரூபாய் வீதம், 25 குழுக்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❈ ❈ ❈

# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

## 05.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம் சிறப்பான திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்துகிறது. அதன் அடிப்படையில், கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

**1.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சென்னை தெற்கு மண்டலத்திலுள்ள போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டும், தேவையின் அடிப்படையிலும், புறநகர்ப் பகுதியான மறைமலை நகரில், நவீன தொழில்நுட்பம் மற்றும் இயந்திரப் பயன்பாட்டுடன் கூடிய மூன்றடுக்கு கிடங்கு வளாகம் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**2.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பொள்ளாச்சி, திருவாரூர், தாழையூத்து ஆகிய இடங்களில் உள்ள நவீன அரிசி ஆலை வளாகங்களில் தலா 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் நவீன தொழில்நுட்ப நெல் சேமிப்புக் கலன்கள், 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**3.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் நவீன இயந்திரங்களான Forklift, Stacker cum loader, Automatic

Weighing and Packing Machine நிறுவி தானியங்கி கிடங்குகளாக, 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

**4.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 300 சொந்த கிடங்கு கட்டடங்களில் உள்ள கல்நார் கூரைத் தகடுகளை அகற்றி, நவீன கூரை அமைப்பான, வர்ணம் தீட்டப்பட்ட, ஸ்திரத் தன்மைக் கொண்ட துருப்பிடிக்காத இரும்புக் கூரை வசதி, நடப்பாண்டில் 100 கிடங்குகளில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**5.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பெருவளாக சேமிப்புக் கிடங்குகளில் முன்னுரிமை அடிப்படையில், இன்றியமையாத தேவைகளான சாலை வசதி, நீர்வடிகால் மற்றும் தொழிலாளர் நலன் சார்ந்த சுமைதூக்குவோர் அறைகள், குடிநீர் வசதி மற்றும் மின் ஆக்கி (Genset) நிறுவுதல் போன்ற பணிகள், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மான்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கூட்டுறவு இயக்கங்களை வலுப்படுத்துவதிலும், முன்னேற்றம் அடையச் செய்வதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

**6.** நடப்பாண்டில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் 117 இடங்களில் 26 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

7. கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளை நவீனமயமாக்கும் முயற்சியில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் 94 இடங்களில் 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

8. கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே வங்கிச் சேவையினை வழங்கும் பொருட்டு மத்தியக் கூட்டுறவு வங்கியின் 14 புதிய கிளைகள், 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்படும்.

9. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு, அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் தலா ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட உரக் கிடங்குகள், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை இம்மான்றத்தில் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# பொதுப்பணித்துறை

## 09.07.2018

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகும் சின்னாறு மற்றும் காஞ்சிமாநதி இணைந்து நொய்யல் ஆறாக உருப்பெற்று, மேற்கு கிழக்காக, கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களின் வழியாகச் சென்று, கரூர் மாவட்டத்தின் நொய்யல் என்ற கிராமத்தின் அருகில் காவிரியில் கலக்கின்றது.

திருப்பூர் மாநகராட்சி மற்றும் அருகாமையில் உள்ள பகுதிகளை நொய்யல் ஆறு கடக்கும்போது, வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரினால் மாசடைவதைத் தவிர்க்கும் பொருட்டு, ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில், திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் நொய்யல் ஆற்றின் இரு கரைகளிலும் தடுப்புச் சுவர் அமைத்து, வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரினை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல தடுப்புச் சுவரின் வெளிப்புறத்தில் கழிவுநீர் வடிகால் (Baby Canal) அமைத்தல், தேவையான இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், நடைபாதை அமைத்தல், கரையோர பூங்கா மற்றும் அலங்கார விளக்குகள் அமைத்தல், அணைக்கட்டுப் பகுதியினை மேம்படுத்துதல் மற்றும் நதியினைத் தூர்வாரி சுத்தப்படுத்துதல் ஆகிய பணிகள் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, வரும் காலத்தில் நொய்யல் ஆறு மாசடையாமல் இருப்பதற்கான பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ✵

# உள் (போக்குவரத்து) துறை

## 09.07.2018

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெடுஞ்சாலைகளில் அதிகமாக சாலை விபத்துக்கள் ஏற்படும் பகுதிகளைக் கண்டறிந்து, அவ்விடங்களில் சோதனை அடிப்படையில், வாகனப் பதிவெண் பலகையினைப் படிக்கும் தானியங்கி புகைப்படக் கருவிகள் மற்றும் வாகனக் கண்காணிப்புக் கட்டுப்பாட்டு அறைகள் 25 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# வேளாண்மைத் துறை

## 11.02.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிதான், தமிழ்நாட்டின் வளர்ச்சியாக இருக்கும் என்பதை கருத்தில்கொண்டு, 'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலைவேண்டும்', என்று கருதிய நமது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பயன் அனைத்து மக்களையும் சென்றடையும் வண்ணம் பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத்தந்த பாதையில் உறுதியாக நடக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு, ஏழை, எளிய மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல, பல்வேறு நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது.

பல மாவட்டங்களில் 'கஜா' புயலின் தாக்கத்தினாலும், பருவமழை பொய்த்ததன் காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியினாலும் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டு இருப்பதைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு முழுவதும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும், குறிப்பாக விவசாயத்

தொழிலாளர்கள், நகர்ப்புற ஏழைகள், பட்டாசுத் தொழிலாளர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள், விசைத்தறித் தொழிலாளர்கள், கைத்தறித் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மரம் ஏறும் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழிலாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த ஆண்டு தமிழ்நாடு அரசின் சிறப்பு நிதியுதவியாக தலா **2,000** ரூபாய் வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதனால், கிராமப்புறத்தில் வாழும் சுமார் **35** இலட்சம் ஏழைக் குடும்பங்களும், நகர்ப்புரத்தில் வாழும் சுமார் **25** இலட்சம் ஏழைக் குடும்பங்களும், ஆக மொத்தம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் சுமார் **60** இலட்சம் ஏழைக் குடும்பங்கள் தலா **2,000** ரூபாய் சிறப்பு நிதிஉதவியைப் பெறுவர். இதற்கென, **1,200** கோடி ரூபாய் **2018–2019** துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை

## 13.02.2019

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சி தொடர விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தையும், கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை ஏற்றமடையச் செய்ய விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பாக செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு, இத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதுடன், நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் வண்ணம், “அசீல்” இனக் கோழிகளை கிராமப்புற மக்களுக்கு வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், வேளாண் தொழிலின் உப தொழிலான கால்நடைத் தொழிலை மேன்மைப்படுத்தி விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்டித்தரும் வகையில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் உட்கட்டமைப்புகளையும், தொழில்நுட்பங்களையும் மேம்படுத்த போதுமான நிதி ஆதாரங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை எண்–79ஐ ஒட்டி அமைந்துள்ள கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு சொந்தமான 900 ஏக்கர் பரப்பில் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய உலகத் தரம் வாய்ந்த ஆசியாவிலேயே பெரிய

ஒருங்கிணைந்த பல்துறை பல்நோக்குடன் கூடிய நவீன கால்நடைப் பூங்கா ஒன்று சுமார் **396** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்று பிரிவுகளாக அமையவுள்ள இப்பூங்காவின் முதலாவது பிரிவில் நவீன வசதிகளைக் கொண்ட கால்நடை மருத்துவமனை, நவீன பண்ணை முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் காட்டும் வகையில் கறவை மாட்டுப்பண்ணை, உள்நாட்டு மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, புலிக்குளம் மற்றும் பர்கூர் ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்கப் பண்ணை, செம்மறி மற்றும் வெள்ளாட்டின பண்ணை, பன்றிகள், கோழியினப் பிரிவுகள், மற்றும் நாட்டின நாய் இனங்களான இராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி ஆகியவற்றுக்கான இனப்பெருக்கப் பிரிவுகளைக் கொண்ட கால்நடைப் பண்ணை வளாகம் அமைக்கவும், இரண்டாம் பிரிவில், பால், இறைச்சி மீன் மற்றும் முட்டை போன்ற உணவுப்பொருட்களை பாதுகாத்து பதப்படுத்தவும், அவற்றிலிருந்து பல்வேறு உபபொருட்கள், மதிப்புக் கூட்டிய பொருட்களை தயார் செய்யவும், அவற்றை சந்தைப்படுத்த வசதி ஏற்படுத்தவும், மூன்றாவது பிரிவில் பயிற்சி, விரிவாக்கம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில் முனைவோருக்கான பயிலரங்கத்துடன் (Business Incubation Centre) பல்வேறு அம்சங்கள் கொண்ட வளாகம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும், இந்த நவீனப் பூங்கா தமிழகத்தில் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி மேற்கொள்ளவும், உலக நாடுகளில் உள்ள கால்நடை மருத்துவம் படிக்கின்ற மாணவர்களுக்கும், அங்கே வந்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும், நவீன வசதிகள் ஏற்படுத்துப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். உலகத்தரம் வாய்ந்த இவ்வளாகம், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும்

நுகர்வோர் பயன்பெறும் வகையில், அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்ட வளாகமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

“மரபுத் திறன் மிக்க நாட்டின மற்றும் கலப்பினக் காளைகளைக் கொண்டு 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்” என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது 2019–2020 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்த உறைவிந்து உற்பத்தி நிலையம் இந்த வளாகத்திலேயே அமையப்பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகப்பெரிய அளவில் இப்பூங்கா அமைக்கப்படுவதால், இதனை நிருவகிப்பதற்கு, தொடர்புடைய துறை இயக்குநர்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிருவாக இயக்குநர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் மாண்புமிகு அம்மாவின் பெயரால் அமைந்துள்ள மீன்வளப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்கள் ஆகியோரை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களாகக் கொண்டு, ஒரு சங்கம் அமைக்கப்பட்டு, பதிவு செய்யப்படும். இத்திட்டத்தை ஒருங்கிணைத்து சிறப்பாக செயல்படுத்திட கால்நடைப் பராமரிப்பு கூடுதல் இயக்குநர் பதவி உருவாக்கப்படும். மேலும், சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, தினசரி நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# செய்தி–மக்கள் தொடர்புத் துறை

## 14.02.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நம் நாட்டின் சுதந்திரத்திற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், சமுதாய மேம்பாட்டிற்காகவும் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் வித்திட்ட பல ஆன்றோர்களையும், சான்றோர்களையும் பல்வேறு காலகட்டங்களில் தமிழ்நாடு அரசு பாராட்டியும், கௌரவப்படுத்தியும் வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் தொடர்ந்து இத்தகு ஆன்றோர்களையும், சான்றோர்களையும் பெருமைப்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

### அறிவிப்புகள்

எளிமையான தோற்றமும், ஞானத்தின் உச்சமும், குழந்தைகள் மீது அளவற்ற அன்பும் கொண்டவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். குழந்தைகள் விரும்புகின்ற கவிதைகளைத் தந்து, மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற அன்னாருக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் முழு உருவ வெண்கலச் சிலையினை அமைத்து பெருமை சேர்த்தார்கள். தமிழ் அன்னைக்கு தனது பாடல்களால் மலரும், மாலையும் சூட்டி அழகு பார்த்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு, அன்னாருடைய பிறந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம், தேரூரில்

மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்கப்படும்.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் களம் பல கண்டு, வெற்றிகள் பல கொண்டு ஆட்சி செய்தவர் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் ஆவார். அவரின் வீரத்தைப் பெருமைப்படுத்தும் விதத்தில் **1996**ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகரில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அன்னாருக்கு அரசு சார்பில் சிலை ஒன்றை நிறுவினார்கள். அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, அவருடைய புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் விதத்தில், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்கப்படும்.

திரு. இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் அரசியல்வாதி, சமூக சீர்திருத்தவாதி, வழக்கறிஞர் என பன்முகங்களைக் கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகக் குரல் கொடுத்தவர். அவருடைய சேவையைப் பாராட்டி, அன்னாருக்கு ‘ராவ் சாகிப்’, ‘திவான் பகதூர்’, ‘ராவ் பகதூர்’ போன்ற பட்டங்களை பிரிட்டிஷ் அரசு வழங்கி கௌரவப்படுத்தியது. அன்னாரைப் பெருமைப்படுத்தும் விதமாக அவரது பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த இடமான மதுராந்தகம் அருகில் உள்ள கோழியாளம் கிராமத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபமும், அதிலேயே நூலகமும் அமைக்கப்படும்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்து, விவசாயிகளின் நலனைக் காக்க பரம்பிக்குளம் ஆழியாறு அணைக்கட்டுத் திட்டம் தொடங்க காரணகர்த்தாவாக இருந்தவர் திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர்.

அவர் சட்டமன்ற மேலவை துணைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார். அப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று திரு. வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களை சிறப்பு செய்யும் விதமாக அவர் பிறந்த இடமான கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன் புதூரில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

வழக்கறிஞராக பணியினைத் தொடங்கி, சென்னை மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினராகவும், உள்துறை மற்றும் நிதித் துறை அமைச்சராகவும் பணிபுரிந்து, ஆங்கிலேய அரசால் “ராவ் பகதூர்” மற்றும் “சர்” பட்டங்களையும் பெற்றவர் சர். ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள். நீதிக்கட்சியின் வைரத் தூண் என்று அழைக்கப்பட்ட அன்னாருக்கு அப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்து, ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் காவேரியின் குறுக்கே தடுப்பணை அமைத்து சுமார் 5 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பயன் பெற, ராஜ வாய்க்கால் ஏற்படுத்தியவர் திரு.அல்லாள இளைய நாயகர். இன்றளவும் அப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரமாகவே திகழ்கின்ற அக்கால்வாயை அமைத்த அன்னாரை பெருமைப்படுத்தும் வகையில், அப்பகுதி விவசாய பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று திரு. அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு ஜேடர்பாளையத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் குவிமாடத்துடன் (Dome) திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

பூலித்தேவன் படையில் படைவீரனாகவும், படைத் தளபதியாகவும் இருந்த விடுதலைப் போராட்ட வீரரான, ஒண்டிவீரன் அவர்களுக்கு 2016ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்கள் மணிமண்டபம் அமைத்து திறந்து வைத்தார்கள். அன்னாரது பெருமையை மேலும், சிறப்பிக்கும் வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒண்டிவீரன் மணி மண்டபத்தை ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், அந்த வளாகத்தில் ஒரு நூலகமும் அமைக்கப்படும்.

நேர்மை, வீரம், புத்திக்கூர்மை ஆகியவற்றை ஒருங்கே கொண்டு, வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரத் தளபதியாக விளங்கியவர் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பே வெள்ளையருக்கு எதிராக முதல் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தியவர் வீரன் சுந்தரலிங்கனார் அவர்கள். அன்னாருக்கு 14.06.2005 அன்று தூத்துக்குடி மாவட்டம், கவர்ணகிரியில் மணிமண்டபம் அமைக்க ஆணை வெளியிட்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெருமை சேர்த்தார்கள். அவருக்கு மேலும், பெருமை சேர்க்க மாண்புமிகு அம்மாவின் அரசு கவர்ணகிரியில் அமைந்துள்ள வீரன் சுந்தரலிங்கனார் மணி மண்டபத்தை ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், ஒரு நூலகமும் அதிலேயே அமைக்கும்.

## அரசு விழாக்கள்

துணிச்சல், மன உறுதி, தன்னம்பிக்கையுடன் விவசாயிகளின் உயிர்நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையை தனது சொந்த செலவில் கட்டி தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் பாசன வசதி பெற வழிவகுத்த கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் பிறந்த நாளினை ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாட அப்பகுதி விவசாய பெருமக்கள் கோரிக்கை விடுத்தனர். அவர்களது கோரிக்கையினை ஏற்று கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் பிறந்த நாளான ஜனவரி மாதம் 15ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.

பவானி ஆறு காவேரி ஆற்றுடன் கூடும் இடத்திற்கு சற்று முன்பே அணை கட்டி பவானி ஆற்றின் நீரை வாய்க்கால் மூலம் நேராகக் கொண்டு சென்றால் தண்ணீர் விரைந்து ஓடிவிடும் என்பதாலும், வாய்க்கால்களை வளைத்து வளைத்து வெட்டுவதனால் அதிக பரப்பளவு பாசனம் பெறும் என்ற தொலைநோக்கு சிந்தனையுடனும், விவசாயிகளின் நலன்களுக்காக வாய்க்கால்களை திறம்பட வெட்டி பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தை மாதம் 5ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணித்தவர் திரு. காலிங்கராயன் அவர்கள். அன்னாரை சிறப்பு செய்யும் வகையில் தை மாதம் 5ஆம் தேதியன்று பொதுமக்கள் சார்பாக காலிங்கராயன் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அவருக்கு மேலும், சிறப்பு செய்யும் விதமாக 13.05.2018 அன்று அவரது முழு உருவ வெண்கல சிலையுடன் கூடிய மணி மண்டபம் என்னால் திறந்து வைக்கப்பட்டது. திரு. காலிங்கராயன் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில் ஆண்டுதோறும் தை மாதம் 5ஆம் தேதி அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக் கோனின் வீரத்தையும் வரலாற்றையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில், சென்னை எழும்பூரில் அமைக்கப்பட்ட சிலையை 15.03.1996 அன்றும், தூத்துக்குடி மாவட்டம், கட்டாளங்குளத்தில் நினைவு மண்டபத்தை 8.12.2014 அன்றும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்து அன்னாருக்கு பெருமை சேர்த்தார்கள். தூத்துக்குடி மாவட்டம், கட்டாளங்குளத்தில் உள்ள அன்னாரது நினைவு மண்டபத்தில் ஆண்டுதோறும், அவரது பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னாருக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக, சென்னை, எழும்பூரில் அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வீரன் அழகுமுத்துக் கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் ஜூலை 11ஆம் நாள் அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், சிறந்த தமிழ் அறிஞரும், சிலப்பதிகாரத்தின் மீது ஆளுமை கொண்டிருந்த சிலம்புச் செல்வர் என அனைவராலும் அறியப்பட்டவர், முன்னாள் மேலவைத் தலைவர் திரு. ம.பொ.சிவஞானம் அவர்கள். மொழிவாரி மாநிலங்கள் பிரிவினையின்போது, சென்னையை தமிழ்நாட்டின் தலைநகராக தொடரச் செய்யவும், திருத்தணி, செங்கோட்டை பகுதிகளையும், கன்னியாகுமரி மாவட்டத்தையும் தமிழ்நாட்டுடன் இணைக்க பாடுபட்டவர்; எழுத்து சீர்திருத்தத்தின் போது ‘ஐ’–யும், ‘ஔ’–வும் தமிழ் மொழியில் தொடரச் செய்தவர் திரு. ம.பொ.சிவஞானம் அவர்கள். அவரது தமிழ்த் தொண்டினைப் போற்றிடும் வகையில், சென்னை, தியாகராய நகரில் அமைக்கப்பட்டுள்ள திரு. ம.பொ.சிவஞானம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அன்னாரின் பிறந்த நாளான ஜூன் 26 அன்று அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும்.

தமிழ்நாட்டில் இதழியல் முன்னோடியும், இன்றைய முன்னணி நாளிதழ்களில் ஒன்றான “தினத்தந்தி” தமிழ் நாளிதழைத் தொடங்கி, பாமரரும், பாட்டாளியும் எளிய தமிழ் மூலம் படிக்க வழிவகை செய்தவர் திரு. சி.பா.ஆதித்தனார் அவர்கள். தமிழ்நாட்டில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினராகவும், சட்டப் பேரவையின் அவைத் தலைவராகவும், கூட்டுறவுத் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர் திரு. சி.பா.ஆதித்தனார் அவர்கள். தமிழ் ஆர்வலர்கள் அன்னாரது பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாட வேண்டுமென்று விடுத்த கோரிக்கையினை ஏற்று, சென்னை எழும்பூரில் அமைந்துள்ள திரு. சி.பா.ஆதித்தனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அவர் பிறந்த நாளான செப்டம்பர் 27 அன்று அரசின் சார்பில் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி சிறப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# வேளாண்மைத் துறை

## 04.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நமது மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தியில் மக்காச்சோளம் முக்கிய பங்கு வகிக்கிறது. மக்காச்சோளம் பயிரிடுபவர்களில் 80 சதவீதத்திற்கும் மேல் சிறு, குறு விவசாயிகள்தான். ஆடி, புரட்டாசி மற்றும் சித்திரைப் பட்டங்களில், 80 சதவீதம் மானாவாரியாகவும், எஞ்சியுள்ளவை இறவைப் பயிராகவும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 3.5 இலட்சம் எக்டரில் மக்காச்சோளம் தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படுகிறது. வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மாறிவரும் பருவநிலை காரணமாக, அமெரிக்காவில் மக்காச்சோளப் பயிரைத் தாக்கும் அமெரிக்கன் படைப்புழு அமெரிக்காவில் இருந்து 2016ஆம் ஆண்டு ஆப்பிரிக்க நாடுகளில் பரவி, 2018ஆம் ஆண்டு நமது நாட்டிலும் பரவியது. தற்போது, நம் அண்டை நாடுகளான, இலங்கை, வங்கதேசம், சீனா, வியட்நாம், கம்போடியா ஆகிய நாடுகளிலும் பரவி, குறிப்பாக மக்காச்சோளப் பயிரினை தாக்கி உலக அளவில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

அமெரிக்கன் படைப்புழு, கடந்த 2018ஆம் ஆண்டில் கருநாடகம், ஆந்திர பிரதேசம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களிலும்,

நமது மாநிலத்திலும் மக்காச்சோளப் பயிரைத் தாக்கியது. இப்புழுவின் தாக்குதல், மக்காச்சோளப் பயிரின் அனைத்து நிலைகளிலும் விரைவில் பரவி, பெருமளவு சேதத்தை ஏற்படுத்தும் தன்மை உடையது.

இப்படைப்புழுவின் தாக்குதல் பற்றி எனது கவனத்திற்கு வந்ததும், பயிர் பாதிப்பினை கணக்கெடுக்கும் பணியைத் துரிதமாக மேற்கொள்ள வேளாண்மை மற்றும் வருவாய்த் துறையினருக்கு உடனடியாக நான் உத்தரவிட்டேன். பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவும், தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளிடம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வேளாண்மைத் துறைக்கு நான் உத்தரவிட்டேன்.

அதுமட்டுமன்றி, மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் வரையறைகளின்படி இம்மாதிரியான பாதிப்புகளுக்கு நிவாரணத் தொகை வழங்க வழிவகை இல்லாத காரணத்தால், இந்த வகையான பயிர் பாதிப்பினையும் வரையறைகளில் சேர்த்து, நிவாரணம் வழங்கவும் உத்தரவிட்டேன்.

உரிய பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், இப்படைப்புழு கடந்த ஆண்டு முதன்முதலாக தாக்கியதால், சாகுபடி செய்யப்பட்ட **3.55** இலட்சம் எக்டரில், **2** இலட்சத்து **20** ஆயிரத்து **986** எக்டர் பாதிப்படைந்தது.

வேளாண்மை மற்றும் வருவாய்த் துறையினர் துரிதமாக கணக்கெடுத்ததன் அடிப்படையில், மக்காச் சோளத்தைப் பயிரிட்டு அமெரிக்கன் படைப்புழுவால் பாதிக்கப்பட்ட **17** மாவட்டங்களில் உள்ள **2** இலட்சத்து **93** ஆயிரத்து **424** விவசாயிகளின் துயர் துடைக்க மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் கீழ் இறவைப் பயிருக்கு எக்டருக்கு **13,500** ரூபாயும்

மானாவாரிப் பயிருக்கு எக்டருக்கு 7,410 ரூபாயும் என்ற விகிதத்தில், மொத்தம் 186 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இப்புழுத் தாக்குதலைத் தடுக்க, கோடை உழவு போன்ற பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுக்கவும், விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, இப்படைப்புழுத் தாக்குதலில் இருந்து பயிர்களைக் காத்து விவசாயிகளின் நலன்காக்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு என்றென்றும் விவசாயிகளின் துயர் துடைக்கும் அரசாகவே விளங்கி வருகிறது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத் தொகை மக்காச்சோளம் பயிரினை சாகுபடி செய்து இப்புழுவின் தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ள சிறு, குறு விவசாயிகள் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த நடவடிக்கை எடுத்துள்ளது. இது தவிர, ஏற்கெனவே பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து இப்புழுவினால் பாதிப்படைந்த மக்காச்சோள விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையினையும் பெற்றுத் தர வேளாண்மைத் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இதுவரை சேராத வேளாண் பெருமக்களும், எதிர்வரும் காலத்தில் இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பொருளாதார ரீதியாக தங்களைப் பாதுகாத்துக் கொள்ள உடனடியாக இத்திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு இத்தருணத்தில் அன்புடன் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

✲ ✲ ✲

# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## 05.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

விவசாயிகளின் நலன் கருதி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படும் நெல்லினை உடனடியாக அரவை செய்திட ஏதுவாக, கூடுதலாக நவீன அரிசி ஆலைகளை நிறுவிட வேண்டியது அவசியமாகிறது. எனவே, உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய நவீன இயந்திரங்களைக் கொண்டு தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் தினசரி 100 மெட்ரிக் டன் அரவைத் திறனுடன் கூடிய நவீன அரிசி ஆலை சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் நிறுவப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பயன்பாட்டில் உள்ள சொந்தக் கிடங்குகளின் கொள்ளளவினை அதிகரிக்கவும், எதிர்காலத்தில் உணவு தானியங்களை இருப்பு வைப்பதற்கான தேவையினைக் கருத்தில் கொண்டும், கூடுதலாக 36,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 28 கிடங்குகள் பல்வேறு இடங்களில் 59.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கல்நார் மேற்கூரைகளுடன் இயங்கி வரும் (AC Sheet roof) 55 கிடங்குகளில், மேற்கூரைகளை அகற்றிவிட்டு, நவீன மேற்கூரை

அமைப்பான, வண்ணம் தீட்டப்பட்ட ஸ்திரத் தன்மை அதிகம் கொண்ட துருப்பிடிக்காத மேற்கூரை அமைக்கும் பணி 21.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கிவரும் கிடங்குகளின் வளாகத்தில் உள்ள பழுதடைந்த சாலைகளுக்கு பதிலாக நீண்ட நாள் பயன்படுத்தும் வகையிலும், மழைக்காலங்களில் சேதமடையாத வகையிலும், 54.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மூலம் காய்கறிகள், புளி, பழங்கள், பருப்பு வகைகள், பூக்கள் மற்றும் இதர விவசாய பொருட்களைப் பாதுகாப்பான முறையில் சேமித்து வைத்திட 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சூரிய மின் சக்தியுடன் இயங்கக்கூடிய குளிர்சாதனக் கிடங்கு, நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும்.

✵ ✵ ✵

# கூட்டுறவுத் துறை

## 05.07.2019

**மா**ண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே!

கூட்டுறவு நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு நவீன வசதிகளுடன் சிறந்த சேவையினை வழங்குவதற்காக, 113 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 7 மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள், 2 பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள், 2 நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் ஒரு நகரக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஆக மொத்தம் 125 கூட்டுறவு நிறுவனங்களுக்கு 36.41 கோடி ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

கூட்டுறவு நிறுவனங்கள், வாடிக்கையாளர்களுக்கு நவீன வசதிகளுடன் புதுப்பொலிவுடன் சேவை அளிக்க ஏதுவாக, 118 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 17 மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 4 நகரக் கூட்டுறவு வங்கிகள், 3 நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் 2 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஆக மொத்தம் 143 கூட்டுறவு நிறுவனங்கள் 24.91 கோடி ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்படும்.

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடம், மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவை வழங்கிடும் பொருட்டு, 8.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

தரமான நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்கிடவும், பண்டகசாலைகளின் இதர சேவைகளை பொதுமக்கள் மற்றும் நுகர்வோருக்கு அளித்திடவும், அரியலூர், புதுக்கோட்டை, தேனி, கன்னியாகுமரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மண்டலங்களில் 5 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் புதிதாக துவக்கப்படும்.

ஒரு புதிய முயற்சியாகவும், நியாயவிலைக் கடைகளின் குடும்ப அட்டைதாரர்கள் பயனடையும் வகையிலும், மாநிலம் முழுவதும் அம்மா சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் 103 நியாய விலைக் கடைகளில் திறக்கப்பட்டன. இவ்வாறு திறக்கப்பட்ட கடைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

மேலும், அம்மா சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் அனைத்திலும் மக்களின் அன்றாடத் தேவையான 300 வகையான பொருட்கள், அதிகபட்ச சில்லறை விலையில் இருந்து 5 சதவிகிதத்துக்கு குறைவான விலையில் விற்பனை செய்யப்படுவதால் மக்களின் வரவேற்பினை பெற்றுள்ளது.

இத்தகைய சீரிய திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி 582 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள், 5.82 கோடி ரூபாய் செலவில் புதிதாக துவக்கப்படும்.

விவசாயிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் 20 மாவட்டங்களில் செயல்பட்டுவரும் 142 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் 12 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 135 கிடங்குகளும், 500 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 20 கிடங்குகளும், 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 7 கிடங்குகளும், 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 3 கிடங்குகளும் ஆக மொத்தம் 36,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 149 கிடங்குகள் நடப்பாண்டில் 39.37 கோடி ரூபாய் செலவில் புதியதாக கட்டப்படும்.

✵ ✵ ✵

# வனத்துறை

## 05.07.2019

**மா**ண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே!

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகம் மற்றும் இந்திய வன அளவை நிறுவனம் தெரிவித்துள்ளவாறு வன நிலங்களை புவியளவை வரைபடத்தில் பதிவு செய்ய (Geo-referencing) வலியுறுத்தியுள்ளது. எனவே, வனத்துறையின் கீழ் வரும் வனப்பகுதி முழுவதையும் வன எல்லைகளைத் துல்லியமாக புவியிடங்காட்டி Differential Global Positioning System மூலமாக வரையறை செய்வதற்கான திட்டப்பணிகள் **50** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, **3** ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். **2019–2020** ஆம் ஆண்டில் முதற்கட்டமாக **31** கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வனவிரிவாக்க மையங்களிலிருந்து மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, உள்ளூர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. வன விரிவாக்க மையங்களை வலுப்படுத்தும் வகையில், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் ஒருங்கிணைந்த கருத்தரங்குகள் வாயிலாக நவீன தொழில்நுட்பத்தை கையாண்டு சந்தைப்படுத்துவதற்கான வழிமுறைகளை விவசாய பெருமக்களிடம் கொண்டு செல்ல தேவையின் அடிப்படையில் நாற்றங்கால் உற்பத்தி செய்யவும்

கோயம்புத்தூர், நாமக்கல், கரூர், தஞ்சாவூர், காஞ்சிபுரம், தருமபுரி, விருதுநகர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் செயல்பாட்டில் உள்ள 8 வன விரிவாக்க மையங்கள் 2.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படும்.

புலிகள் காப்பகங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு வன உயிரினங்களைப் பார்ப்பதற்கும், மலையேற்றம் செய்வதற்கும், வனத்தின் இயற்கையை ரசிப்பதற்கும் அரிய சந்தர்ப்பங்களை வழங்கி வருகிறது. வன உயிரினங்களைப் பற்றியும், வனத்தினுடைய பயன்பாடுகளைப் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக களக்காடு–முண்டந்துறை, ஆனைமலை, சத்தியமங்கலம் ஆகிய புலிகள் காப்பகங்களில் கல்வி, ஒலி–ஒளித்தகவல் கருத்து விளக்கக் கூடத்துடன் 3 கலை நயமிக்க சிறு கூட்ட அரங்கங்கள் தலா 3 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் நிறுவப்படும்.

வனப்பகுதியில் உள்ள இச்சாலைகளைப் பராமரித்து, மேம்படுத்த வரும் ஆண்டுகளில் 200 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில், நடப்பாண்டில் 577 கி.மீ. நீளமுள்ள வனச்சாலைகளை மேம்படுத்திட 57.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன வளங்களைப் பாதுகாக்க தமிழ்நாடு வனத் துறையில் 1,119 வேட்டைத் தடுப்பு காவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் வனப்பகுதிக்குள் வாழ்வதால், பெரும்பாலும் மலைவாழ் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதோடு மட்டுமன்றி, அடர்ந்த வனப்பகுதியை நன்கு அறிந்துள்ளதன் காரணத்தால், வனப்பகுதிகளில் வன மரங்கள் திருட்டு, வேட்டையாடுதல்,

நக்சல்பாரிகள் ஊடுருவதைத் தடுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதால் வன வளத்தையும் வன உயிரினங்களையும் பாதுகாப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

இப்பணியாளர்கள் வனத்திற்குள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வனவளங்களை காக்கும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு, பணிபுரிந்து வருவதால் அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 10,000 ரூபாயிலிருந்து 12,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# சுற்றுச்சூழல் துறை

## 05.07.2019

**மா**ண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே!

சென்னை மாநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் விதமாக கடந்த ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவின்படி, சென்னை சேத்துப்பட்டு ஏரி, ஆவடி பருத்திப்பட்டு ஏரி மற்றும் மாதவரம், அம்பத்தூர், கொரட்டூர் ஏரிகள் மறுசீரமைக்கப்பட்டன.

தற்போது அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கையை ஏற்று, நடப்பாண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டத்தில் உள்ள சிட்லபாக்கம் ஏரியில் சூழல் மறு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

219 ஏக்கர் விவசாய நிலங்களை ஆயக்கட்டு பரப்பாகக் கொண்டது சிட்லபாக்கம் ஏரி. ஆனால், தற்போது அந்த ஏரி பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சிட்லபாக்கம் ஏரியை சீரமைக்கும் பொருட்டு, ஆக்கிரமிப்பை அகற்றுதல், மண் திட்டுகளால் குறைந்துள்ள நீரின் கொள்ளளவினை அதன் உச்ச கொள்ளளவிற்கு மீளச் செய்தல், ஏரிக்கரையினை பலப்படுத்துதல், உபரி நீர் வீணாவதை தவிர்த்தல், உபரிநீர் தடுப்புச்சுவர் வசதிகளை மீண்டும் ஏற்படுத்துதல், வெள்ள நீரை வடிகால்கள் மூலமாக திருப்புதல், கழிவுநீரை தடுப்பான்களை ஏற்படுத்தி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு திருப்புதல் போன்ற பணிகள் 25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

# பள்ளிக் கல்வித் துறை

## 08.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த உலகத்தையே மாற்றக் கூடிய சக்தி வாய்ந்த கருவி கல்விதான். ஒருவனுக்கு அழிவில்லாத பெருஞ்செல்வமும் கல்விதான். இத்தகைய இன்றியமையாத சிறப்புடைய கல்வியை தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகள் அனைவரும் பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடும், கல்லாதவர்களே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிட வேண்டும் என்ற குறிக்கோளுடனும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் தரமான கல்வியைப் பெறும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள சில புதிய திட்டங்கள் குறித்து நான் இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, நடப்பாண்டில் 124 கூடுதல் வகுப்பறைகள், 83 அறிவியல் ஆய்வகங்கள், 85 நூலக அறைகள், 84 கலை மற்றும் கைவினை அறைகள், 50 கணினி அறைகள், 92 மாணவர் கழிப்பறைகள், 104 மாணவியர் கழிப்பறைகளை புதிதாக கட்டுதல், 1,475 மாணவர் கழிப்பறைகளையும், 1,849 மாணவியர் கழிப்பறைகளையும் பழுது பார்த்தல், 149 பள்ளிகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல்,

132 பள்ளிகளுக்கு 4,493 மீட்டர் நீளமுள்ள சுற்றுச் சுவர் எழுப்புதல், 1,649 மாற்றுத்திறன் மாணவர்களுக்கான கழிப்பறைகள் அமைத்தல், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கென கைப்பிடியுடன் கூடிய 5,726 சாய்வு தளங்கள் அமைத்தல் மற்றும் 156 பள்ளிகளில் உள்ள வகுப்பறைகளை பழுது பார்த்தல் ஆகிய பணிகள் 163 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

இந்தியாவின் அறிவுசார் மையமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்ற நோக்கத்துடன் மாண்புமிகு அம்மா அவர்கள் "தொலைநோக்கு பார்வை 2023"ஐ வெளியிட்டார்கள். காலத்திற்கேற்ப மாற்றங்களைப் புகுத்தி, 12ஆம் வகுப்பு வரையிலான கலைத் திட்டம் மற்றும் பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டம் மற்றும் கலைத் திட்டத்தின்படி, 2, 3, 4, 5, 7, 8, 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடப் புத்தகங்கள் 2019–2020ஆம் கல்வியாண்டின் பயன்பாட்டிற்கென அரசால் தயாரிக்கப்பட்டு உள்ளது. பாடப் பொருள் சார்ந்த கூடுதல் தகவல்கள், மாணவர் செயல்பாடுகள், படங்கள், மதிப்பீடு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பகுதிகள் போன்றவை உள்ளீடு செய்யப்பட்டு, செறிவூட்டப்பட்ட பாடப் புத்தகங்களாக இப்புத்தகங்கள் விளங்குகின்றன. இப்புத்தகங்களை ஆசிரியர்கள் சீரிய முறையில் பயன்படுத்தவும், அதன் மூலம் மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்திடவும், கற்றல் விளைவுகளை ஆய்வு செய்து, கற்றலில் உள்ள கடினமான பகுதிகளைக் கண்டறிந்து, அதற்கு ஏற்றவாறு திட்டமிட்டு, வகுப்பறை செயல்பாடுகளை மேம்படுத்திட, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவி புரியும் வகையில், தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 61 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.

மாணவ, மாணவியரின் நலனில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்ய, **2,650** அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் **244** அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி ஒன்றிற்கு **75** ஆயிரம் ரூபாய் வீதம் **21** கோடியே **71** இலட்சம் ரூபாய் செலவில் கண்காணிப்பு கேமரா (CCTV) வசதி அமைத்துத் தரும். இத்திட்டத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள பள்ளிகள், மாணவியர் பள்ளிகள் மற்றும் தேர்வு மையங்கள் உள்ள பள்ளிகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லாக் காலணிகள் வழங்கும் திட்டம் இவ்வரசால், **2012–2013** கல்வியாண்டு முதல் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் **6** முதல் **10**ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் காலணிகளுக்குப் பதிலாக, **2020–2021**ஆம் கல்வியாண்டு முதல் ஷூ மற்றும் சாக்ஸ் (Shoes and Socks) **10** கோடியே **2** இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் வழங்கப்படும். இதனால் **28** இலட்சத்து **64** ஆயிரத்து **885** மாணவ, மாணவியர் பயன்பெறுவர் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறை மூலம் இவ்வரசு செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டங்களால், பள்ளி மாணவ, மாணவியர், உரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பள்ளிகளில், மிகவும் உகந்த சூழலில், தரமான கல்வி கற்க வழி வகுக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# உயர்கல்வித் துறை

## 08.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உள்ள 112 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பெரும்பாலானவை தேசிய தர மதிப்பீட்டுச் சான்றிதழ் (NAAC) பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இந்த தேசிய தர மதிப்பீட்டுச் சான்றிதழ் பெறும் வகையில், மேலும் 10 அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 54 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

1965ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கல்லூரிக் கல்வி இயக்ககம், 54 வருடங்களாக தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த இயக்ககத்திற்கு தனியானதொரு கட்டடம் ஏற்படுத்திக் கொடுத்து, மின் ஆளுமை, கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் ஆகியவற்றை முழுமையாக நிறைவேற்ற ஏதுவாக கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கான நிருவாக கட்டடத்துடன், சென்னை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்ககத்திற்கான அலுவலகக் கட்டடமும் சேர்த்து 3,534 சதுர மீட்டர் பரப்பளவில் 10 கோடி ரூபாய் செலவில் சென்னை, சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் கட்டப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் உள்ள ராஜூஸ் கல்லூரி ஆகியவற்றை முன்மாதிரிக் கல்லூரிகளாக மேம்படுத்தி, அதில் புதிதாக

இளங்கலை, முதுகலை பாடப் பிரிவுகள் தோற்றுவித்தல், புதிதாக வகுப்பறைகள் கட்டுதல், இருக்கும் வகுப்பறைகளை புதுப்பித்தல், புதிய ஆய்வுக்கூடம் கட்டுதல், ஆய்வுக்கூடத்தை புதுப்பித்தல், கணினிமயமாக்கப்பட்ட நவீன நூலகம் அமைத்தல், புதிய கருத்தரங்கம் கட்டுதல் மற்றும் வளாக மேம்பாடு ஆகிய பணிகள் தலா 4 கோடி ரூபாய் வீதம் 8 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 98 அரசு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதில் 92 அரசு கல்லூரிகள் சொந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்த 92 அரசு கல்லூரிகளுக்கு தொடர்ந்து பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக சிறப்பு மானியமாக ஆண்டொன்றிற்கு 58 கோடி ரூபாய் வீதம் 2 ஆண்டுகளுக்கு 116 கோடி ரூபாய் வழங்கப்படும். இதன் மூலம், சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மாணாக்கர்களுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் கல்விச் சூழல்கள் வெகுவாக மேம்படுத்தப்படும்.

கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் 10 வகுப்பறைக் கட்டடங்கள், கருத்தரங்கு கூடம் மற்றும் பொது கருவிமயமாக்கல் ஆய்வுக் கூடம், சுற்றுச்சுவர், துணைவேந்தர், பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர் மற்றும் கல்விசார் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகளை உலகத் தரத்திற்கு மேம்படுத்த அதிநவீன உபகரணங்களுடன் கூடிய ஒரு மையம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, பல்கலைக்கழக அறிவியல் கருவி மயமாக்கல் மையம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

# எரிசக்தித் துறை

## 08.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், மின் கட்டமைப்பு மேலும் பல ஆண்டுகள் வலுவாக இருப்பதை உறுதி செய்யும் வகையிலும், சென்னையில் தலா 730 மெகாவாட் மின் உற்பத்தி திறனுள்ள இரண்டு கூட்டு சுழற்சி முறையிலான எரிவாயு சுழலி மின் நிலையங்கள், சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். முதற்கட்டமாக, இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை கருத்தில் கொண்டும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டும் தற்பொழுது இயக்கத்தில் உள்ள ஐந்து அனல் மின் நிலையங்களில் இருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் தூசுகள் காற்றில் கலப்பதைக் கட்டுப்படுத்த, 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய உபகரணங்கள் நிறுவப்படும்.

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம், நாமக்கல் மாவட்டம் நல்லூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி ஆகிய 3 இடங்களில் 230 கி.வோ. புதிய துணை மின் நிலையங்கள் 510 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு அமைக்கப்படும்.

சென்னை மாவட்டம் – ஏ.ஆர்.எஸ். கார்டன், தஞ்சாவூர் மாவட்டம் – திருவையாறு, விழுப்புரம் மாவட்டம் – பூத்தமேடு, பெரம்பலூர் மாவட்டம் – கைகளத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் – செங்கத்துறை மற்றும் சேலம் மாவட்டம் – ஆடையூர் ஆகிய 6 இடங்களில் இந்த ஆண்டு 110 கி.வோ. புதிய துணை மின் நிலையங்கள், 135 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மின் கட்டமைப்பை வலுப்படுத்த, 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 47 இடங்களில் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும். மேலும், செயல்பாட்டில் இருக்கும் 33/11 கி.வோ. துணை மின்நிலையங்களில் 69 மின்மாற்றிகள் கூடுதலாகவும், திறன் உயர்த்தியும் நிறுவப்படும்.

மின் கட்டமைப்பில் மின்னழுத்தம் சீராக இருக்கவும், சராசரி தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பீட்டை குறைப்பதற்காகவும் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 ஊரக மின்னூட்டிகளில் உயர் மின்னழுத்த விநியோக அமைப்பு நிறுவுவதன் மூலம் உயரழுத்தம் மற்றும் தாழ்வழுத்தத்திற்கான நீள இடைவெளி விகிதாச்சாரம் (HT/LT Ratio) குறைக்கப்படும்.

நாகப்பட்டினம், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் இயற்கைச் சீற்றங்களின் போது மின் கம்பங்கள் சாய்ந்து அதனால் மின் விநியோகம் தடையாகும் சூழ்நிலை உருவாகிறது. இந்நிலையை களைந்து சீரான மின் விநியோகத்தை உறுதி செய்ய 33 கி.வோ. துணை மின் நிலையங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லும் மின் பாதைகளில் முதற்கட்டமாக சுமார் 100 கி.மீ. மின் பாதை 300 கோடி மதிப்பீட்டில் புதைவடங்களாக மாற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் உள்ள 250 உதவிப் பொறியாளர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும். மேலும், இந்த நிதி ஆண்டிலிருந்து இயக்கப்படவிருக்கும் வட சென்னை அனல் மின் நிலையம் நிலை–III–ற்காக 150 உதவிப் பொறியாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு, நேரடி பணி நியமனம் மூலம் நிரப்பப்படும்.

தமிழ்நாடு எரிசக்தி முகமைக்கு (TEDA) 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சொந்தக் கட்டடம் கட்டப்படும்

இது ஒரு, மாதிரி பசுமை கட்டடமாகத் திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## 09.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிராமங்களில் உள்ள இளைஞர்களின் ஆரோக்கியத்தையும், மன வளத்தையும் மேம்படுத்தவும், கூட்டு மனப்பான்மையை உருவாக்கவும், இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கவும், அதை வெளிக்கொணரவும் மாண்புமிகு அம்மாவின் அரசால், நடப்பு ஆண்டில், 12 ஆயிரத்து 524 ஊராட்சிகளில் மற்றும் 528 பேரூராட்சிகளில் 64 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்" என்ற திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ்,

அ) அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் இருபாலருக்கும் தனித்தனியாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையால் "அம்மா இளைஞர் விளையாட்டுக் குழு" அமைக்கப்படும்.

ஆ) ஒவ்வொரு கிராமத்திலும், கபடி, வாலிபால், கிரிக்கெட், கால்பந்து போன்ற ஏதேனும் மூன்று விளையாட்டுகளுக்கு களம் அமைக்கும் பணிகள், ஊரகப் பகுதிகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழும், பேரூராட்சிகளில் பேரூராட்சிகள் பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ளப்படும்.

இ) இளைஞர்களுக்கு போதிய பயிற்சி அளித்து, ஊராட்சி ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையால் நடத்தப்படும்.

ஈ) வெற்றி பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையால் பரிசுகள் வழங்கப்படும்.

உ) ஊரக மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில், ஆண்டு முழுவதும் விளையாட்டு சாதனங்கள் வழங்கவும், திறந்தவெளி உடற்பயிற்சி மையம் அமைக்கவும், இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து, போட்டிகள் நடத்தி, பரிசு வழங்கவும் 64 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் அவற்றின் தொடர் செலவினத்திற்காக மாநில அரசின் நிதியிலிருந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலம் மேற்கொள்ளப்படும்.

அனைத்து முக்கியமான சர்வதேச சாம்பியன்ஷிப் போட்டிகள் மற்றும் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் சீனியர் மற்றும் ஜூனியர் பிரிவுகளில் பதக்கம் வெல்பவர்களுக்கும் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்படும். மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான முக்கிய சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கும் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும்.

சென்னை நேரு பூங்கா அருகில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பழைய தலைமை அலுவலகக் கட்டடத்தை இடித்துவிட்டு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் 12 ஆசிரியர் குடியிருப்புகள் 3.5 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

✲ ✲ ✲

# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## 09.07.2019

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநில தகவல் ஆணையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டிய அவசியத்தைக் கருதி, இதற்கென சென்னை, சைதாப்பேட்டையில் ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன.

மாநில தகவல் ஆணையத்திற்கு, விசாரணை அறைகள், ஆணையர்களுக்கான அறைகள், அலுவலக அறைகள், மனுதாரர்களுக்கான காத்திருக்கும் அறைகள், நூலகம், கூட்ட அரங்கு, வாகன நிறுத்துமிடம், மனுதாரர்கள் மற்றும் அலுவலர்களுக்கான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்திட தரைத்தளம் மற்றும் 5 தளங்களைக் கொண்ட சொந்தக் கட்டடம் ஒன்று 27.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

✵ ✵ ✵

# மீன்வளத்துறை

## 09.07.2019

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**30.08.2017** அன்று நடந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில், விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பம், காஞ்சிபுரம் மாவட்டம், ஆலம்பரைக்குப்பம் கழிவேலியில் பக்கிங்காம் கால்வாய் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்று என்னால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையின்படி, விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பம், காஞ்சிபுரம் மாவட்டம், ஆலம்பரைக்குப்பம் கழிவேலியில் பக்கிங்காம் கால்வாய் பகுதியில் மீன்பிடித் துறைமுகங்கள் **235** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இந்த மீன்பிடி துறைமுகங்களில், **250** இயந்திரப் படகுகளும், **1,100** வெளிப் பொருத்தும் மோட்டார் கண்ணாடி நாரிழைப் படகுகளும் நிறுத்த இயலும். இதனால் சென்னை மற்றும் கடலூரில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களில் நெருக்கடி குறைக்கப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டத்தில் உள்ள மீனவ கிராமங்களான ஆற்காட்டுத்துறை, புஷ்பவனம், கோடியக்கரை, கொடியக்காடு மற்றும் மணியன்தீவு ஆகிய பகுதியில் மீன்பிடித் துறைமுகம் இல்லாத காரணத்தினால், ஆற்காட்டுத்துறை கிராமத்தில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியக்

கூறுகளை ஆய்வு செய்து உரிய திட்டம் தயாரிக்கப்படும் என 20.09.2017 அன்று நடைபெற்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் என்னால் அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், 100 விசைப் படகுகள் மற்றும் 500 கண்ணாடி நாரிழைப் படகுகள் நிறுத்துவதற்கு வசதியாக 150 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய மீன்பிடித் துறைமுகம் ஆற்காட்டுத்துறையில் அமைக்கப்படும். இதனால், இப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த 10,000 மீனவர்கள் பயன் பெறுவார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில், நாகூர் மீன்பிடி இறங்குதளம் அமைந்துள்ள வெட்டார் ஆற்றின் தெற்குப் பகுதியில் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. முகத்துவாரப் பகுதியில் அதிகப்படியான வண்டல் மண் படிந்ததன் காரணமாக படகுப் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது.

வண்டல் மண் படிவதைத் தடுத்திடவும், மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், படகுகளை சுலபமாக இயக்குவதற்கும், வெட்டார் ஆற்றின் வடக்குப் பகுதியில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். இதனால் 200க்கும் மேற்பட்ட ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் விசைப் படகுகளும் நாகூர் மீன்பிடி இறங்குதளத்தைப் பயன்படுத்த முடியும். இத்திட்டத்தால் மீனவர்கள் ஆண்டு முழுவதும் மீன்பிடிக்கச் செல்ல முடியும்.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டத்திலுள்ள பெரியதாழையில், மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், மீன்பிடி உடைமைகளை கடலரிப்பில் இருந்து பாதுகாக்கவும், வடக்கு கடற்கரையில் ஏற்படும் கடலரிப்பினைக் குறைத்திடும் வகையில், இரண்டு சிறிய நேர்கல் சுவர்களை அமைத்து கடற்கரையினை

பாதுகாத்திட அலை தடுப்புச்சுவர் கருங்கற்களாலும் மற்றும் கான்கிரீட் கற்களாலும் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் 200 மெட்ரிக் டன் அளவில் மீன்கள் கையாளப்படுகிறது. சுமார் 30,000 பேர் தினமும் இத்துறைமுகத்தில் மீன்பிடி மற்றும் மீன் விற்பனைத் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இம்மீனவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, 10 கோடி ரூபாய் செலவில் துறைமுகத்தின் தென்பகுதியில், சிறிய படகு அணையும் தளமும், பெரிய படகு அணையும் தளமும் மற்றும் மீன் விற்பனைக் கூடமும் அமைக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

.* * *

## கால்நடை பராமரிப்புத் துறை

## 09.07.2019

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஏழ்மை நிலையிலுள்ள பெண் பயனாளிகளுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் வகையில் விலையில்லாக் கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தை கடந்த 2011–2012ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தினார்கள். இத்திட்டம் நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து, தமிழ்நாட்டிலுள்ள 20 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய பகுதிகளைக் கண்டறிந்து, அப்பகுதிகளிலுள்ள பெண் பயனாளிகளுக்கு 90 விழுக்காடு மானியத்தில் பயனாளிக்கு தலா 10 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் மற்றும் ஒரு வெள்ளாடு அல்லது செம்மறி ஆட்டுக் கிடா வீதம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தில், ஆடுகளை கொள்முதல் செய்தல், போக்குவரத்து செலவு, ஆடுகளுக்கு காப்பீடு செய்தல் ஆகியவற்றுடன், உபகரணங்கள், மருந்துகள் மற்றும் ஊட்டச் சத்துகளும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம், 6 ஆண்டுகளுக்குப் பிறகு நன்கு வளர்ந்த செம்மறி மற்றும் வெள்ளாடுகளை விற்பதன் மூலம்

ஒரு பயனாளி, முறையே ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் 1.80 இலட்சம் முதல் 2.70 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்ட வழிவகை செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு ஊராட்சிக்கு 45 பயனாளிகள் வீதம் 81 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 3,645 பயனாளிகள் நேரடியாக பயன் அடைவதுடன், இவர்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைவதைக் கண்டு, கிராமத்தில் உள்ள இதர பெண்களுக்கும் ஆடு வளர்ப்பின் மூலம் வருவாய் ஈட்ட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு, அவர்களும் ஆடு வளர்ப்பில் ஈடுபட வழிவகுக்கும். இத்திட்டம், நடப்பாண்டில் 24.06 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

பொருளாதார நலிவிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க கால்நடைகளுக்கான பிரத்யேகக் காப்பீட்டுத் திட்டத்தை பயனாளிகளின் பங்களிப்பு மற்றும் மத்திய அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

நடப்பாண்டில் அனைத்து மாவட்டங்களிலும், மொத்தம் 2.50 இலட்சம் கால்நடை அலகுகள் 22.46 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் காப்பீடு செய்யப்படும். பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளுக்கு 70 சதவிகித மானியத்துடனும், மற்ற பயனாளிகளுக்கு 50 சதவிகித மானியத்துடனும், மலைப் பகுதியில் உள்ள பட்டியல் வகுப்பு, பழங்குடியினர் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளுக்கு 80 சதவிகித மானியத்துடனும், இதர பயனாளிகளுக்கு 60 சதவிகித மானியத்துடனும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 28 கால்நடை நோய் புலனாய்வு ஆய்வகங்களும், 2 கோழியின நோய் ஆராய்ச்சி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

உலகத் தரத்துடன் சிறந்த ஆய்வக முறைகளுடன் கூடிய ஒரு புதிய “மத்திய கால்நடை நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகம்” (Central Animal Disease Diagnostic and Surveillance) காஞ்சிபுரம் மாவட்டம், படப்பையில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் தோற்றுவிக்கப்படும். இந்த ஆய்வகத்தில், மத்திய நோய் ஆய்வுக் கூடம், ஏற்றுமதிக்கான கால்நடை உற்பத்திப் பொருட்கள் ஆய்வுக்கூடம், கால்நடை மருத்துவர்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழில்நுட்ப பயிற்சிக்கூடம் முதலிய வசதிகள் ஏற்படுத்தப்படும்.

சிறந்த கால்நடை மருத்துவ சேவையை வழங்குவதற்கு, அனைத்து வசதிகளுடன் கூடிய உட்கட்டமைப்பு அவசியமாகும். அந்த வகையில், புதியதாக தரம் உயர்த்தப்பட்ட 100 கால்நடை மருந்தகங்களுக்கு அறைகலன்களுடன் கூடிய புதிய கட்டடங்கள் தலா 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 37 கோடி ரூபாய் செலவில் நடப்பாண்டில் கட்டித்தரப்படும்.

பால் உற்பத்தி பெருக, காளைக் கன்றுகளை விட கிடேரிக் கன்றுகள் பிறப்பதையே விவசாயிகள் அதிகம் விரும்புகிறார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் செயல்பட்டு வரும் விந்து உற்பத்தி நிலையத்தில், விந்தணுவில் பாலினம் பிரிக்கும் ஆய்வகம் 47.50 கோடி ரூபாய் செலவில் நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * *

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## 10.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

★ மாண்புமிகு அம்மா அவர்கள் 2015–2016ஆம் ஆண்டில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தினை 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசால் இதற்கான நிதி ஒதுக்கீடு கடந்த 2018–2019ஆம் ஆண்டில் 1,200 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டிலும் ரூ.1,200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன்மூலம், 5,000 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

★ “கஜா” புயலினால் கட்டடங்கள், சாலைகள் மற்றும் பாலங்களுக்கு அதிக அளவிலான பாதிப்புகள் ஏற்பட்டன. இதனைக் கருத்தில் கொண்டு, கஜா புயலினால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் கோட்டத்திற்குட்பட்ட சேதமடைந்த சாலைகள் மற்றும் பாலங்களில் மறுசீரமைப்புப் பணிகள் 200 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

★ பழுதடைந்த கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச்சாலைகளை வலுப்படுத்தவும், தார் இடப்படாத சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்தவும், நடப்பு ஆண்டில் 255 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரக சாலைகள் மேம்பாடு மற்றும் பாலங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ ஊரகப் பகுதிகளில், குடியிருப்புகளின் சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், சாலைகள் மற்றும் தெருக்களில் தேங்காமல் தடுத்திடவும், நீர் வடிக்கப்பட்டு நிலத்தடி நீர் செறிவூட்டவும், நோய்த் தொற்று ஏற்படாமல் பாதுகாக்கவும், தனிநபர் உறிஞ்சுக் குழிகள் அமைக்கவும், ஊரகப் பகுதிகளில், ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கழிவு நீர் வடிகால்களைச் சுற்றி கழிவு நீர் தேங்காமல் தடுத்திட 2 இலட்சத்து 500 சமுதாய உறிஞ்சுக் குழிகள், 183 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் நடப்பாண்டில் அமைக்கப்படும்.

★ கிராமப்புறங்களில் தண்ணீரைச் சேமித்து பாசனத்திற்குப் பயன்படுத்திடவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், வாய்க்கால்கள், ஓடைகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களைக் கொண்டு நடப்பாண்டில் 10,000 தடுப்பணைகள் 312 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

ஊரக மற்றும் நகர்ப்புற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குறித்த நேரத்தில், குறைந்த வட்டி விகிதத்தில் போதுமான கடன் கிடைக்க வழிவகை செய்ய கடந்த 2018–2019ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் விதி எண் 110இன் கீழ், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பாக 11 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்படும் என்ற இலக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த இலக்கினையும் விஞ்சி 11 ஆயிரத்து 449 கோடி ரூபாய் கடன், வங்கிகள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

★ நடப்பாண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பின் மூலம் ரூ.12 ஆயிரத்து 500 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை நான் இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் என்ற புதிய திட்டம், நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் நடப்பாண்டு முதல் அடுத்த 4 ஆண்டுகளுக்கு 210.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களில் தலா 4 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும். இவ்வாண்டு இத்திட்டத்திற்கு 40.61 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். வட்டார அளவில் மேம்படுத்தப்பட்ட வலுவான கூட்டமைப்பை உருவாக்குதல், இணையவழி நிதிப் பரிமாற்றம், பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத பிரிவுகளில் தனிநபர் மற்றும் கூட்டுத் தொழிலுக்கான வணிக மேம்பாட்டினை ஊக்குவித்தல் போன்றவை இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

* ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் மூலம் பல்வேறு தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப கிராம மற்றும் நகர்ப்புற இளைஞர்கள் திறன் பயிற்சி பெற வழிவகை செய்யப்படும்.

இதற்காக, நடப்பு ஆண்டில் 125 கோடி ரூபாய் செலவில் 25,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சிகள் வழங்கப்படும்.

* பல்லவன் கிராம வங்கி மற்றும் பாண்டியன் கிராம வங்கி ஆகிய இரண்டு மண்டல ஊரக வங்கிகள் 01.04.2019 அன்று ஒருங்கிணைந்து, மாநிலம் முழுவதும் 630 கிளைகளைக் கொண்டு தமிழ்நாடு கிராம வங்கி என்ற பெயரில் சேலத்தினை தலைமையிடமாகக்கொண்டு செயல்படுகின்றது. இதற்கென தமிழ்நாடு கிராம வங்கியும் ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனமும் ஒருங்கிணைந்த ஒரு வளாகம் அமைக்க சேலத்தில் 2 ஏக்கர் அரசு நிலம் வழங்கப்படும். இவ்வளாகம், வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிகள் அனைத்தையும் வழங்கும் ஒரு மையமாக செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

# நீதிமன்றங்கள்

## 10.07.2019

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

✶ சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் தற்போது இயங்கி வரும் பல்வேறு சார் நீதிமன்றங்களுக்கு கூடுதல் இடம் அளிப்பதற்காக ரூ.202.40 கோடி மதிப்பீட்டில் ஒரு அடுக்குமாடிக் கட்டடம் கட்டப்படும்.

✶ தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கான ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், வாகன நிறுத்தம், உணவக கட்டடம் மற்றும் பொது கழிப்பிடம் போன்ற கூடுதல் வசதிகளுடன் ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

✶ நாமக்கல் மாவட்டம், பரமத்தியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம், சுற்றுச் சுவர், வாகன நிறுத்தம், இருசக்கர வாகன நிறுத்தம், உணவகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் 10.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

✵ ✵ ✵

# சட்டத் துறை

## 10.07.2019

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

✶ ஆண்டுதோறும் சட்டக் கல்வி பயில்வதற்காக விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு குறைந்த செலவில் சட்டக் கல்வியினை வழங்கிட புதிதாக 3 அரசு சட்டக் கல்லூரிகள் துவங்கப்படும். இதற்காக தலா 3 கோடியே 17 இலட்சத்து 50 ஆயிரம் வீதம், மொத்தம் 9 கோடியே 52 இலட்சத்து 50 ஆயிரம் செலவில், 2019–2020 கல்வியாண்டு முதல் தொடங்கப்படும். உடனடியாக, ஆரம்ப கட்ட பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு தனி அலுவலர் நியமிக்கப்படுவார்.

✶ கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு போதுமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் 7 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்.

✵ ✵ ✵

# பதிவுத் துறை

## 10.07.2019

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

- ✶ சேலத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை பதிவுத் துறை அலுவலகம் மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள 24 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.24 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

- ✶ மேலும், நடப்பாண்டில் திருச்சிராப்பள்ளியில் வணிகவரி இணை ஆணையர் அலுவலகத்தை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வணிகவரித் துறை அலுவலக வளாகம் ரூ.23.38 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

- ✶ இணையத்தின் மூலமாக பதிவுத் துறை ஆவணங்களை பதிவு செய்ய ஸ்டார் 2.0 மென்பொருள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. ஸ்டார் 2.0 மென்பொருள் மூலம் விரைவான மற்றும் வெளிப்படையான சேவை வழங்கப்படுவதால், பொதுமக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இதன் சேவைகளை மேலும் செம்மைப்படுத்த பழைய கணினிகளை மாற்றி புதிய கணினி மற்றும் உபகரணங்கள் 21.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## 11.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம் அடையாறு மற்றும் கூவம் நதிகளுக்கான சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் இதனை சேர்ந்த பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை இடைமறித்தல், மாற்று வழிகளை அமைத்தல், இடத்திற்கு ஏற்ப ஆங்காங்கே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள சென்னை கழிவுநீர் உட்கட்டமைப்புகளை புதுப்பித்தல், வலுப்படுத்துதல் போன்ற பணிகளை செயல்படுத்த, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, 2019 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் செயல்படுத்தும் இத்திட்டத்திற்கு சுமார் 2,371 கோடி ரூபாய் செலவாகும் என திட்டமிடப்பட்டு, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

விரைவான நகரமயமாதல், தொழில்மயமாக்கல் போன்ற காரணங்களால், தமிழ்நாட்டில் குடிநீர்த் தேவை தொடர்ந்து அதிகரித்து வரும் அதே வேளையில், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல காரணங்களால் தொடர்ச்சியாக பருவமழை பொய்த்து, நீர்வளம் குறைந்து வருகிறது.

இந்த நிலையை சிறப்பாக எதிர்கொள்வதோடு மட்டுமல்லாமல், நீர்நிலைகள் மாசுபடுவதைத் தவிர்ப்பது, தொழிற்சாலை மற்றும் இதர பயன்பாடுகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை உபயோகிப்பது,

கழிவு நீர் மறு உபயோகக் குழாய்க் கட்டமைப்பை (Grid) தெரிவு செய்வது உள்ளிட்ட வழிமுறைகளைக் கொண்ட ஒருங்கிணைந்த கொள்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு உருவாக்கும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் "தொலைநோக்கு திட்டம் 2023"இல், கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்து மறுசுழற்சி செய்வது ஒரு அங்கமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை நடைமுறைப்படுத்தி, நிலத்தடி நீர் மட்டத்தை பெருக்கிடவும், நீர் வழங்கல் ஆதாரங்களை அதிகரிப்பதற்கு நிரந்தர மற்றும் நிலையான தீர்வுகளைக் கண்டறிவதற்கும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், 260 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மூன்றாம் நிலை சுத்திகரிப்பின் மூலம் சுத்திகரித்து, மறுபயன்பாட்டிற்காக சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நீர்நிலைகளில் விடுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும்.

அதேபோன்று, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளில் உள்ள நீர் நிலைகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க, சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீரினை மறு சுழற்சி செய்து தொழிற்சாலைகள் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டுதல் போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்கு உபயோகிக்கும் சாத்தியக் கூறுகளைக் கண்டறிய, உரிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, தமிழ்நாட்டில் 2ஆவது பெரிய மாநகராட்சியாகும். இங்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள், கோயம்புத்தூரில் ஒரு ஒருங்கிணைந்த நவீன பேருந்து நிலையம் அமைக்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில், வெள்ளலூரில் 61.62 ஏக்கர் பரப்பளவில், 178.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அரசு மானியம் மற்றும் உள்கட்டமைப்பு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்று நடப்பு நிதியாண்டில் இப்பேருந்து நிலையம் செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

# சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## 11.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்வி பயில வருகை புரியும் குழந்தைகளுக்கு 2012–2013 மற்றும் 2013–2014ஆம் ஆண்டு முதல் இரண்டு இணை இலவச வண்ண சீருடை வழங்கும் திட்டம் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் குழந்தைகளின் வருகை அதிகரித்துள்ளது. இத்திட்டத்தினை தருமபுரி, நாமக்கல், இராமநாதபுரம், சேலம், திருவண்ணாமலை, திருவாரூர், மற்றும் விருதுநகர் ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள, அங்கன்வாடி மையங்களுக்கு, 6.51 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அரசு மற்றும் சொந்த கட்டடங்களில் செயல்படும் அங்கன்வாடி மையக் கட்டடங்களில் ஏற்படும் பழுதுகளை சீர்படுத்த நடப்பாண்டில் 1,133 அங்கன்வாடி மையக் கட்டடங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 22.66 கோடி ரூபாய் செலவில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

அங்கன்வாடி மையங்களை தூய்மையாக பராமரிக்கவும், அங்கன்வாடி மையங்களின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் பொருட்களை உடனே வாங்குவதற்கும், சிறிய வகையிலான கட்டடப் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டும், ஓர் அங்கன்வாடி மையத்திற்கு 3,000 ரூபாய் வீதம் 38,489 அங்கன்வாடி

மையங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு நிதி சுமார் 11.55 கோடி ரூபாய் வழங்கப்படும்.

10 ஆயிரத்து 888 அங்கன்வாடி மையங்களுக்கு நாற்காலி, இரும்பு அலமாரி, நீர்வடிகலன் (Water Filter) போன்ற அறைகலன்கள் 10.59 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

அங்கன்வாடி மையங்களுக்கு வருகின்ற தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் பொதுவான உடல் உபாதைகள், காய்ச்சல், பேதி, காயம், தோல்தொற்று ஆகியவற்றை சமாளிக்கும் வகையில், எளிதாக பயன்படுத்தக்கூடிய மருத்துவ பொருள் அடங்கிய மருத்துவப் பெட்டியும், கைத்துண்டு, சீப்பு, நகவெட்டி மற்றும் சோப்பு அடங்கிய சுகாதாரப் பெட்டியும், 31 மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு நடப்பாண்டில் 7.35 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் 5,970 சத்துணவு மையங்களுக்கு சமையல் உபகரணங்கள் சுமார் 8.63 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

சத்துணவு மையங்களில் காய்கறித் தோட்டம் அமைத்து, காய்கறிகளை உற்பத்தி செய்து பயன்படுத்த ஏதுவாக தோட்டக் கலைத் துறையின் உதவியுடன் காய்கறித் தோட்டம் அமைக்க, முதற்கட்டமாக ஒரு சத்துணவு மையத்திற்கு 5,000 ரூபாய் வீதம், 9,915 சத்துணவு மையங்களில் சுமார் 4.96 கோடி ரூபாய் செலவில் காய்கறித் தோட்டம் அமைக்கப்படும்.

வறுமையாலும், பல்வேறு கடினமான சூழ்நிலைகளாலும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளித்து பராமரிப்பதற்கு, அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் இல்லம் இராமநாதபுரம் நகரத்தில் 70 பெண் குழந்தைகளுடன், வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும்

இந்த இல்லத்திற்கு, அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட புதிய கட்டடம் **1,614** சதுர மீட்டர் பரப்பளவில் **5.28** கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

சென்னை, கெல்லீஸில், அரசு கூர்நோக்கு இல்லம் செயல்பட்டு வருகின்றது. இந்த இல்லத்தில் உள்ள **150** சிறார்களின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் அவர்களின் மறுவாழ்விற்குரிய பயிற்சிகள் வழங்கிட தேவையான, அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் கொண்ட கூடுதல் கட்டடங்கள், **4.53** கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

தற்போது, அரசு கூர்நோக்கு இல்லங்களில் தங்கியுள்ள சிறார்களை ஒவ்வொரு விசாரணை நாளிலும் சம்மந்தப்பட்ட மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கு அழைத்துச் சென்று வர வேண்டியுள்ளது. ஏற்கெனவே, **8** மாவட்டங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் கூர்நோக்கு இல்லங்களுடன் இணைக்கப்பட்டு, கூர்நோக்கு இல்லச் சிறார்களிடம் காணொலிக் காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது எஞ்சியுள்ள தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கடலூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களிலுள்ள **6** அரசு கூர்நோக்கு இல்லங்களை, அவற்றுடன் தொடர்புடைய **16** மாவட்டங்களிலுள்ள இளைஞர் நீதிக் குழுமங்களுடனும் காணொலிக் காட்சி மூலம் இணைக்கும் பணிகள் எல்காட் நிறுவனம் மூலம் **2.6** கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

.※ ※ ※

# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

## 11.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மன வளர்ச்சி குன்றியோர், கடுமையாக தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் 1,500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அதிக உதவி தேவைப்படும் (High Support need) 800 மாற்றுத்திறனாளிகள், தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக்கொள்ள ஏதுவாக அவர்களுக்கு, மாதாந்திர பராமரிப்புத் தொகையுடன் கூடுதலாக 1,000 ரூபாய் உதவித் தொகை நடப்பு நிதியாண்டில் 96 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில், தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் 4 மாவட்டங்களில் அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. தற்போது, கூடுதலாக 10 மாவட்டங்களில், தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உபகரணங்களுடன் கூடிய பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் 2.65 கோடி ரூபாய் செலவில் இந்த நிதியாண்டில் தொடங்கப்படும். இதன் மூலம், 250 தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுவர்.

மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக, மானியத்துடன் கூடிய பல்வேறு சுய வேலைவாய்ப்புத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. 2018–2019ஆம்

நிதியாண்டில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை மையம் அமைக்க, 100 மாற்றுத்திறனாளிகளுக்கு, அவர்கள் செலுத்த வேண்டிய முன்பணத்தொகை 25,000 ரூபாயை தமிழ்நாடு அரசே செலுத்திடும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டம் மாற்றுத்திறனாளிகளிடம் அதிக வரவேற்பு பெற்றதால், ஆவின் நிறுவனத்திற்கு பயனாளிகள் செலுத்த வேண்டிய முன்பணத்தொகை 25,000 ரூபாய் உடன், ஆவின் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பயனாளிகளுக்கு மானியமாக 25,000 ரூபாய் என மொத்தம் ஒரு பயனாளிக்கு 50,000 ரூபாய் வீதம் 200 பயனாளிகள் பயனடையும் வகையில் நடப்பாண்டில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைக் கூறி அமைகிறேன்.

* * *

# தொழில் துறை

## 12.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள், தமிழ் சங்கங்கள், தொழில் அமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தி "முதலீட்டுத் தூதுவர்களை" உருவாக்கி, தமிழ்நாட்டில் முதலீடு செய்வது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவர்தம் ஆலோசனைகள் பெறவும், முதலீடுகளை ஈர்க்கவும், "யாதும் ஊரே" என்ற தனி சிறப்புப் பிரிவு மற்றும் வலைதளம் 60 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கிடவும், தொழில் துவங்க முன்வரும் முதலீட்டாளர்களை வல்லுநர்களைக் கொண்டு அடையாளம் காணவும், ஜப்பான், தென் கொரியா, அமெரிக்கா, சீனா, தைவான், பிரான்சு, இஸ்ரேல் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கென தனித்தனியாக சிறப்பு அமைவுகள் அமைக்கப்படும். மேலும், தலைநகர் புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் புதிய பிரிவு ஒன்று துவங்கப்படும். "தொழில் வளர் தமிழகம்" என்ற பெயரில் புதிய அடையாள முத்திரையுடன், நவீன உத்திகளைப் பயன்படுத்தி கூட்டங்கள், கருத்தரங்குகள், இணையவழி பரப்புரை மற்றும் விளம்பரங்கள், தகவல் பரிமாற்றங்கள் போன்றவை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆண்டு தோறும் 10 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப 20 ஏக்கர் அல்லது அதற்கு மேலாக நிலம் அளிக்க விரும்பும் தனியார் நில உரிமையாளர்களுடன் அத்தகைய தொழில் முதலீடு

செய்ய விரும்பும் தொழில் முனைவோர்களை இணைக்கும் பாலமாக ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு வலைதளம் உருவாக்கப்படும்.

“தொழில் தோழன்” (Biz Buddy) என்ற தொழில் நிறுவனங்களுக்கான ஒருங்கிணைந்த இணைய அடிப்படையிலான குறைதீர் வழிமுறை 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். அதிகபட்சமாக 4 வாரங்களுக்குள் அப்புகார் மீது நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணப்படும்.

தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, சிப்காட் நிறுவனம் தூத்துக்குடி மாவட்டம், முல்லக்காடு கிராமப் பகுதியில் 634 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் ஆலையை அமைக்கும்.

ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி உடனடியாக தொழில் துவங்குவதற்கு ஏதுவாக காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம்–வடகால் மற்றும் ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் பூங்காக்களில் அனைத்து வசதிகளுடன் (Plug & Play facility) கூடிய தொழிற்கூடக் கட்டடங்கள், தலா 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

சிப்காட் தொழில் பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் பணியாளர்களுக்கு, அவ்விடத்திலேயே குடியிருப்பு வசதியினை ஏற்படுத்த நடப்பாண்டில் சிப்காட் வல்லம் – வடகால் மற்றும் இராணிப்பேட்டை தொழில் பூங்காக்களில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

சிப்காட் சிறுசேரி தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் இதர ஏற்றுமதியாளர்கள் பயன் பெறும் வகையில், கருத்தரங்குக் கூடங்கள், பயிற்சி மையங்கள் போன்ற வசதிகள் அடங்கிய வணிக வசதிகள் மையம் ஒன்று 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 50,000 சதுரடி பரப்பளவில் கட்டப்படும்.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் தொழில் மயமாக்க ஏதுவாக, குறைந்தபட்சம் 100 ஏக்கர் அல்லது அதற்கும்

மேலாக நிலம் வைத்துள்ள தனியார் நில உரிமையாளர்களுடன் இணைந்து கூட்டாண்மை முறையில், தொழிற்பூங்காக்களை சிப்காட் நிறுவனம் உருவாக்கும். இவ்வாறு உருவாக்கப்படும் தொழிற்பூங்காக்களுக்கு, சிப்காட் தொழிற்பூங்காக்களுக்கான சலுகைகள் நீட்டித்து வழங்கப்படும்.

குறு மற்றும் சிறு நிறுவனங்கள் தங்களது உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், தொழில்களை விரிவுபடுத்தவும், லாபகரமாக தொழில்களைத் தொடரவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் 3 விழுக்காடு வட்டி மானியம் 6 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்படும். வட்டி மானியத்தை 6 விழுக்காடாக உயர்துவதன் மூலம் ஆண்டுதோறும் சுமார் 400 புதிய குறு மற்றும் சிறு நிறுவனங்கள் தொடங்குவதற்கும், சுமார் 1,200 குறு மற்றும் சிறு நிறுவனங்கள் விரிவாக்குவதற்கும், இதன் மூலம் கூடுதலாக சுமார் 10,000 வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும். இதற்கான கூடுதல் மானியத் தொகை 33 கோடி ரூபாயை ஆண்டுதோறும் அரசே ஏற்கும்.

கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் இடத்தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, அருகில் உள்ள 9 ஏக்கர் நிலத்தில் சுமார் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கூடுதலாக ஒரு தொழில்நுட்ப வளாகம் 200 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும்.

தமிழ்நாட்டில் வான்வெளி மற்றும் உயர் தொழில்நுட்ப சாதனங்களின் உற்பத்தி வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரில் வான்வெளி மற்றும் பாதுகாப்புப் பூங்காவில் நிறுவப்பட உள்ள உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையத்தில் புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் முனைவோருக்கான சிறப்பு மையம் (Centre of Excellence), ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் சுமார் 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்படும்.

✵ ✵ ✵

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## 12.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், உயர்தர மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நிறுவி உற்பத்தியைப் பெருக்க, தகுதியான இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு முதலீட்டு மானியமாக தற்போது வழங்கப்பட்டு வரும் 30 இலட்சம் ரூபாய் என்ற மானிய உச்சவரம்பை உயர்த்தி, 50 இலட்சம் ரூபாயாக வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு தோராயமாக 20 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

தமிழ்நாட்டில் 64 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்களில் 10,000க்கும் மேற்பட்ட கிராமப்புறப் பெண்களுக்குத் தொடர்ச்சியான வேலைவாய்ப்பு கிடைத்தது. கஜா புயலினால் ஏற்பட்ட தாக்கத்தினால் தஞ்சாவூர், புதுக்கோட்டை, தேனி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள கயிறு சங்கங்கள் போதுமான மூலப்பொருட்கள் கிடைக்காமல் பாதிப்பு அடைந்துள்ளன. இந்த கடினமான சூழ்நிலையினை சமாளித்து, கயிறு சங்கங்கள் எதிர்காலத்தில் சிறப்பாக இயங்கும் பொருட்டு, மேற்படி கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு 2.33 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

✵ ✵ ✵

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## 12.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொதுத் துறை நிறுவனங்களான பவர்கிரிட் கார்ப்பரேஷன் இந்தியா லிமிடெட் மற்றும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் சமூகப் பங்களிப்புடன் காஞ்சிபுரம் மாவட்டம் – பெரும்பாக்கம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் – செம்போடை ஆகிய இரண்டு இடங்களில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 26 கோடி ரூபாய் செலவில் துவக்கப்படும்.

இளைஞர்கள் வேலைவாய்ப்பு அதிகமுள்ள தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற ஏதுவாக, அம்பத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, கடலூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், சேலம், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய 11 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நீண்ட கால மற்றும் குறுகிய கால புதிய தொழிற்பிரிவுகள் 44.19 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பெரும்பாலானவர்கள் ஏழை, எளிய மாணவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் சுயதொழில் செய்வதை ஊக்கப்படுத்திடும் நோக்கில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 14 சுய வேலைவாய்ப்பு தொழிற்பிரிவுகளில் ஆண்டுதோறும்

வெற்றிகரமாக பயிற்சி முடித்துச் செல்லும் **10,000** நபர்களுக்கு (trainees), அவரவர் தொழிற்பிரிவிற்கு ஏற்ப **7.50** கோடி ரூபாய் செலவில் கருவித் தொகுப்புகள் வழங்கப்படும்.

சிவகங்கை, நாமக்கல், காரைக்குடி, திண்டுக்கல் (மகளிர்), தூத்துக்குடி, சேலம் (மகளிர்), மதுரை (மகளிர்), தருமபுரி, புதுக்கோட்டை, புள்ளம்பாடி(மகளிர்), நாகலாபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய **12** அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு உணவுடன் கூடிய தங்கும் விடுதிகள் **64.41** கோடி ரூபாய் செலவில் புதிதாக ஏற்படுத்தப்படும்.

* * *

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## 12.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த ஆண்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நான் பதிலளிக்கும்போது, நான்காவது தொழில் புரட்சிக்கான தகவல் தொழில்நுட்பங்களின் (emerging technologies) மூலம் தமிழ்நாட்டின் மின் ஆளுமையை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருந்தேன்.

அதன் அடிப்படையில்,

வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பங்களில் ஒன்றான நம்பிக்கை இணையம் (Blockchain) மூலம் பரிவர்த்தனைகளில் உள்ள உண்மைத் தன்மையினை அறிந்திடும் வகையில், தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் சுமார் 40.80 கோடி ரூபாய் செலவில் நம்பிக்கை இணையக் கட்டமைப்பு (Blockchain Backbone Infrastructure) ஒன்று அமைக்கப்படும். இத்தொழில்நுட்பத்தில் சேகரிக்கப்படும் தகவல்கள் மற்றும் தரவுகளை மாற்ற இயலாத காரணத்தால், அரசின் தரவுகள் அனைத்தும் பாதுகாப்பாக வைத்திட இயலும்.

அரசுத் துறையில் பல்வேறு சேவைகளைப் பெற பொதுமக்கள் அத்துறை சார்ந்த அலுவலகங்களுக்குச் சென்று விண்ணப்பித்துப் பெறுவது மட்டுமல்லாமல், அரசு இ–சேவை மையங்கள் இணையதளம் மற்றும் கைபேசி செயலி வாயிலாகவும் விண்ணப்பித்துப் பெற்று

வருகின்றனர். தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் (TNeGA) "மக்கள் எண்" உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, ஒவ்வொரு நபருக்கும் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சட்டப்படியான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் குடிமக்கள் பெட்டகத்திலிருந்து (Citizen Vault) விண்ணப்பிக்காமலேயே குறிப்பறிந்து, தானாகவே வழங்கப்படும். இதனைப் பெற்றிட, தனிநபர் தன்னுடைய கைபேசி எண்ணை பயனர் குறியீடாகவும், ஒரு முறை கடவுச் சொல்லைப் (OTP) பயன்படுத்தியும் பெற்றுக்கொள்ளலாம். "மக்களைத் தேடி அரசு" என்ற இந்தத் திட்டம் **90** கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

.✵ ✵ ✵

# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 16.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களது வருவாயை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், நெசவாளர்கள் தற்போது பெற்று வரும் அகவிலைப்படியில் 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும். இதனால் 1,137 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள சுமார் 2 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள், ஆண்டு ஒன்றுக்கு 14 கோடி ரூபாய் அளவிற்கு பயன்பெறுவார்கள்.

விலையில்லா வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூலி, சேலை ஒன்றுக்கு 39 ரூபாய் 27 காசுகளில் இருந்து 43 ரூபாய் ஒரு காசாகவும், வேட்டி ஒன்றுக்கு 21 ரூபாய் 60 காசுகளில் இருந்து, 24 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். பெடல் தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூலி, சேலை ஒன்றுக்கு 85 ரூபாய் 67 காசுகளில் இருந்து, 90 ரூபாய் 29 காசுகளாகவும், வேட்டி ஒன்றுக்கு 65 ரூபாய் 75 காசுகளிலிருந்து 69 ரூபாய் 58 காசுகளாகவும் உயர்த்தி வழங்கப்படும். அதே போன்று, விலையில்லா சீருடை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கூலி, மீட்டர் ஒன்றுக்கு 11 ரூபாய் 32 காசுகளில் இருந்து, 12 ரூபாய் 16 காசுகளாக

மாண்புமிகு அம்மாவின் அரசால் உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள 54 ஆயிரம் விசைத்தறி மற்றும் 10 ஆயிரத்து 500 பெடல் தறி கூலித் தொழிலாளர்கள் சுமார் 11 கோடியே 23 இலட்சம் ரூபாய் அளவிற்கு பயன் பெறுவார்கள்.

தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் நபார்டு வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் நடைமுறை மூலதனத்தை காசுக்கடனாகப் பெற்று வருகின்றன. அத்தகைய கடனுக்கு, தற்போது தமிழ்நாடு அரசு 4% மானியமாக வழங்கி வருகிறது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த புதிய ஜவுளிக் கொள்கை 2019இல் அறிவிக்கப்பட்டவாறு, வட்டிச் சுமையினைக் குறைக்கும் விதமாக, தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வரும் வட்டி மானியம் 4 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காடாக உயர்த்தப்படும். இதன்மூலம் ஆண்டொன்றுக்கு ஏற்படும் செலவினம், 14 கோடியே 40 இலட்சம் ரூபாயிலிருந்து 21 கோடியே 60 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

* * *

# வேளாண்மைத் துறை

## 16.07.2019

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் பாதுகாவலனாக விளங்கும் “பனை மரங்களுக்கு” மாண்புமிகு அம்மாவின் அரசு முக்கியத்துவம் அளித்து, வறட்சி மிகுந்த மானாவாரி மற்றும் கடற்கரைப் பகுதிகளில் பனைமரங்களை அதிக அளவில் வளர்ப்பதற்கு, முதற்கட்டமாக நடப்பாண்டில் 10 கோடி ரூபாய் செலவில் 2.5 கோடி பனை விதைகள், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை மூலம் பெற்று விவசாயிகளுக்கு வழங்கப்படும். இப்பணி வருங்காலங்களிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தரமான இடுபொருட்களைச் சேமித்து விவசாயிகளுக்கு விநியோகிக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு, இதுவரை 17 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களை உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தி உள்ளது. நடப்பாண்டிலும், 100 விதை சேமிப்புக் கிடங்குகளுடன் கூடிய இம்மையங்களை கட்டுவதற்கு 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாட்டில் நிலவும் தட்பவெட்ப நிலை, மிக நீள இழை பருத்தி சாகுபடிக்கு உகந்ததாக உள்ளதாலும், இந்த ரகங்களை சாகுபடி செய்தால், பருத்தி விவசாயிகளுக்கு லாபகரமான விலை கிடைக்கும் என்பதாலும், நடப்பாண்டில், மிக நீள இழைப்பருத்தி ரக விதைகள், உயிர் உரங்கள், பருத்தி அறுவடை

இயந்திரம் உள்ளிட்ட பல்வேறு இடுபொருட்களை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க 11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

நமது உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான நுண்ணூட்டச் சத்தினை வழங்கவல்ல சிறுதானியப் பயிர்களை குறைந்த நீரில் சாகுபடி செய்ய முடியும் என்பதோடு மட்டுமல்லாமல், மண் வளம் குறைவான நிலப்பகுதிகளிலும் சாகுபடி செய்ய இயலும். எனவே, இப்பயிர்களின் சாகுபடியினை அதிகரித்து, உற்பத்தியை உயர்த்தும் வகையில், தரமான விதை விநியோகம், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் பயிர்ப் பாதுகாப்பிற்குத் தேவையான கைத்தெளிப்பான் விநியோகம் போன்ற தொழில்நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்கள், கருத்தரங்கங்கள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள், பயிற்சிகள் போன்ற பணிகளுக்காக நடப்பாண்டில் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

சென்னை வண்ணாரப்பேட்டையில், வேளாண் பொறியியல் துறைக்கு சொந்தமான 5.5 ஏக்கர் நிலத்தில் 5 கோடி ரூபாய் செலவில் நகரப்புற மக்களைக் கவரும் வகையில் “தோட்டக்கலை பாரம்பரிய பூங்கா” அமைக்கப்படும்.

கரும்பு விவசாயிகள், குறித்த நேரத்தில் சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக கூட்டுறவு சர்க்கரை ஆலை, உழவர் உற்பத்தியாளர் அமைப்பு அல்லது தனியார் தொழில் முனைவோர் மூலம் இயந்திர வாடகை மையம் அமைக்க இயந்திரங்களுக்கான விலையில் 60 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் 40 சதவிகிதம் அரசு மானியமாக வழங்கி, தற்போது 11 வாடகை மையங்கள் இயங்குகின்றன. நடப்பாண்டில், 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், கூடுதலாக கரும்பு சாகுபடி இயந்திரங்களுக்கான 10 வாடகை மையங்கள் விவசாயிகளின் நலன் கருதி அமைக்கப்படும்.

மானாவாரி விவசாயிகளின் நலனுக்காக, நடப்பாண்டில் மேலும் 150 மதிப்புக்கூட்டும் மையங்களை உருவாக்குவதற்கு 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த ஆண்டு, 243 கிராம அளவிலான பண்ணை இயந்திர வாடகை மையங்கள் 19 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

அதிக விலையுள்ள வேளாண் இயந்திரங்களை வாங்க இயலாத விவசாயிகளுக்கு உதவும் வகையில், இவ்வியந்திரங்கள் வேளாண் பொறியியல் துறை மூலம் குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகிறது. விவசாயிகள் பயன்படுத்துவதற்காக இத்தகைய இயந்திரங்களை வேளாண் பொறியியல் துறை மூலம் விலைக்கு வாங்க 70 கோடியே 30 இலட்சம் ரூபாய் நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்யப்படும்.

தென்னை அதிகம் சாகுபடி செய்யும் மாவட்டமான கன்னியாகுமரியில் தென்னை மதிப்புக் கூட்டும் மையம் ஒன்று 16 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இம்மையத்தில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள கிடங்கு, பரிவர்த்தனைக் கூடம், கடைகள், உலர்களம், சூரிய உலர்த்தி, தூய்மையான தேங்காய் எண்ணெய் உற்பத்தி அலகு, தேங்காய் மதிப்பு கூட்டும் இயந்திரங்கள் போன்ற வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

விவசாயிகளிடையே, தரமான சான்று பெற்ற விதைகள் கிடைப்பதை உறுதி செய்ய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்குக் கிடங்கு வசதியுடன் கூடிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஒரு குழுவிற்கு 60 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டு, இதுவரை கிடங்கு வசதியுடன் கூடிய 30 விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக,

நடப்பாண்டில், 12 கோடி ரூபாய் செலவில், 20 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களில் விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைப்பதை உறுதி செய்ய "விலை ஆதரவுத் திட்டம்" சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். நடப்பாண்டில் 3,000 மெட்ரிக் டன் பச்சைப் பயறு, 9,000 மெட்ரிக் டன் உளுந்து மட்டுமல்லாது, 50,000 மெட்ரிக் டன் கொப்பரையையும் அரசு நேரடியாக கொள்முதல் செய்து வருகிறது. இதற்காக 90 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், 100 உழவர் சந்தைகளிலும் கூடுதலாக கடைகள், மின்னணு எடைமேடை, கணினி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் 268 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தித் தரப்படும்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் கடன் வசதி பெற்று தொழில் துவங்க, மூலதன உதவி, கடன் உத்தரவாதத் திட்டம், வட்டி உதவித் திட்டம் போன்ற திட்டங்கள் நபார்டு வங்கியின் "நாப்கிசான்" (NABKISAN) நிதி நிறுவன உதவியுடன் செயல்படுத்த நடப்பாண்டில், 266 கோடி ரூபாய் வரை கடன் உதவி அளிக்கப்படும்.

மதுரை, சேலம், ஈரோடு, தூத்துக்குடி, காஞ்சிபுரம் மாவட்டங்களில், பண்ணை அளவில் விளைபொருட்களைப் பாதுகாக்க சூரிய சக்தியால் இயங்கும் சிறிய அளவிலான குளிர்பதன அலகுகளை நிறுவிட தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், 100 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சி, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில், பழங்கள், காய்கறிகள் மற்றும் விரைவில் அழுகும் ஏனைய பொருட்களுக்கான "விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்" 482 கோடி ரூபாய் நிதியில்,

509 சேகரிப்பு மையங்கள், 62 முதல் நிலை பதப்படுத்தும் அலகுகள் ஆகியவற்றை அமைக்க தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை விரைவில் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும். மேற்கண்ட 10 மாவட்டங்கள் தவிர சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்டங்களில், இத்திட்டம் 100 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

பாசன நீரினை வீணாக்காமல் வயலுக்கு அருகில் கொண்டு செல்வதற்கு பாசனநீர்க் குழாய்களை நிறுவுதல், தரைநிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல் போன்ற துணை நீர் மேலாண்மைப் பணிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. அதேபோன்று, நடப்பாண்டிலும், இப்பணிகளுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு 116 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவிடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

# இந்து சமய அறநிலையத் துறை

## 16.07.2019

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் இல்லாத, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,000 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, நடப்பாண்டு திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் நிதியுதவி திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிதி வசதி இல்லாத 1,000 கிராமப்புற திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, நடப்பாண்டு திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் நிதியுதவி திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும் என்று கூறி அமைகிறேன்.

* * *

# மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

## 17.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, புதுப்புது சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்தி மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்கி வருகிறது. மக்களுக்கு மேலும் தரமான மருத்துவ சேவைகள் கிடைத்திடும் வகையில், நடப்பாண்டில் பின்வரும் புதிய திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்:

காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனையில் புற்று நோய்க்கான மேண்மைமிகு மையம் ஒன்று (Centre of Excellence) 120 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

நோய்த் தடுப்பு, நோய்க் குறைத்தல், வலி நிவாரணம், புனர்வாழ்வு, சிகிச்சைத் தரம் உயர்த்துதல் போன்ற 12 ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள் வழங்குவதற்காக, மாநிலத்தில் உள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 105 கோடி ரூபாய் செலவில் நலவாழ்வு மையங்களாக மாற்றி அமைக்கப்படும்.

“அனைவருக்கும் நலவாழ்வு” திட்டத்தின் கீழ், 296 துணை சுகாதார மையங்களுக்கு 79 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நரம்பியல் பிரிவு, இருதய நோய் சிகிச்சை பிரிவு, புற்றுநோய் சிகிச்சை பிரிவு, கண் சிகிச்சை பிரிவு, குழந்தைகள் நல அறுவை சிகிச்சை பிரிவு, பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை பிரிவு, தீக்காய சிகிச்சை பிரிவு, சிறுநீரக சிகிச்சை பிரிவு, சீமாங்க் பிரிவு போன்ற உயர் சிறப்பு சிகிச்சை அளிக்க, 67 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் உயர் சிறப்பு மருத்துவமனையாக (Super Speciality Hospital) மேம்படுத்தப்படும்.

விபத்துகளில் தலைக்காயம் அடையும் நபர்களைக் காக்க விபத்து நடந்த முதல் ஒரு மணி நேரம் பொன்னான நேரமாக கருதப்படுகிறது. இந்தக் காலத்தில் உரிய முதலுதவியும், சிகிச்சையும் அளிக்கப்பட்டால், இறப்புகளை தவிர்க்கலாம். அந்த வகையில், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டத்தின் கீழ் 32 மாவட்டங்களில் தலா ஒரு மருத்துவமனை வீதம் பல்வகை காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக உலகத் தரம் வாய்ந்த ஒரு தீவிர சிகிச்சை மையம் (Multi-Disciplinary Critical Care Unit) 49 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

விபத்திற்குப் பின் சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் நாள்பட்ட நோயாளிகளுக்கு இயன்முறை சிகிச்சை அளிப்பதற்காக சென்னை கே.கே.நகர் அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக நவீன வசதிகள் மற்றும் நவீன உபகரணங்களுடன் 40 கோடி ரூபாய் செலவில் மறுவாழ்வு மையம் (Rehabilitation Centre) ஏற்படுத்தப்படும்.

புற்றுநோய் சிகிச்சைக்காக சேலம் மாவட்டம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, நடப்பாண்டில் ஒரு லீனியர் ஆக்ஸிலேட்டர் கருவி 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தற்கொலைகளால் ஏற்படும் இறப்புகளைத் தடுப்பதற்காக 22 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டணமில்லா '104' தொலைபேசி சேவை வழியாக ஆலோசனை வழங்கும் மையம், 6 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சேலம் சுகாதார மாவட்டம், மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் பெரிய மாவட்டமாக உள்ளது. எனவே, சேலம் சுகாதார மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய சுகாதார மாவட்டம் ஏற்படுத்தப்படும்.

காச நோய், நீரிழிவு நோய் மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துகள் எளிதில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, 23 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள 5 நகர்ப்புற சுகாதார மையங்களில் புதிய முயற்சியாக, 28 வகையான மருந்துகள் வழங்கும் 32 தானியங்கி இயந்திரங்கள் (Automatic Drug Vending Machine) 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

அரசு மருத்துவமனைகளின் சேவையை மேலும் மேம்படுத்தும் விதத்தில், ஒரு புதிய முயற்சியாக, ஆர்வமுள்ள தொழில் நிறுவனங்களின் சமூகப் பங்களிப்புடன் "எனது மருத்துவமனை எனது பெருமை" (My Hospital My Pride) என்ற பெயரில் அரசு மருத்துவமனைகள் புதுப்பொலிவுடன் செயல்படும் வகையில் நடவடிக்கை தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# போக்குவரத்துத் துறை

## 17.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கடந்த ஆண்டுகளில் பல புதிய பேருந்துகளை பொதுமக்களின் சேவைக்கு அறிமுகப்படுத்தியது. இந்த ஆண்டும், புதியதாக 2,000 பேருந்துகள், 600 கோடி ரூபாய் மதிப்பில் அறிமுகப்படுத்தப்படும் என்பதனை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதியாண்டில், அரசு நிதி நிறுவனங்களின் நிதி ஆதாரம் மூலம் 10 அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தி, நவீனப்படுத்தப்படும் என்பதனை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

# பால்வளத் துறை

## 17.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில், 19 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும், மாநில அளவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமும் இயங்கி வருகின்றன. இன்றளவும், சில மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், இரண்டு முதல் நான்கு மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்களுக்கு ஒன்றியங்கள் மூலமாக உரிய நேரத்தில் சேவை வழங்கவும், நுகர்வோர்களுக்கு அவர்களது இல்லங்களுக்கு அருகிலேயே, தரமான ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்கள், தங்கு தடையின்றி உடனுக்குடன் கிடைக்கவும் ஏதுவாக,

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும்;

தருமபுரி–கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும்;

மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும்;

திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும்;

விழுப்புரம்–கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும்;

ஒன்றியங்களைப் பிரிப்பதன் விளைவாக, ஆவின் மூலமாக கொள்முதல் செய்யப்படும் பால், நாளொன்றுக்கு 33 இலட்சம் லிட்டரிலிருந்து, 35 இலட்சம் லிட்டராகவும், ஆவின் பால் விற்பனை 22.5 இலட்சம் லிட்டரிலிருந்து, 25 இலட்சம் லிட்டராகவும் உயரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## 18.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் நகராட்சி, 8.36 சதுர கி.மீ. பரப்பளவுடன் 33 வார்டுகளை உள்ளடக்கிய மூன்றாம் நிலை நகராட்சியாக 01.10.1919 அன்று துவக்கப்பட்டது. அதன் நிலை படிப்படியாக உயர்ந்து, 1988ஆம் ஆண்டில் தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. தற்போது, 33.13 சதுர கி.மீ. பரப்பளவுடன் 42 வார்டுகளைக் கொண்டு விழுப்புரம் நகராட்சி செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் இருந்து தென் மாவட்டங்களுக்கு செல்வோருக்கு விழுப்புரம் நகராட்சியில் உள்ள பேருந்து நிலையம் மற்றும் ரெயில் நிலையம் ஒரு முக்கிய சந்திப்பாக விளங்குகிறது.

இந்த நகராட்சியில் 183.17 கிலோ மீட்டர் சாலைகள், 6,367 தெரு விளக்குகள், 33 வார்டுகளில் பாதாள சாக்கடை வசதி மற்றும் 14 ஆயிரம் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இந்த நகராட்சியின் ஆண்டு வருமானமான 28.68 கோடி ரூபாயினைக் கொண்டு, மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நூற்றாண்டு கண்டு சரித்திரம் படைத்துள்ள விழுப்புரம் நகராட்சி மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, தெரு விளக்குகள், சாலை வசதி, பாதாள சாக்கடை, பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், குளங்கள், அங்கன்வாடி மையங்கள், நகராட்சி சேவை மையங்கள் போன்றவைகளை மேம்படுத்திட, மாண்புமிகு அம்மாவின் அரசு 50 கோடி ரூபாய் வழங்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். ✲

# வேளாண்மைத் துறை

## 18.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலவும் சாதகமான பருவ நிலையின் காரணமாக 3,702 ஹெக்டர் பரப்பளவில் ரோஜா, மல்லிகை, முல்லை, கனகாம்பரம், சாமந்தி, ஜெர்பரா, கார்னேஷன் ஆகிய மலர்கள் பயிரிடப்பட்டு 39,383 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பகுதியில் சாகுபடி செய்யப்படும் மலர்கள், உள்ளூர் சந்தைகளில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களிலும், அண்டை மாநிலங்களிலும் சந்தைப்படுத்தப்படுகிறது. மேலும், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளுக்கு பெங்களூருவில் உள்ள ஏல மையம் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் சர்வதேச மலர் ஏல மையம் அமைக்க வேண்டும் என கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு ஆகிய மாவட்ட விவசாயிகள், விற்பனையாளர்கள், மலர் ஏற்றுமதியாளர்கள் ஆகியோரிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றன. அவர்களின் இந்த நியாயமான கோரிக்கையை ஏற்று, சர்வதேச மலர்கள் ஏல மையம் ஒன்று 20 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் ஒசூரில் அமைக்கப்படும். சர்வதேச அளவில் கொள்முதல் செய்ய ஏதுவாக, மின்னணு வசதியுடன் கூடிய ஏலக்கூடம், சிப்பம் கட்டும் கூடம், அலுவலகக் கட்டடம், தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம், குளிர்பதன அறை போன்ற வசதிகளுடன் இம்மையம் உருவாக்கப்படும்.

இம்மையம், மலர்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு அதிக வருமானம் ஈட்டித் தருவதுடன், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, அந்நிய செலாவணியையும் அதிகரிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

✵

# வருவாய்த் துறை

## 18.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது பெரிய மாவட்டங்களாக உள்ள திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளைப் பரிசீலித்து, நிர்வாக வசதிக்காக திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்படும். காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பிரித்து செங்கல்பட்டை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விரு மாவட்டங்களுக்கும் தலா ஒரு இந்திய ஆட்சிப் பணி அதிகாரி தனி அதிகாரியாக நியமிக்கப்படுவர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகின்றது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டமும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வட்டாட்சியர் தலைமையில் அம்மா திட்ட முகாம்களும் நடத்தப்படுகிறது. விவசாயிகள், ஒய்வூதியதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான குறைகளை தீர்வு காண்பதற்கான சிறப்பு குறை தீர்வு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி குறைதீர் நிகழ்வுகளில் பட்டா மாற்றம், சமூகப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்

திட்டத்தின் கீழ் வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம், இலவச வீட்டு மனைப்பட்டா, சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ் போன்ற சான்றிதழ்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

அரசு எடுத்துவரும் இத்தகைய முயற்சிகளுக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் ஒரு சிறப்பு குறைதீர்க்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும். இத்திட்டத்தின் மூலம் நகரங்களில் வார்டுகளிலும், கிராமங்கள்தோறும் நேரடியாகச் சென்று மனுக்களை பெற்று, தீர்வு காண, முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்வு திட்டத்தை ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம், அனைத்து நகர்புற வார்டுகளிலும், கிராமங்களிலும் உரிய விளம்பரத்திற்கு பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவுப்படி ஒரு குறிப்பிட்ட நாளில் வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை / நகர்புற வளர்ச்சித் துறை மற்றும் பிற துறைகளைச் சார்ந்த ஒரு அலுவலர் குழு, ஆகஸ்ட் மாத இறுதிக்குள் சென்று மனுக்களைப் பெறுவார்கள். இம்மனுக்கள் அனைத்தும் கணினியில் பதியப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைக்கு ஒரு வார காலத்திற்குள் அனுப்பப்படும். அம்மனுக்கள் மீது ஒரு மாத காலத்திற்குள் தீர்வு எட்டப்படும்.

மேற்குறிப்பிட்ட மனுக்களின் மீதான தீர்விற்குப் பின், செப்டம்பர் மாதத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் வட்ட அளவிலான விழாக்கள் நடத்தப்படும். பல்வேறு நலத் திட்டப் பயன்களை இவ்விழாவில் வழங்குவதோடு, மக்களின் அடிப்படைத் தேவைகளான சாலைகள், தெரு விளக்குகள், மருத்துவம், சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படை தேவைகளுக்கும் இவ்விழாவின் போது தீர்வு காணப்படும். மக்களின் குறைகளுக்கு தீர்வு காணும் மாநில அரசின் முக்கியமான சிறப்புத் திட்டமாக இத்திட்டம் திகழும்.

இந்த சிறப்புத் திட்டத்தை செம்மையாக நடைமுறைபடுத்துவதற்கு ஒரு வட்டத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் 76 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஆரணி மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள திருமங்கலம் கோட்டங்களுக்கு 6.26 கோடி ரூபாய் செலவில் புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலக மற்றும் குடியிருப்பு கட்டடங்களும், நாமக்கல் மாவட்டத்தில் மோகனூர், திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன்விளை, மதுரை மாவட்டத்தில் கள்ளிக்குடி, தூத்துக்குடி மாவட்டத்தில் ஏரல், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆர்.எஸ். மங்கலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைமலை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அஞ்செட்டி, கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டார் மற்றும் கிள்ளியூர், திண்டுக்கல் மாவட்டத்தில் குஜிலியம்பாறை, திருவள்ளூர் மாவட்டத்தில் ஆர்.கே. பேட்டை, விருதுநகர் மாவட்டத்தில் வத்ராயிருப்பு மற்றும் கரூர் மாவட்டத்தில் புகளூர் ஆகிய 13 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அலுவலக மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் 60.18 கோடி ரூபாய் செலவிலும், ஆக மொத்தம் 66.44 கோடி ரூபாய் செலவில் மேற்கண்ட கட்டடங்கள் கட்டப்படும்.

கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், சூரிய ஒளியில் செயல்படும் மீன் உலர் கூடங்கள் அமைக்கவும், மீன்வள சூழலை மீள ஏற்படுத்த செயற்கை உறைவிடங்கள் அமைக்கவும், கடல் / உவர் நீர் மீன் குஞ்சு வங்கி அமைக்கவும், ஒருங்கிணைந்த கடல் மீன் வளர்ப்பு அலகுகள் அமைக்கவும், மீனவ மக்களின் மாற்று வாழ்வாதாரத்திற்காக மெல்லுடலிகள் மற்றும் கடற்பாசி வளர்ப்பு அலகுகள் ஏற்படுத்தவும், மீனவ இளைஞர்களுக்கு நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தவும், 31.15 கோடி ரூபாய் செலவில் வழிவகை செய்யப்படும்.

மேம்படுத்தப்பட்ட 29 நகரங்களில், வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைகளைப் போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, மறு நில அளவை பணிகள் 30.29 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, 3 தொகுதிகளாக 3 ஆண்டுகளுக்குள் முடிக்கப்படும்.

✵ ✵ ✵

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## 18.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து பழங்குடியின மக்கள் சொந்த வீட்டில் குடியிருப்பதை உறுதி செய்ய வீடுகள் கட்டித் தருதல், அவர்களின் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருதல், இணைப்புச் சாலைகள் மற்றும் பாதைகள் இல்லாத இடங்களில் இணைப்புச் சாலை மற்றும் பாதை அமைத்துத் தருதல், தெரு விளக்கு மற்றும் சூரிய மின் விளக்கு வசதி ஏற்படுத்தித் தருதல் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் முதற்கட்டமாக 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தித் தரப்படும்.

பழங்குடியின மாணவ, மாணவியர்களின் இடைநிற்றலை தவிர்க்கவும், பள்ளிக்கு வெகுதூரம் செல்வதை தவிர்க்கவும், அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள பள்ளிகளை தரம் உயர்த்துதல் அவசியமாகிறது. நடப்புக் கல்வியாண்டில் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள எழுத்தூர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள “பாச்சேரி”, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள “அரசவெளி” மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள “பொக்காப்புரம்” ஆகிய 3 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள “இன்னாடு” அரசு பழங்குடியினர்

உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் 6.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலை உயர்த்தப்படும்.

ஆதிதிராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை அனைத்து வசதிகளுடன் மகிழ்ச்சியாகவும், மிகச் சிறப்பாகவும் கொண்டாடும் வகையில், மதுரை மாவட்டம்–கே.புளியங்குளம், கரூர் மாவட்டம்–வாங்கல் குச்சிபாளையம், தருமபுரி மாவட்டம் – காரிமங்கலம், நாமக்கல் மாவட்டம் – 82 கவுண்டம்பாளையம், திருநெல்வேலி மாவட்டம் – ரெங்கசமுத்திரம் ஆகிய 5 கிராமங்களில், அனைத்து வசதிகளுடன் கூடிய 5 சமுதாயக் கூடங்கள், தலா 1 கோடி ரூபாய் வீதம், 5 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# பொதுப்பணித் துறை

## 20.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*'வான்நின்று உலகம் வழங்கி வருதலால்*
*தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று'*

அதாவது, மழை பெய்தால்தான் உலகில் வளம் கொழிக்கும். எனவே, அதை 'அமுதம்' என்று கருத வேண்டும் என்றார் வள்ளுவர் பெருந்தகை.

சோழர்கள் காலத்திலிருந்தே சிறப்பாக ஒருங்கிணைக்கப் பட்ட ஏரிகளைக் கட்டுவதற்கும், திறமையான நீர் நிருவாகத்திற்கும் தமிழ்நாடு பெயர் பெற்றதாக விளங்கி வருகிறது. நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், மழைநீர் சேகரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக நடைமுறைப்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் இந்த அரசு, மழை நீர் சேகரிப்பதை முன்னெடுத்துச் செல்ல பல முயற்சிகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில், பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 89 அணைகளில் 238.58 டி.எம்.சி. அடி நீரும், 14,098 பெரிய பாசன ஏரிகளில் 521 டி.எம்.சி. அடி நீரும், ஆக மொத்தம், 759.58 டி.எம்.சி. அடி நீரை தேக்கி வைக்கும் திறன் பெற்றுள்ளது. இது தவிர, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கோயில்களின் கட்டுப்பாட்டில் உள்ள 48,758 குட்டைகள், ஊருணிகள், நீர்நிலைகள் மற்றும் குளங்கள், நீரினை தேக்கி வைக்கப் பயன்படுகின்றன.

மாநிலத்தில் தற்போது நிலவி வரும் கடுமையான நீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்ளவும், வரும் காலங்களில் இதுபோன்ற பற்றாக்குறை ஏற்படாமல் நீர்ப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், தீவிர நீர் வள ஆதாரப் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் மக்கள் இயக்கமாக தொடங்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்த மக்கள் இயக்கத்தில், கீழ்க்காணும் வழிமுறைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கண்டறிந்து செயல்படுத்த உள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. மழை நீர் சேகரித்தல், நீர் நிலைகளைப் பாதுகாத்து அதன் கொள்திறனை அதிகரித்தல்,

ஆ. நிலத்தடி நீரை செறிவூட்டி, குடிநீர் வழங்குதலை நிலைப்படுத்துதல்,

இ. வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரிப்பதோடு, மானாவாரி வேளாண்மைக்காக மழை நீர் சேகரிக்கும் திட்டத்தையும் செயல்படுத்துதல்,

ஈ. பயன்படுத்தப்பட்ட நீரினை மறுசுழற்சி செய்து உபயோகப்படுத்துவதன் மூலம் நன்னீருக்கான தேவையைக் குறைத்தல். இதன் மூலம் மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி கோட்பாட்டினை தீவிரமாகக் கடைபிடித்தல்,

உ. ஆறுகள், முக்கிய கடற்கரை பகுதிகள், முகத்துவார நீர்நிலைகள், கழிமுகங்கள், சிற்றோடைகள் மற்றும் சதுப்பு நிலங்களின் சூழலியலை மீட்டெடுத்தல்.

இந்த தமிழ்நாடு நீர் வள பாதுகாப்பு மற்றும் மேலாண்மை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல, எனது தலைமையின் கீழ், இவ்வரசால் அமைக்கப்பட்ட வல்லுநர்கள் மற்றும் ஓய்வுபெற்ற பொறியாளர்கள் கொண்ட குழுவின் ஆலோசனையுடன் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களை பாதுகாத்தல்

மற்றும் நதிகள் மறுசீரமைப்புக் கழகத்தின் மூலம் உரிய திட்டங்கள் தீட்டி செயல்படுத்தப்படும்.

இச்செயல் திட்டம் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையேற்று, அவர்கள் கீழ் உள்ள பலதரப்பட்ட துறைகளின் உதவியுடன் செயல்படுத்தப்படும். கீழ்மட்டத்தில் நகர்ப் பகுதிகளில் வார்டு வாரியாகவும், கிராமத்திலும், ஒன்றியத்திலும் நீர்ப் பாதுகாப்பு வாரியம் அமைக்கப்பட்டு, அவற்றில் பெண்கள் பெருவாரியாக கலந்துகொண்டு செயல்படுவதை இத்திட்டம் உறுதி செய்யும்.

ஒரு சிறப்பு முயற்சியாக, இந்த நீர்வள பாதுகாப்பு இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற ஒரு தீவிர பிரச்சார இயக்கம் 2019, ஆகஸ்ட் முதல் வாரத்தில் தொடங்கி ஒருமாத காலத்திற்கு செயல்படுத்தப்படும். இந்த தீவிர இயக்கத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பெருமளவில் பங்கேற்பர். மாவட்ட ஆட்சியர்கள், இத்தீவிர இயக்கப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவர். இந்த இயக்கத்தில் தனியார் நிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதி, பொதுமக்களின் பங்களிப்பு, அரசுசாரா நிறுவனங்கள், தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் ஆகியோரின் பங்களிப்பு திரட்டப்பட்டு, மக்கள் இயக்கமாக இந்த இயக்கம் செயல்படுத்தப்படும். இந்த தீவிர இயக்கத்தின் மூலம் பருவமழை காலத்திற்கு முன்பு நீர்நிலைகளை மேம்படுத்தி, அதிக அளவு மழை நீரை சேமிக்க வழிவகை செய்யப்படும்.

குடிமராமத்துத் திட்டத்தின் கீழ், 2019–2020இல் 499.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள 1,829 பணிகளும், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டின் ஒரு பகுதியாக, காவேரி டெல்டா பகுதியில் உள்ள கால்வாய்களை சீரமைக்க 61.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிகளும், இந்த தீவிர இயக்கத்தில் முக்கிய பணிகளாக செயல்படுத்தப்படும்.

இத்தீவிர பிரச்சார இயக்கத்தின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கிராமம் தோறும் சிறுபாசன

ஏரிகள், குட்டைகள் மற்றும் ஊருணிகள் போன்ற நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதி 750 கோடி ரூபாயுடன், கூடுதலாக சிறப்பு நிதியாக 500 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு வழங்கி, மொத்தம் 1,250 கோடி ரூபாய் நிதி இப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும்.

மேலும், சென்னை மாநகரத்திலுள்ள 210 நீர்நிலைகளில், 114 நீர்நிலைகளில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் 08.07.2019 அன்று இம்மாமன்றத்தில் அறிவித்தார்கள். இத்தீவிர இயக்கத்தை செயல்படுத்தும் வகையில், இப்பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

15.07.2019 அன்று இப்பேரவையில் நான் நீர் மேலாண்மை தொடர்பாக பல அறிவிப்புகளை அளித்தேன். இத்தீவிர இயக்கத்தை செயல்படுத்தும் வகையில், இப்பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் மேலாண்மை இயக்கத்தின் மூலம் நீண்ட கால செயல்பாடுகளாக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்:

அ) மழைக்காலங்களில் உபரி நீர் மற்றும் வெள்ள நீரினை சேகரிக்கும் திட்டங்களை தொடர்ந்து கண்டறிந்து செயல்படுத்துதல். கோதாவரி – காவேரி ஆறுகளை இணைக்க மத்திய அரசுடன் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளுதல்.

ஆ) நிலத்தடி நீர் செறிவூட்டும் திறனை மேம்படுத்துவதற்காக, குறிப்பாக அதிநுகர்வு (over exploited) மற்றும் அபாயகரமான (critical) குறுவட்டங்களில், பாசன முறைசார் மற்றும் பாசன முறைசாரா ஏரிகள், தடுப்பணைகள், பாசன கட்டுமானங்கள் ஏற்படுத்தும் திட்டங்கள் தீட்டி செயல்படுத்துதல்.

இ) வேளாண்மை மற்றும் அதனை சார்ந்த துறைகளின் நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் மற்றும் மானாவாரி

வேளாண்மைக்காக நீர் சேகரிப்புத் திட்டம் போன்றவை ஊக்கப்படுத்தப்படும்.

**கழிவு நீரை மறு சுழற்சி செய்து மறுபயன்பாடு செய்வதன் மூலம், நன்னீருக்கான தேவையை குறைத்தல்.**

சுத்திகரிக்கப்பட்ட நீரை மறு பயன்பாடு செய்தல் தொடர்பாக ஒரு கொள்கையை அரசு விரைவில் வெளியிட இருக்கிறது. தற்போது சென்னை மாநகரில், பெறப்படும் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு, விடுவிக்கப்படும் நீரின் அளவு நாளொன்றுக்கு 525 மில்லியன் லிட்டர் ஆகும். இதில் நாளொன்றுக்கு 34 மில்லியன் லிட்டர் தொழிற்சாலை மற்றும் இதர பயன்பாடுகளுக்காக மறு உபயோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவுடன் தொழிற்சாலை மற்றும் பிற பயன்பாடுகளுக்கு நீர் வழங்க இரண்டு, மூன்றாம் நிலை எதிர் சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகளை முன்னெடுத்துச் செல்ல, 1,700 கோடி ரூபாய் அளவிலான திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 360 மில்லியன் லிட்டர் கழிவு நீரை நவீன தொழில் நுட்ப வசதியை (TTUFT) பயன்படுத்தி சுத்திகரித்து அதன்மூலம் நாளொன்றுக்கு பெறப்படும் 260 மில்லியன் லிட்டர் நீரை தொழிற்சாலை பயன்பாடு மற்றும் நிலத்தடி நீரை செறிவூட்ட ஏரிகளில் நிரப்புதல் உட்பட பிற பயன்பாட்டிற்கான திட்டத்தை 11.07.2019 அன்று இப்பேரவையில் நான் ஏற்கெனவே அறிவித்தேன். இப்பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆறுகள், முக்கிய கடற்கரைப் பகுதிகள், முகத்துவார நீர்நிலைகள், கழிமுகங்கள், சிற்றோடைகள் மற்றும் சதுப்பு நிலங்களின் சூழலியலை மீட்டெடுத்தல்**

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள பல நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மீட்டெடுக்கவும், பேணிக் காக்கவும் பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தினார்கள். குறிப்பாக,

ஊட்டி ஏரி, சென்னையிலுள்ள சேத்துப்பட்டு ஏரி உள்ளிட்ட பல ஏரிகள், பல கோயில் குளங்கள், சதுப்பு நிலங்கள் மற்றும் பல்வேறு பறவைகள் சரணாலயத்திலுள்ள நீர்நிலைகள் ஆகியவற்றை **176.14** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்த உத்தரவிட்டார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசும் சுற்றுச்சூழல் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பல பணிகளை செய்து வருகிறது. இது போன்ற பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இந்நிலையில், ஒரு முக்கிய திட்டமாக, காவேரி ஆறு மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க, “நடந்தாய் வாழி காவேரி” – என்ற திட்டத்தினை தொடங்க மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதேபோன்று, பவானி, வைகை, அமராவதி மற்றும் தாமிரபரணி ஆறுகள் மாசுபடுவதைத் தடுக்க மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

இத்தகைய குறுகிய கால மற்றும் நீண்ட கால முயற்சிகளை தமிழ்நாடு நீர்வள ஆதார மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் விரிவாகக் கையாண்டு செயல்படுத்துவதை மாண்புமிகு அம்மாவின் அரசு கண்காணிக்கும். இதனால், தமிழ்நாட்டின் நீர்வளம் பாதுகாக்கப்பட்டு நீர் நிலைகள் மேம்படுத்தப்பட்டு, வருங்காலத்தில் தமிழ்நாட்டில் நீர்ப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

இந்த நீர்வளப் பாதுகாப்பு இயக்கத்தில் மிகப்பெரிய அளவில் பொதுமக்களும், இளைஞர்களும், தனியார் நிறுவனங்களும், அரசு சாரா நிறுவனங்களும் மற்றும் தொழில் நிறுவனங்களும் முனைப்புடன் பங்கேற்று, மாநிலத்தின் ஒட்டுமொத்த நலனை பாதுகாக்க தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என இத்தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், இந்த தீவிர இயக்க செயல்பாட்டுக்கு உங்கள் முழு ஒத்துழைப்பை நல்கிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# கூட்டுறவுத் துறை

## 20.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கூட்டுறவு நியாய விலைக் கடைப் பணியாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடும்பப் பாதுகாப்பு நிதியினை உயர்த்திட வேண்டும் என்ற கோரிக்கையினை கனிவோடு பரிசீலனை செய்த மாண்புமிகு அம்மாவின் அரசு, பணியில் இருக்கும்போது உயிரிழக்க நேரிட்டால், அவர்களது குடும்பத்திற்கு, தற்போது வழங்கப்படும் குடும்ப நல நிதி 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கும்.

கூட்டுறவு பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடை பணியாளர்கள் பணியில் இருக்கும்போது உயிரிழக்க நேரிட்டால், அவர்களது குடும்பத்தின் உடனடி தேவைகளை பூர்த்தி செய்வதற்கு, குடும்ப நல நிதியிலிருந்து தற்போது வழங்கப்பட்டு வரும் 5,000 ரூபாய் முன்பணம், 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

கூட்டுறவு பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிப் பணியாளர்களுக்கு தற்போது மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாயாக வழங்கப்பட்டு வரும் மாற்றுத்திறனாளிப்படி, 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

கூட்டுறவு நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு ATM மூலம் ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடன் பரிசீலித்து, பொது விநியோகத் திட்ட பணியாளர்களுக்கு, அவர்களது மாத சம்பளம், அவர்களது வங்கிக் கணக்கில் மின்னணு பணப் பரிவர்த்தனை முறை (ECS) மூலம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

# கால்நடை பராமரிப்புத் துறை

## 20.07.2019

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ,

தமிழ்நாட்டில் 3,000 கால்நடை அலகுகளுக்கு மேல் இருக்கும் 75 கிராமங்களில் புதிய கால்நடை கிளை நிலையங்கள், தலா 4 இலட்சம் ரூபாய் வீதம், 3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

5,000 கால்நடை அலகுகளுக்கு மேல் இருக்கும் 25 கிராம பஞ்சாயத்துகளில் புதிய கால்நடை மருந்தகங்கள், தலா 14 இலட்சம் ரூபாய் வீதம் 3.50 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

ஐந்து கால்நடை மருந்தகங்கள் தலா 50 இலட்சம் ரூபாய் வீதம், 2.50 கோடி ரூபாய் செலவில் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும்.

இரண்டு கால்நடை மருத்துவமனைகள் மற்றும் பெரு மருத்துவமனைகள் தலா 1.20 கோடி ரூபாய் வீதம், 2.40 கோடி ரூபாய் செலவில், 24 மணி நேரமும் இயங்கும் பன்முக மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

# செய்தி–மக்கள் தொடர்புத் துறை

## 20.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்த் திரை உலகில் மாபெரும் சகாப்தமாக விளங்கிய பழம்பெரும் கதாநாயகனும், சிறந்த பாடகரும், ரசிகப் பெருமக்களால் எம்.கே.டி. எனவும் அன்புடன் அழைக்கப்படுபவர் திரு. கிருஷ்ணசாமி தியாகராஜ பாகவதர் அவர்கள்.

அன்பும், அடக்கமும், எளிமையும் மிகுந்த திரு. தியாகராஜ பாகவதர் அவர்களின் கலையுலக வாழ்வு 1934ஆம் ஆண்டு பவளக்கொடி என்ற திரைப்படத்தின் மூலம் அரங்கேறியது. திரு.தியாகராஜ பாகவதர் அவர்கள் பல்வேறு தமிழ்த் திரைப்படங்களில் நடித்த பெருமைக்குரியவர். இவர் நடித்த ஹரிதாஸ் என்னும் திரைப்படம் மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இவர் சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்த் திரைப்பட உலகில் கோலோச்சிக் கொண்டிருந்த பெருமைக்குரியவர்.

திரு. தியாகராஜ பாகவதர் அவர்களின் இசைவளம் செறிந்த குரல், அனைத்து தரப்பு மக்களாலும் ரசிக்கப்பட்டது. இவருடைய கருநாடக சங்கீதப் பாடல்கள் அன்றும், இன்றும் மக்கள் மனதில் ஒலித்துக்கொண்டே இருக்கும் என்றால் அது மிகையாகாது. இவர் பல வெற்றிப் படங்களை வழங்கி தனக்கென ஒரு தனி முத்திரை பதித்தவர்.

திரைப்படத் துறையிலும், பாரம்பரிய இசைத் துறையிலும் திரு. தியாகராஜ பாகவதர் அவர்களின் பன்முக பங்களிப்பினையும், சாதனையையும் அங்கீகரிக்கும் வகையிலும், அவரது நினைவினைப் போற்றும் வகையிலும், தமிழ்நாடு அரசு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் திரு. எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களுக்கு திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵

# தமிழ் வளர்ச்சித் துறை

## 20.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வரலாற்றில் இல்லாத அளவிற்கு தமிழறிஞர்களுக்கு புதிய விருதுகளையும், நிதியுதவிகளையும் வழங்கி வந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசும், இதுவரை 149 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கி, அவர்தம் மரபுரிமையாளர்களுக்கு பரிவுத் தொகை வழங்கியுள்ளது. அவ்வரிசையில் இவ்வாண்டு,

உளுந்தூர் பேட்டை திரு. சண்முகம்
கவிஞர் நா. காமராசு
முனைவர் இரா. இளவரசு
தமிழறிஞர் அடிகளாசிரியர்
புலவர் இறைக்குருவனார்
பண்டித ம. கோபால கிருட்டிணன்
பாபநாசம் குறள்பித்தன்

ஆகியோரின் படைப்புகள் நாட்டுக்கு அர்ப்பணிக்கும் வகையில் நாட்டுடைமையாக்கப்படும். இதற்கென 35 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

தனித்துவ தமிழ்நாடு உருவாக்கப்பட்ட 01.11.1956ஆம் நாளினை பெருமைப்படுத்திடும் வகையில், ஆண்டுதோறும் நவம்பர் 1ஆம் நாள் ‘தமிழ்நாடு நாள்’ என்ற பெயரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

வாரணாசி இந்து பல்கலைக்கழகம், கவுகாத்தி பல்கலைக் கழகம், பஞ்சாப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இயங்கிவரும் தென்னிந்திய மொழிகள் துறையில் தலா ஒரு தமிழ் உதவிப் பேராசிரியர் பணியிடம், 36 இலட்சம் ரூபாய் தொடர் செலவினத்தில் தோற்றுவிக்கப்படும்.

உலக அற இலக்கியமான திருக்குறளின் பெருமையை பரவச் செய்யும் வகையில், ஆண்டுதோறும் ஒரு இந்திய மொழி மற்றும் ஒரு உலகமொழி ஆகியவற்றில் திருக்குறள் மொழியாக்கம் செய்து வெளியிடப்படும். இதற்கென தொடர் செலவினமாக 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். இந்த ஆண்டு இந்திய மொழிகளான அசாமி மற்றும் சிந்தி மொழிகளிலும், உலக மொழியான ஈப்ரு மொழியிலும் திருக்குறள் மொழிபெயர்ப்பு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட ஐரோப்பிய தமிழறிஞர் டாக்டர். ராபர்ட் கால்டுவெல் அவர்களின் சீரிய தமிழ்ப் பணியினைப் போற்றி சிறப்பிக்கும் வகையில், அன்னாரின் நெறியில் ஒப்பிலக்கண ஆய்வில் தமிழறிஞர்களையும், மாணவர்களையும் நெறிப்படுத்தவும், திராவிட மொழிகளை ஒப்பிட்டு தொடர்ச்சியாகப் பல்வேறு வகையான ஆய்வுகள் மேற்கொள்ளவும், “தமிழறிஞர் ராபர்ட் கால்டுவெல்” பெயரில் தமிழ் ஆய்விருக்கை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென வைப்புத் தொகையாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

“ஒருங்கிணைந்த உயர்கல்வி வளர்ச்சித் திட்ட”த்தின் கீழ், முதன்முறையாக தமிழ் பல்கலைக்கழகத்தில் 20 கோடி ரூபாய் நிதியில் புதிய கட்டுமான வசதிகள், மேம்பாடு மற்றும் வளர்ச்சிப் பணிகள், புதிய கருவிகள் வாங்குதல் மற்றும் ஏனைய வசதிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## 20.07.2019

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின ஏழை மாணவ, மாணவியரின் நலனுக்காக இத்துறையின் கீழ் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கட்டணமில்லா இலவச உணவு மற்றும் உறைவிட வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் விடுதிகளில் மாணவ, மாணவியரின் வருகையை உறுதி செய்ய, கைரேகை அங்கீகார முறையின் அடிப்படையில், பயோ–மெட்ரிக் கண்காணிப்பு தொழில்நுட்பக் கருவி வழங்குவதன் மூலம் அனைத்து விடுதிகளையும், 3 இயக்ககங்கள், மாவட்ட தலைமை இடங்கள் மற்றும் மதுரையிலுள்ள கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அலுவலகங்கள் ஆகியவை எளிதாக கண்காணிக்கலாம் என்ற அடிப்படையில் 2 கோடியே 97 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் பயோமெட்ரிக் கருவிகள் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில், அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள 2014–2015ஆம் ஆண்டு முதல் ஒரு விடுதிக்கு தலா 15,000 ரூபாய் முன்பணமாக வழங்கப்பட்டு வந்தது. 2018–2019ஆம் ஆண்டில், 5 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட

கட்டடங்களில் செயல்படும் 99 கல்லூரி விடுதிகளுக்கு இத்தொகை 20,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

மின் உபகரணங்கள், நீரேற்றும் மின் மோட்டார், நீர்தேக்கத் தொட்டி, பாத்திரங்கள், எரிவாயு இணைப்பு, கழிவு நீர் குழாய் மற்றும் தொட்டி ஆகியவற்றில் ஏற்படும் அடைப்புகள், கதவு மற்றும் ஜன்னல்கள், விளையாட்டு உபகரணங்கள், கட்டில்களில் ஏற்படும் சிறிய அளவிலான பழுது பார்க்கும் பணிகள், அவசர சூழ்நிலைகளில் மாணவர்களுக்கான மருத்துவ செலவினங்களை மேற்கொள்ளுதல் போன்ற செலவுகளுக்கு தற்போது வழங்கப்படுகின்ற முன்பணத் தொகை 15,000 ரூபாய் மற்றும் 20,000 ரூபாயினை 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதனால் ஏற்படும் 4 கோடியே 51 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயினை அரசு ஒதுக்கீடு செய்து வழங்கும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் மூலம் பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு போன்ற கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட அனைத்து திட்டங்களிலும் தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் பயிலும் தமிழ்நாடு மாணவ, மாணவியர்களுக்கு மட்டுமே கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

நாடு முழுவதும் உள்ள மத்திய அரசின் கல்வி நிறுவனங்களில் பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவியரிடமிருந்து கல்வி உதவித் தொகை கோரி விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. எனவே, பட்டியலிடப்பட்ட மத்தியக் கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும், மாணவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் 2 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்

மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையாக மாணவர் ஒருவருக்கு 2 இலட்சம் ரூபாய் வரை முதற்கட்டமாக 100 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு 2 கோடி ரூபாயினை மாண்புமிகு அம்மாவின் அரசு ஒதுக்கீடு செய்து வழங்கும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் உள்ள விடுதிகளில், 1,277 விடுதிகள் அரசுக் கட்டடங்களிலும், மீதமுள்ள 71 விடுதிகள் வாடகை கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 25 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பொதுப்பணித் துறையால் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 46 விடுதிகளில், 14 விடுதிகளுக்கு மாநில அரசின் நிதியிலிருந்து 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் மாண்புமிகு அம்மாவின் அரசால் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019–2020ஆம் ஆண்டில் 2 பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள், 2 மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் விடுதிகள் மற்றும் 2 சிறுபான்மையினர் விடுதிகள் என மொத்தம் 6 கல்லூரி விடுதிகள், 2 கோடியே 56 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

“அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம்” என்ற முப்பெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்தியவர் தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த தத்துவத்தை, “அமைதி, வளம், வளர்ச்சி” என்று மேலும் மெருகேற்றியவர் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள். நமது மாபெரும் தலைவர்களின் தாரக மந்திரத்தை அடித்தளமாகக் கொண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு, இரும்புக் கோட்டையாக எழும்பி கம்பீரமாக நிற்கிறது.

**எடப்பாடி K. பழனிசாமி**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை